Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 99 • 02.07.2017

இலங்கையின் முதல் தர தமிழ் வார இதழில் உங்கள் வணிக விளம்பரங்கள் நியாயமான விலைகளில் இடம்பெற வேண்டுமா



உடனே அழையுங்கள்

076 82 555 67 / 60

தீபம் எப்பொழுதும் உங்களுக்கான தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்

## வீதிக்கு வந்த வவுனியா பாடசாலை மோதல்

## கொலையில் முடிந்த காதல்



# நிழல் முதல்வர்!

## வடக்கை கட்டுப்படுத்தும் நிழல் மனிதன்



**Harry Hotel**

சைவ,அசைவ உணவு வகைகள் இந்தியன் சைனிஸ் உணவு வகைகள் சிற்றுண்டி வகைகள் இவை அனைத்தையும் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் சுவைத்து மகிழ்திடவும் விசேட தினங்களுக்கு ஓடர் மூலம் உணவு வகைகளை பெற்றிட

**Harry Hotel**

328,பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

0094779901340, 0212217819



# நல்லூர் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.



இல 303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

வி.ஜெயந்தி

தொலைபேசி: 077 973 3183, 021 227 1468



# அகரன் புத்தகசாலை

கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக

அனைத்து வகையான நூல்கள், பத்திரிகைகள் மற்றும் பாடசாலை, அலுவலக உபகரணங்களையும் பெற்று கொள்ள

அகரன் புத்தகசாலை, கிளிநொச்சி

# Spoken English
## புதிய பிரிவுகள் ஆரம்பம்

weekdays -2017.06.26, Week ends -25 Duration 3 months



IELTS, IELTS A1, B1 கற்பித்தலில் வடமாகாணத்தில் புகழ் பூத்த கல்வி நிறுவனம். ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம். கடந்த 7 வருட காலமாக யாழ் மண்ணின் பிரபல IELTS விரிவுரையாளர் MRS. R.ANUSHANTHY என்பவரால் Spoken English முன்னெடுக்கப்படும்.

உங்கள் பதிவு மற்றும் மேலதிக தகவல்களுக்கு

077 13 633 89 , 076 41 90 327

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
தினேஸ் பேக்கரியின் மேல்புறம்
PH NUMBER : 021 753 8395

# Jaffna
## Rent a car

வாருங்கள் தருகிறோம்
நீங்களே ஓட்டிச் செல்லலாம்



Point Pedro Road, Nallur, Kalviyankadu.
021 222 3339, 0777 484820



# TOPAZ
No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items

TOPZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645

TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com

TOPZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933

# நிழல் முதல்வர்!

## வடக்கை கட்டுப்படுத்தும் நிழல் மனிதன்

அன்ரனி பாலசிங்கம்

வடக்கின் முதலமைச்சர் யார்? இப்படியொரு கேள்வியை உங்களிடம் கேட்டால், கேட்டவரை ஒரு மாதிரி பார்ப்பீர்கள். தாடி வைத்த "தேசியத்தலைவர்" விக்னேஸ்வரனை தெரியாதவர்கள் தமிழர்களாகவே இருக்க லாயக்கற்றவர்கள் என்பதை போல பார்ப்பீர்கள்.

ஆனால், வடமாகாண அதிகாரிகள் அண்மைநாட்களாக இந்தக் கேள்வியுடன்தான் தலையை பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள். வடக்கின் உண்மையான முதல்வர் யார் என்பதை காட்டுங்கப்பா என்று அழாத குறையாக அலைகிறார்கள்.

யார் நமது முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனா? நிமலன் கார்த்திகேயனா?. இப்படி தலையை பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வடமாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டை தொடர்ந்து எழுந்த குழப்பங்களை தொடர்ந்து வடமாகாண அரசியல், நிர்வாகத்திற்குள் நிமலன் கார்த்திகேயனின் தலையீடுகள் கணிசமாக அதிகரித்துவிட்டது. எல்லா அமைச்சுக்கள், எல்லா முவுகளிலும் அவரது தலையீடு இருக்கிறதென அதிகாரிகள் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த புலம்பல் முதல்வரிற்கு எதிரான அதிருப்தியாகவும் மாறிக் கொண்டிருக்கிறது.

நிமலன் கார்த்திகேயன் என்ற பெயரே முதல்வருடன் சர்ச்சைக்குரியதாக சுற்றிக் கொண்டிருக்கிறது. பல மாதங்களின் முன் தீபம் ஒரு ஆவணத்தை வெளியிட்டிருந்தது. ஐ.நா முகவரமைப்பு ஒன்று வடக்கில் மேற்கொள்ளவிருந்த அபிவிருத்தி திட்டம் ஒன்றுடன் தொடர்புபட்ட முதல்வரின் கடிதப்பரிமாற்றங்களை வெளியிட்டிருந்தோம். அந்த வேலைத்திட்டத்தில் நிமலன் கார்த்திகேயனும் இணைக்கப்பட வேண்டுமென முதல்வர் வலியுறுத்த, அதற்கு நடைமுறையில் இடமில்லையென ஐநா எகிற, இறுதியில் அந்த திட்டமே கைநழுவி சென்றது.

### யார் இந்த நிமலன் கார்த்திகேயன்?

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தூரத்து உறவினர் ஒருவரே இவர் என்கிறார்கள். அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்றவர். வடமாகாண முதல்வராக விக்னேஸ்வரன் பொறுப்பேற்ற சமயத்தில், தனது ஆலோசகராக நிமலனை அவுஸ்திரேலியாவில் இருந்து அழைத்திருந்தார்.

நிமலன் இலங்கையில் பணியாற்ற வசதியாக அவருக்கு இரட்டை குடியுரிமை வழங்குமாறு மகிந்த ராஜபக்சவிற்கு முதல்வர் கடிதம் எழுதியிருந்தார். அன்று நிமலனை சுற்றி ஆரம்பித்த சர்ச்சைதான் இன்று விஸ்பரூபம் எடுத்து நிற்கிறது.


அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்றவரான நிமலன் கார்த்திகேயன் தற்போது வடமாகாணசபையில் சம்பளம் பெறும் பணியாளர். முதல்வரால் நியமிக்கப்படகூடிய ஆளணியில் ஒருவர். முதல்வரின் ஆலோசகர் என்று குறிப்பிடப்படுகிறார். அவுஸ்திரேலிய குடிமகனான இவர், வேலை விண்ணப்ப விசா (work permite) பெற்று இலங்கையில் தங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

நிமலன் கார்த்திகேயன் முதல்வரின் ஆலோசகராக நியமிக்கப்பட்ட ஆரம்பத்தில் முதல்வரின் பின்னாலிருந்து காய்களை நகர்த்தும் ஒருவராகத்தான் இருந்தார். அரங்கிற்கு வராமல் முதல்வரின் முதுகின் பின்னால் மறைந்திருந்துதான் செயற்பட்டு கொண்டிருந்தார். அனேகமாக முதலீடுகளை வடக்கிற்கு கொண்டு வருவது, வடக்கிற்கு வரும் முதலீட்டாளர்களை கையாள்வதென்றுதான் ஆரம்ப பணிகள் இருந்தன.

வடமாகாண அமைச்சுக்களில் முதலமைச்சரின் அமைச்சுத்தான் குறட்டை விட்டு தூங்கிக்கொண்டிருக்கிறது என்பது ஊரறிந்தது. முதலமைச்சரிற்கு அமைச்சர்கள் அனுப்பும் கோவைகளே அங்கு சுற்றி, இங்குசுற்றி நீண்ட தாமதத்தின் பின்னர் தான் போய் சேரும். இதனால் சில அமைச்சர்கள் முக்கிய கோவைகளை தாங்களே எடுத்து சென்று முதல்வரின் கையில் கொடுத்த சம்பவங்களும் உண்டு. அதிகாரிகள் அலுவலகத்தில் பாய் போட்டு தூங்காத குறையாகத்தான் செயற்பட்டார்கள். இதனால் முதலமைச்சர் அமைச்சின் மீது கணிசமான விமர்சனங்கள் வரத் தொடங்கியது. விமர்சனங்கள் அதிகரிக்த் தொடங்கியதன் பின்னர், முதல்வர் செய்த அதிரடி காரியம் நிமலன் கார்த்திகேயனை அரங்கிற்குள் அழைத்து வந்தது.







இறங்கி விளையாடுங்கள் என முதல்வர் பச்சைக்கொடி காட்டியதன் பின்னர்தான் நிமலன் கார்த்திகேயன் அதிரடி காட்டத் தொடங்கினார். நிமலனின் அதிரடியால் அசந்து தூங்கிக்கொண்டிருந்த முதலமைச்சர் அமைச்சு மெல்ல அசையத் தொடங்கியது. கோமா நிலையில் இருந்த முதலமைச்சர் அமைச்சில் சின்ன அசைவாவது தெரிகிறதென்றால், அதற்கு நிமலன் கார்த்திகேயன்தான் காரணமென்கிறார்கள்.

### சர்வம் சிவம்

முதலமைச்சரே பச்சைக்கொடி காண்பித்த பின்னர் நிமலன் கார்த்திகேயன் கிட்டத்தட்ட ஒரு நிழல் முதல்வராகவே மாறிவிட்டார். எல்லா அமைச்சுக்களின் பணிகளையும் கண்காணிப்பது, ஆலோசனைகள் வழங்குவது என எல்லைகளை விரிக்க தொடங்கினார். அவரது நடவடிக்கைகளை முதல்வரும் அனுமதித்து கொண்டிருந்தார்.

நிர்வாக ஆலோசனைகளிற்கு அப்பால் முதல்வரிற்கு அரசியல் ஆலோசனைகளையும் வழங்குபவராக மாறிய பின்னர்தான் சிக்கல்கள் ஆரம்பித்துள்ளன. கடந்த ஆறு மாதங்களாக முதல்வரின் எல்லா நகர்வுகளின் பின்னாலும் நிமலன் கார்த்திகேயனின் ஆலோசனை உள்ளதாக கூறப்படுகிறது.

நிமலன் கார்த்திகேயனிடம் முதல்வர் நிர்வாகரீதியான ஆலோசனை பெறலாம், அரசியல் ஆலோசனைகள் பெறுவது தற்கொலைக்கு சமமானது என்ற அப்பிராயம் முதல்வரின் அணியில் உள்ள பலரதும் நிலைப்பாடு. இதனை முதல்வரிடம் பட்டும்படாமலும் சிலர் குறிப்பிட்டுமுள்ளனர். "அவர் வெறும் ஆலோசகர்தான். அவர் தனது ஆலோசனையை கூறுவார். சரியென்றுபடுவதை மட்டுமே செய்வேன்" இது நிமலன் பற்றி புகார் கூறுபவர்களிற்கு முதல்வர் சொல்லும் பதில்.

என்னதான் முதல்வர் சமாளித்தாலும், கிட்டத்தட்ட நிழல் முதல்வரை போல நிமலன் மாறிவிட்டார் என்பதே அதிகாரிகளின் விமர்சனம். கிட்டத்தட்ட Big boss ஐ போல அவர் செயற்படுகிறார் என அதிகாரிகள் முணுமுணுக்கிறார்கள். கண்காணிப்பு, கட்டளை என நிமலன் போடும் இரட்டை கொக்கிகளும் அதிகாரிகளுக்கு உவப்பாக இல்லை.

நிமலனின் ஆலோசனைப்படிதான் முதல்வர் இயங்குவார் என்றநிலை உருவான பின்னர்தான் அமைச்சர்கள் மீதான விசாணை, விசாரணைக்குழு எல்லாமே அமைக்கப்பட்டன. இந்த விவகாரம்தான் முதல்வரை பொறிக்குள் சிக்க வைத்தது. வடமாகாணசபைக்குள் குழப்பங்கள் ஏற்பட்டபோது, முதல்வரிற்கு ஆதரவாக ஒரு அணி உருவாகியது. அந்த அணியில் இருந்தவர்களே முதல்வரிற்கு நிமலன் அரசியல் ஆலோசனைகள் வழங்குவதை பார்த்து கொதித்திருக்கிறார்கள். நிமலனை அரசியல் பகுதிக்குள் அழைத்து வர வேண்டாம், நிர்வாக ஆலோசகராக மட்டும் வைத்திருங்கள் என அவர்கள் கேட்டுக்கொண்டபோதும், முதல்வர் அதை கருத்தில் கொள்ளவில்லை.

அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை வெளியாகி, அமைச்சர்கள் பதவிநீக்க சர்ச்சை ஏற்பட்ட பின்னர், நிமலன் கார்த்திகேயன்தான் முற்று முழுதாக அமைச்சுக்களை வழிநடத்துகிறார். முதல்வரின் நிழலாக மாறிவிட்டார் என்றும் சொல்லாம். அமைச்சுக்கள் செயலிழந்திருந்த நிலையில் நிமலன்தான் அவற்றை கண்காணித்து வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அமைச்சர்கள் பதவிநீக்கப்பட்ட பின்னர், அந்த அமைச்சுக்களின் பொறுப்பை நிமலன் கார்த்திகேயன்தான் கவனித்துக் கொண்டார். அமைச்சு செயலாளர்களை, உயரதிகாரிகளை அவர் அணுகிய விதத்தில் அதிருப்திகள் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

முதல்வர் தமிழரசுக்கட்சி சர்ச்சை ஏற்பட்ட பின்னர் சமரச முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் முதல்வரிடம் பேச்சுக்கு சென்றிருக்கிறார். அப்பொழுது அவர் முதலாவதாக வைத்த நிபந்தனை "நாங்கள் இருவரும் மட்டுமே இங்கிருக்க வேண்டும்"

தொடர்ச்சி 9-ம் பக்கம்...

# கல்வித்திணைக்கள காணியை தனியாருக்கு ஒப்படைக்க முயற்சி!

கிளிநொச்சி உதயநகர் மேற்கில் கல்வித் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியின் ஒரு பகுதியை தனியாருக்கு வழங்குவதற்கு முன்னாள் கல்வியமைச்சர் குருகுலராஜா தனது பதவிக்காலத்தில் முயற்சித்த விவகாரம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. உதயநகர் மேற்கில் அமைந்துள்ள ஐந்து ஏக்கர் காணியையே இவ்வாறு தனியாருக்கு வழங்க முயற்சிக்கப்பட்டுள்ளது. எனினும் கிராம மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதால் காணி விவகாரம் இழுபறியில் இருந்து வருகிறது.

கிளிநொச்சி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயத்தில், புலிகளின் வணிக ஒன்றியத்தால் இந்த காணி கொள்வனவு செய்யப்பட்டது. வணிக ஒன்றியத்திற்காக இரண்டு மாடி கட்டிடமும் கட்டப்பட்டிருந்தது. கிளிநொச்சியை படையினர் கைப்பற்றிய பின்னர் இந்த கட்டிடத்தை படையினர் ஆக்கிரமித்திருந்தனர். பின்னர் படையினர் அங்கிருந்து வெளியேறிய பின்னர் கல்வித் திணைக்களத்திற்காக அந்த காணி ஒதுக்கப்பட்டது.

இல.162, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி என்ற முகவரியில் அமைந்துள்ள இந்த காணியில், ஒரு ஏக்கரை சொக்கலிங்கம் ஜெயராசா என்ற தனிநபர் உரிமைகோரியதாகவும், அவருக்கு ஒரு ஏக்கர் காணியை வழங்குமாறும் கரைச்சி பிரதேச செயலாளருக்கு வடமாகாண கல்வியமைச்சர் கடிதம் அனுப்பியிருந்தார். விடுதலைப்புலிகளின் வணிக ஒன்றியத்தின் பொறுப்பாளராக இருந்தவரே இந்த காணியை உரிமை கோரியிருந்தார். 2014.07.31, 2015.03.30ம் திகதிகளில் எழுதிய கடிதங்களிற்கு பிரதேசசெயலர் நடவடிக்கை எடுக்காததையடுத்து, 2016.01.27ம் திகதி தற்போதைய நிலவரத்தை அறியத் தருமாறு கடிதம் மூலம் கல்வியமைச்சர் கோரியிருந்தார்.

அந்த காணியை கல்வித்திணைக் களத்திற்கு வழங்கி விட்டதால், காணியை அவர்கள் மீள ஒப்படைக்காத வரை தம்மால் எதுவும் செய்ய முடியாதென பிரதேசசெயலாளர் பதில் கடிதம் அனுப்பியிருக்கிறார். இதையடுத்து காணியை ஒப்படைக்குமாறு அப்போதைய கல்விப்பணிப்பாளர் முருகவேளிற்கு குருகுலராஜா பணிப்புரை விடுத்துள்ளார். இதையடுத்து கல்வித்திணைக்களம் ஐந்து ஏக்கர் காணியை மீள ஒப்படைத்துள்ளது.

இதன்பின்னர் ஜெயராசாவிற்கு அரை ஏக்கர் காணியும், கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய காணியில் குடியிருக்கும் 4 குடும்பங்களிற்கும் தலா இரண்டு பரப்பு வீதம் வழங்குமாறும் பிரதேசசெயலாளருக்கு 2016.04.28 திகதியிட்ட கடிதம் குருகுலராஜாவால் அனுப்பப்பட்டிருந்தது.

எனினும், பொதுதேவைக்கு ஒதுக்கப்பட்ட காணியை தனியாருக்கு வழங்க உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்த விவகாரம் இழுபறியில் இருந்து வருகிறது. கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் அத்துமீறி குடியிருக்கும் நான்கு குடும்பங்களிற்கும் மாற்றுகாணி கனகாம்பிகை பிரதேசத்தில் வழங்கப்பட்டபோதும், அங்கு செல்வதற்கு அவர்கள் மறுப்பு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவில் தற்போது எண்ணூறுக்கும் அதிக மாண்வர்கள் கல்வி கற்று வருகிறார்கள். உதயநகர் பிரதேசத்தில் இருந்து முன்னூறுக்கும் அதிக மாணவர்கள் இரண்டு பிரதான வீதிகளை குறுக்கறுத்து இங்கு கல்விகற்க செல்கிறார்கள். இந்த காணியில் ஆரம்ப பாடசாலை ஒன்றை அமைப்பதன் மூலம் தமது பிரதேச மாணவர்களிற்கு பாதுகாப்பான கல்வியை வழங்கலாமெனகிராம மக்கள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இது தொடர்பாக வடக்கு முதல்வரிற்கும் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மனு அனுப்பியுள்ளனர்.

# பௌத்த முன்னுரிமையால் ஏனைய மதங்களிற்கு பிரச்சனையில்லை!

புதிய அரசியலமைப்பில் மதங்களிற்கிடையில் சமத்துவம் பேணப்படும் விதமான ஏற்பாடுகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. பௌத்த மதத்திற்கு மட்டும் முன்னுரிமை என்பதுதான் தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடு. புதிய அரசியலமைப்பில் இதை மாற்ற வேண்டும் என்பதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு விடாப்பிடியாக இருந்தது.

புதிய அரசியலமைப்பு உருவாக்க வழிநடத்தல் குழுவிலிருந்த சில உறுப்பினர்கள், பௌத்த மதத்திற்கு முன்னுரிமையளிக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்ததால், இறுதித்தீர்வு எட்டப்படுவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. எனினும், தற்போது இதில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளப்பட்டு, சம சமத்துவத்தை உறுதி செய்யும் விதமான வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

பௌத்தமதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் அதேவேளையில், இந்த முன்னுரிமை ஏனைய மதங்கள் புறக்கணிக்கபடாமல் இருக்க அல்லது ஏனைய மதத்தினர் புறக்கணிக்கப்படுவதாக உணராமல் இருக்கும் விதமான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக வழிநடத்தல் குழுவின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

# பாடசாலை மாணவிக்கு பிரசவம்!

பதின்மூன்று வயது சிறுமியொருவர் குழந்தை பிரசவித்த அதிர்ச்சி சம்பவம் அவிசாவளையில் நடந்துள்ளது. எனினும், பிறந்த சிறிதுநேரத்திலேயே குழந்தை உயிரிழந்து விட்டது. கடந்த வாரம் இந்த சம்பவம் நடந்தது.

தரம் ஏழில் கல்வி இந்த மாணவி கற்றுவருகிறார். மாணவியின் நண்பியின் காதலன் என கூறப்படும் வாலிபருடன் ஏற்பட்ட நெருக்கத்தைபடுத்தேகுழந்தையை பிரசவித்துள்ளார். மாணவியை பலமுறை வாலிபர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளார்.

சிறுமியின் உடலில் ஏற்பட்ட மாற்றங்களையடுத்து தெரணியாகல சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, காவல்துறையில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. உடனடியாக சந்தேகநபர் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

இதற்கிடையில் மாணவி பிரவசத்திற்காக அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பிரசவத்தின் பின் குழந்தை இறந்துவிட்டது. மாணவி தற்போது சிகிச்சைபெற்று வருகிறார்.

# மனநிம்மதிக்கு மருதடிப்பிள்ளையார் போன விக்கி!

வடக்கு மாகாணசபையில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடிகள் சுமுகமாக தீர்க்கப்பட்டிருந்தன. பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய அரசியல் குழப்பத்தின்போது மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் திருப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இந்த கொந்தளிப்புக்களால் வடக்கு முதல்வர் அதிகம் களைப்படைந்திருக்கிறார். இதனால் மனஅமைதிக்காக அண்மையில் மானிப்பாய் மருதடி பிள்ளையார் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார் முதல்வர்.

ஆலயத்தில் நீண்டநேரம் முதல்வர் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார். இதன்பின் சிரித்த முகத்துடன் அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளார். முதல்வரின் தனிப்பட்ட பாதுகாவலர்கள் மட்டுமே உடனிருந்தனர்.

இதேவேளை, வடமாகாண சர்ச்சைகள் ஓய்ந்ததன் பின்னர் யாழிலுள்ள இந்திய துணை தூதர் முதல்வரை சந்தித்து பேசியிருக்கிறார். முதல்வரின் வீட்டில் இந்த சந்திப்பு நடந்துள்ளது. இந்த சந்திப்புக்களில் பேசப்பட்டது என்னவென்பது பற்றிய தகவல்கள் வெளிவரவில்லை. இதற்கு மறுநாள் முதலமைச்சரின் ஆலோசகர் நிமலன் கார்த்திகேயன் யாழிலுள்ள இந்திய துணைத்தூதரகத்திற்கு சென்று பேச்சில் ஈடுபட்டார். தமிழரசுக்கட்சியுடன் மோதல் போக்கை கடைப்பிடிக்காமல் இணக்கமான போக்கை வெளிப்படுத்தும்படி இந்திய துணைதூதர் ஆலோசனை வழங்கியதாக கூறப்படுகிறது.

# பதவிநீக்கப்பட்டவர்கள் குற்றமற்றவர்களாம்!

வடக்கின் புதிய அமைச்சர்கள் இருவரின் பதவிப்பிரமாணத்திற்கு முன்னதாக முதல்வர் வீட்டில் ஒரு கலந்துரையாடல் நடந்தது. முதல்வரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட சமயத்தில், முதல்வரிற்கு ஆதரவாக கையொப்பமிட்ட உறுப்பினர்கள் இந்த கலந்துரையாடலில் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட உறுப்பினர் ஒருவர், குற்றம்சாட்டப்பட்ட அமைச்சர்கள் மேல்முறையீடு செய்ய, அல்லது விசாரணைக்குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்ய வழியேற்படுத்தப்பட வேண்டும் என கூறினார். மோசடியில் ஈடுபட்டவர்கள் என்ற அவப்பெயர் நீக்கப்படும்வரை அவர்களால் பொதுவாழ்வில் ஈடுபடுவதில் சிரமங்கள் இருக்கு மென்பதையும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த முதல்வர், விசாரணைக்குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்யவுள்ளதாக குறிப்பிட்டார். அத்துடன், குற்றம்சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகள் என்பது மக்களிற்கு தெரியும் தானே, எதற்காக கவலைப்படுகிறீர்கள் என பதில் கேள்வி கேட்டுள்ளார். குற்றமற்றவர்களை எதற்காக பதவிநீக்கினீர்கள் என அந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களும் திருப்பி கேள்விகேட்கவில்லை.

# கோத்தா செய்யவில்லையாம்; மைத்திரிதான் செய்கிறாராம்!

ஞானசார தேரரை பாதுகாப்பதற்கு மைத்திரிபால அரசு முயற்சிப்பதாக ஒன்றிணைந்த எதிரணி குற்றம்சாட்டியுள்ளது. நீதியமைச்சரின் மூலம் ஞானசாரரரை பாதுகாப்பது கோத்தபாய ராஜபக்ச என சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என நிராகரித்துள்ள ஒன்றிணைந்த எதிரணியினர், ஞானசாரரை பாதுகாப்பதில் அரசின் அனுசரணை உள்ளதாக குற்றம்சுமத்தியுள்ளது.

ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவர் உலப்பனே சுமங்கள தேரர், கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரியின் வெற்றிக்காக கடுமையாக உழைத்திருந்தார். மைத்திரியின் ஆலோசகர் போன்று மிக நெருக்கமாக செயற்படும் இவர், ஞானசாரரை விடுவிப்பதற்காக களமிறங்கியிருந்தார். இதன்மூலம் ஞானசாரர் விவகாரத்தில் அரசாங்கத்தின் அக்கறையை புரிந்துகொள்ளலாம் என ஒன்றிணைந்த எதிரணி குறிப்பிட்டுள்ளது.

ஞானசாரரின் விடுதலைக்காக சுமங்கள தேரர் நீதிமன்றம் வரை வந்தது. வரலாற்றிலேயே இல்லாத வகையில் மிக வேகமான பிணை வழங்கப்பட்டது போன்றவை மக்கள் மத்தியில் சந்தேகத்தை வலுவடைய வைத்துள்ளதாக ஒன்றிணைந்த எதிரணி குறிப்பிட்டுள்ளது.



# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர் (கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)

ஆசிரியர்பீடம்: 0768255562 விளம்பரம்: 0768255560, 0768255567

செய்திகளிற்கு: deepamdesk@gmail.com செய்திகளை அறிந்திட: deepamnews.lk


## பந்து அங்கேயே இருக்கட்டும்!

புதிய அரசயல் யாப்பு உருவாக்க பணிகளில் புதிய நம்பிக்கை கீற்றுக்கள் தென்பட தொடங்கியுள்ளன. தேசிய அரசின் இரண்டு பிரதான கட்சிகளும் மாறான அபிப்பிராயங்களுடன் இருந்ததால், யாப்பு உருவாக்கத்தில் இருந்து வந்த இழுபறிகள் இல்லாமல் போவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளாக இரா.சம்பந்தனும், சுமந்திரனும் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபாலவை சந்தித்து பேசிய சமயத்தில், இந்த தடைக்கல்கள் அகற்றப்பட்டுள்ளன.

அரசியல் யாப்பு உருவாக்க பணிகள் ஆரம்பித்து பல மாதங்களாகி விட்டன. யாப்பு உருவாக்கத்தின் குறிப்பிடத்தக்க பணிகள் முடிவடைந்திருந்த போதும், இரண்டு பெரும்பான்மை கட்சிகளிற்கிடையிலான இழுபறியால், வழிநடத்தல் குழுவின் இறுதி அறிக்கை வெளியாவதில், வரைவு வெளியாவதில் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் சுபாவம், மத முன்னுரிமை, ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு உள்ளிட்ட விவகாரங்களில் ஒருமித்த கருத்து இருக்கவில்லை. தேர்தல் சமயத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கு மாறான நிலைப்பாட்டிற்கு செல்ல வேண்டிய நெருக்கடி நிலைமை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஏற்பட்டது. இதனால் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பிற்கு சுதந்திரக்கட்சி உடனடியாக தயாரில்லாத நிலைமையில் இருக்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை கைவிட்டால், கட்சிக்குள் இருக்கும் அதிருப்தியாளர்களை கட்டுப்படுத்த முடியாது, கட்சிக்கட்டுப்பாடு கை நழுவிச் சென்றுவிடும் என ஜனாதிபதி நினைக்கிறார். அதுபோல, அதிகார பரவலாக்கலில் சிங்கள இனவாத மனங்களை அதிருப்தியடைய வைப்பது, கட்சிக்குள்ளேயே எதிரணியை பலப்படுத்துவதாக அமைந்துவிடுமென்ற நெருக்கடியையும் எதிர்கொள்கிறார். இதனால்தான் இலங்கையின் சுபாவம் ஒற்றையாட்சியென்பதில் மாற்றம் நிகழக்கூடாதென்பதில் சுதந்திரக்கட்சிக்காரர்கள் விடாப்பிடியாக இருந்தனர்.

இப்பொழுது அதிகார பரவலாக்களில் விடாப்பிடி நிலைப்பாடுகளை சுதந்திரக்கட்சி தளர்த்திக் கொண்டுள்ளது. இதுவொரு பிரகாசமான சந்தர்ப்பம். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இரண்டு பிரதான கட்சிகளும் தமிழர் விவகாரத்தில் ஒருமித்த நிலைப்பாட்டிற்கு வந்த அரிதான சந்தர்ப்பம் இது. 1957 இல் பண்டா செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.ஆர்.ஜெயவர்த்தன பாதயாத்திரை சென்றது முதல், சந்திரிகாவின் தீர்வுப்பொதிக்கு எதிரான ஐதேகவின் நகர்வுகள் வரையான சம்பவங்களால் ஆனதே நமது வரலாறு.

இலங்கையின் புதிய ஆட்சிமாற்ற சூழ்நிலையால் ஏற்பட்டுள்ள அரிதான சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டிய பொறுப்புணர்வு தமிழர் தரப்பிற்கும் அவசியம். சிங்கள ஆட்சியாளர்கள் தரவில்லை, தர மனமில்லையென்ற வழக்கமான பாணி பேச்சுக்களால் சுயதிருப்திப்பட்டு கொள்வது முட்டாள்தனமானது. நமது சந்ததிக்கு செய்யும் துரோகமாகவும் அமையும்.

இனப்பிரச்சனை தீர்விற்கு வாய்ப்பாக தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள சூழலை சமயோசிதமாக பயன்படுத்திக் கொள்வதிலேயே நமது அரசியல் வெற்றி தங்கியுள்ளது. சிங்களவர்கள் எதையும் தர தயாராக இல்லையென்ற செய்தியை தலைமுறைகளிற்கு கடத்திக்கொண்டிருப்பது வெற்றியல்ல. அரசியல் சூழலை சரியாக கையாண்டு, அரசியல் இலக்குகளை அடைவதே உண்மையான வெற்றி.

அப்படியான வெற்றியை பெற்றுக்கொள்ளும் நிலையில் தற்போதைய தமிழ் அரசியல் இருக்கிறதா என்பதே பெரிய கேள்வி.

தமிழ் அரசியலில் முன்னர் இருந்த தியாகி, துரோகி சமன்பாடு இலகுவானது. அரசுடன் இருப்பவர்கள் துரோகிகள். எதிர்ப்பவர்கள் தியாகிகள். ஆனால் இப்பொழுது சமன்பாட்டு சூத்திரம் மிக சிக்கலாகி விட்டது. யார் தியாகி, யார் துரோகி என்பதை அடையாளம் காண முடிவதில்லை என்பதுடன், இந்த அடையாளங்களை யார் சுமத்துகிறார்கள் என்பதே தெரியாமல் போய்விட்டது. பிடிக்காத ஒருவரை யாரும் துரோகியாக்கலாம். ஒரு துரும்பை கூட தூக்கிப்போடாத யாருமே நொடியில் தியாகியாகலாம். இதுதான் இன்றைய தமிழ் அரசியல். இதைவிட வேடிக்கை, ஒரு கட்சிக்குள்ளேயே தியாகிகளும் இருக்கிறார்கள், துரோகிகளும் இருக்கிறார்கள்.

வடக்கு அரசியல் களத்தில் அண்மையில் இந்த தியாகி, துரோகி அடையாளங்கள் மேலோங்கி வருகிறது. இந்த அடையாள அரசியல் தமிழர்களிற்கு நல்லதல்ல. அது தமிழர்களை கூறுபோடும்.

தமிழ்தேசிய அரசியலில் இன்று இரண்டு முனைகள் ஏற்பட்டுள்ளன. தமிழரசுக்கட்சி முனை ஒன்று, வடமாகாண முதலமைச்சரை முன்னிறுத்திய முனை ஒன்று என்ற இரண்டு முனைகளுமே ஒரே கட்சியிலிருந்து எழுந்தவை. தமிழர்களின் அரசியல் விவகாரங்களை கூட்டமைப்பின் உயர்மட்ட குழுவும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கவனிப்பார்கள், வடமாகாணசபை மக்கள் நிர்வாகத்தை கவனிக்கும் என்றுதான் கூட்டமைப்பு ஆரம்பத்தில் சொன்னது. ஆனால் இன்று, அந்த நிலைமாறி இரண்டு அரசியல் முனைகள் ஏற்பட்டுள்ளன. மறுவளமாக, அன்றாட நிர்வாகத்தை கவனிக்க யாருமில்லை.

இரண்டும் வேறுவேறு முனைகளை கொண்ட அரசியல் துருவங்களாக மாறி வருவது தமிழர்களின் அரசியலிற்கு நல்லதல்ல. இதுவே, தீர்வு முயற்சிகளை சீரழிக்கலாம். யாப்பு உருவாக்க பணிகளின் இறுதிக்கட்டத்தில் நிற்கிறோம். நமது உள்ளக முரண்கள், பந்தை எமது கைகளில் எதிராளிகள் தட்டிவிடும் சந்தர்ப்பத்தை நிச்சயம் ஏற்படுத்தும். எனவே, இப்பொழுது மக்கள் பிரதிநிதிகளினதும், கட்சிகளினதும் அவசியமான பணி தமிழ் தேசிய கூட்டமைப்பாக ஒன்றுபடுவதே!

### பா.டெனீஸ்வரன்
### போக்குவரத்து அமைச்சர், வடக்கு



என் மீதான விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவேன். விசாரணைக்காக நான் விடுமுறையில் செல்லக்கூட தயாராக இருக்கிறேன். ஆனால் சுயமான சட்டவலுவுள்ள விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டும் என்று கூறிவருகின்றேன். முதலமைச்சர் இதுவரை அதை செய்யவில்லை. சட்டவலுவுள்ள விசாரணைக் குழவை நியமிக்க முதலமைச்சர் ஏன் தயங்குகின்றார் என்று தெரியவில்லை. முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு சட்டவலுவற்ற விசாரணைக்குழுவாகும். சட்டவலுவற்றவிசாரணைக் குழுவின் அறிக்கை மூலம் இரு அமைச்சர்களை முதலமைச்சர் வெளியேற்றியது பிழையாகும். இதனால் வடமாகாணசபையே குழம்பிப்போய் உள்ளது. புதிய இரு அமைச்சர் தெரிவில் கூட முதலமைச்சர் தனக்கு ஆதரவாக நின்றவர்களை மட்டும் அழைத்துள்ளார். வடமாகாணசபை உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்திருக்க வேண்டும். ஆனால் அதனை அவர் செய்யவில்லை. முதலமைச்சரின் இந்த நடவடிக்கையைப் பார்க்கும்போது வடமாகாணசபை எங்கே போய் முடியப் போகுதோ தெரியவில்லை என்ற பயம்தான் ஏற்படுகிறது.



### தர்மலிங்கம் சித்தார்த்தன்
### தலைவர், புளொட்

வடமாகாண அமைச்சர்களை நியமிக்கும்போது

தமிழ்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள், மாவட்டங்களின் பிரதிநிதித்துவத்தை கட்டாயம் கணக்கிலெடுக்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து எந்த உறுப்பினரும் அமைச்சராகவில்லை. இம்முறை வழங்கப்பட்ட நியமனமும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவருக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது. முதல்வர், கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என யாழ்ப்பாணத்தில் அதிக பிரதிநிதித்துவம் உள்ளது. மாகாணசபையிலேயே முதல்வர் உள்ளிட்ட மூன்று அமைச்சர்கள் இருக்கிறார்கள். முல்லைத்தீவை தொடர்ந்து புறக்கணிப்பது அந்த மாவட்ட மக்களிற்கு மனக்குறையை ஏற்படுத்துமென்றுதான் நினைக்கிறேன். மாகாணசபையில் ஏழு பதவிகள் இருந்தபோதும் எமது கட்சிக்கு ஒன்றைக்கூட இதுவரை தரவில்லை. தனிப்பட்ட ரீதியில் எனக்கு இதில் எந்த வருத்தமுமில்லை. ஆனால் கட்சி அங்கத்தவர்கள் மத்தியில் அதிருப்தி நிச்சயமாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் பதவிகள் எல்லாவற்றையும் விட, கூட்டமைப்பின் ஒற்றுமைதான் முக்கியம்.

### எம்.ஏ.சுமந்திரன் பேச்சாளர்,
### தமிழ்தேசிய கூட்டமைப்பு



"மக்கள் என்னோடு இருக்கிறார்கள், மக்கள் பலத்தை அறிந்து கொண்டேன். மக்கள் பலம் கட்சியோடு இல்லை" என்பதைபோல வடக்கு முதல்வர் சூட்சுமமாக சில கருத்துக்களை சொல்லியிருக்கலாம். இது ஆரோக்கியமான கருத்துக்கள் இல்லை. நடந்து முடிந்த மாகாணசபை பிரச்சனைகளை தீர்த்து வைப்பதென்றால், சரியான முறையில்தீர்த்து வைப்பதை போல நடந்து கொள்ள வேண்டும். ஆனால் அதைவிடுத்து நன்றி சொல்லுகிறேன் என்ற பாணியில் வேற்றுமைகளை காண்பிப்பதும், குற்றம்சாட்டுவதும், நந்தவனத்து ஆண்டிகள் என நையாண்டி செய்வதும் முதலமைச்சருக்கு அழகான செயலாக எனக்கு தெரியவில்லை. இறுதியாக நடந்ததும் அப்படியானதுதான். அமைச்சு பதவிக்கு உங்கள் சிபாரிசை தாருங்கள் என தமிழரசுக்கட்சியிடம் கேட்டார். கட்சி ஒரு சிபாரிசை செய்தபின், கட்சியால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்ட ஒருவருக்கு அமைச்சு பதவியை கொடுத்துள்ளார். இது மீண்டும் பிரச்சனையை வளர்க்கிற செயற்பாடு. அவரது வீடுள்ள கோவில் வீதி ஒடுக்கமானது. அதில் நூறு பேர் நின்றாலே பெரிய சனத்திரளாகத்தான் தெரியும். அதை கண்டுவிட்டு தனக்கு மக்கள் சக்தி இருப்பதாக அவர் நினைப்பாராக இருந்தால், பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவருக்கு சவால் விட்டதைபோல, மாகாணசபையை கலைத்து விட்டு தேர்தலை நடத்திப்பார்க்கட்டும். மக்கள் யாருடன் நிற்பார்கள் என்பது தெரியவரும்.



# என்ன செய்தார்கள் நமது பிரதிநிதிகள்?

## வடமாகாணசபை உறுப்பினர்களின் ஸ்கான் ரிப்போர்ட் 1


தீபம் குழு

யாழ்ப்பாணத்து வீதிகளில் "இனம் தெரியாத" ஆயுததாரிகள் கண்மூடித் தனமாக தமிழர்களை சுட்டுக்கொன்று கொண்டு திரிந்த காலகட்டம். மாலையானால் அமுலாகும் ஊரடங்கு அதிகாலையின் பின்னர்தான் விலகும். யாழ்ப்பாண பத்திரிகைகளிற்கு சவாலான காலகட்டம் அது. பத்திரிகைகளை முடக்கும் நோக்கத்துடன் விநியோகஸ்தர்கள் மீது தாக்குதல், பத்திரிகைகளை எரித்தல் என பத்திரிகை விநியோகஸ்தர்களிற்கு உயிருக்கு உத்தரவாதமில்லாத காலகட்டம் அது.

யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகை யொன்றின் விநியோகப்பிரிவில் அப்பொழுது ஒரு இளைஞன் துடிப்பாக பணியாற்றிக்கொண்டிருந்தார். அதி காலை ஊரடங்கு விலக்கப்பட்டதும், பத்திரிகையுடன் புறப்பட்டார். யாழ்ப் பாணத்தின் புறநகரொன்றில் இனந் தெரியாத ஆயுததாரிகளிடம் சிக்கி, மயிரிழையில் உயிர்தப்பினார். அந்த பத்திரிகையில் சாதாரண ஊழியராக இணைந்து, விரைவில் பத்திரிகையின் நிர்வாகப்பகுதியை கட்டுப்படுத்தும் ஆளுமையாக வளர்ந்தார் அந்த இளைஞன்.

அவர்தான் சந்திரலிங்கம் சுகிர்தன்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை சுகிர்தனின் பிறப்பிடம். பல்கலைகழகத் திற்கு தெரிவாகி, பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றி, 2013 மாகாணசபை தேர்தலில் களமிறங்கினார். தேர்தல்களில் பரிச்சயமான முகமாக இல்லாமல் இருந்தபோதும் வெற்றிபெற்றார். வடமாகா ணசபையில் உள்ள உறுப்பினர்களில் தேர்தலில் வெற்றிபெற்ற வயதில் இளைய







நான்கு வயதை எட்டுகிறது வடமாகாணசபை. கூச்சல், குழப்பம், சச்சரவு என்று தொடங்கி இன்று எதிர்காலமே கேள்விக்குறியான நிலைமைக்கு வந்துள்ளது. வினைத்திறனின்மை, செயலற்ற பிரேரணைகள் என விமர்சனங்களால் மட்டுமே நிறைந்த மாகாணசபை. இந்த விமர்சனங்களிற்கு உறுப்பினர்கள் பொறுப்பில்லையா? நிச்சயமாக அவர்களும் பொறுப்பாளிகளே. கடந்த நான்கு வருடத்தில் எப்படி செயற்பட்டார்கள், அவர்களின் அரசியல் பாதை என எல்லாமும் கலந்த முழுமையான ஸ்கான் ரிப்போர்ட் இது.

உறுப்பினர் இவர்தான்.

வடமாகாணசபையிலுள்ள செயற்திறன் மிக்க உறுப்பினர்களில் சுகிர்தன் முதன்மையானவர் என்பதை பலரும் ஏற்றுக்கொள்கிறார்கள். தமது ஒதுக்கீட்டு நிதிகளை பகிர்ந்தளித்துவிட்டு, நிகழ்வு களில்கலந்துகொள்பவர்களாகவடமராட்சி யின் பெரும்பாலான மாகாணசபை உறுப்பினர்கள் இருக்க, கிடைத்த வாய்ப்பில் நன்றாக அடித்தாடிக் கொண்டிருக்கிறார் சுகிர்தன்.

அரசியல் நெளிவுசுளிவுகளும் இள வயதில் கைகூடிவர, கட்சிக்குள்ளும், மக்களிற்குள்ளும் தன்னை பலப்படுத்தி வருகிறார். மாகாணசபைக்குள் முதலமைச்சர் அணி, தமிழரசுக்கட்சி அணி என்ற பிளவு பலகாலமாக இருந்து வருகிறது. சில சமயங்களில் பரஸ்பரம் இரண்டு அணி உறுப்பினர்களும் முகத்தை திருப்பிக்கொண்டு செல்லும் சம்பவங்கள் எல்லாம் நடப்பதுண்டு. ஆனால் மாகாணசபையில் எல்லோருடனும் சுமுகமான உறவை பேணுவதில் சுகிர்தன் கவனம் செலுத்துகிறார்.

மக்கள் மத்தியிலும் அவர் பற்றிய எதிர்மறை அபிப்பிராயங்கள் இருக்க வில்லை. யாரும் எளிமையாக அணுகலாம், பிரச்சனைகளை அக்கறையுடன் கேட்டு நடவடிக்கை எடுக்கிறார் என்கிறார்கள் மக்கள். 2013இல் தேர்தல் அரசியலிற்கு வந்தாலும், எளிமையான, மக்களிற்குள் இறங்கி வேலை செய்யும் இயல்புகளால் வடமராட்சியில் நன்கு பரிச்சயமானவராகி விட்டார். வடமராட்சியிலிருந்து நேர்வான மாகாணசபை உறுப்பினர்களில் அதிகம் ஸ்கோர் செய்ததென்றால் சுகிர்தன்தான்.

வடமராட்சி கிழக்கில் நீண்டகாலமாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவந்தது. பல்வேறு காரணங்களால் அங்கு கடமைபுரிய ஆசிரியர்கள் தயக்கம்காட்டி னார்கள். இப்பொழுது ஆசிரியர் பற்றாக் குறை பெருமளவு தீர்த்துவைக்கப்பட்டு விட்டது. இதில் சுகிர்தனின் பங்கு பெரியதென்கிறார்கள் அங்குள்ள கல்வித் துறையினர்.

அரசசேவைக்கு ஆட்களை உள்ளீர்ப் பதற்கு பேணப்பட்ட வயதெல்லை பொருத்தமானதில்லையென்பது முழு இலங்கைக்குமான பிரச்சனையாகஇருந்தது. பல்கலைகழகங்களில் பட்டம்பெற்று வெளிவருபவர்களிற்குஉடனடியாகவேலை கிடைப்பதில்லை. பல்கலைகழகங்களிற்கு தகுதிபெறாதவர்களிற்கும் இதுதான் நிலை. காத்திருந்து வயது அதிகரித்தவர்களிற்கு, வயதெல்லை பிரச்சனையாகி அரசவேலை வாய்ப்பே கனவாகிவிடுகிறது. வடமாகாண சபைதான் முதலில் ஆட்களை உள்ளீர்ப் பதில் வயதெல்லையை அதிகரித்திருந்தது. இது தொடர்பான பிரேரணையை மாகாணசபையில் சமர்ப்பித்தது சுகிர்தன்.

வடக்கில் நடந்த மிகப்பெரிய ஊழல் மோசடிகளில் ஒன்றாக கருதப்படுகிறது நெல்சிப் ஊழல். தற்போது நிதிக்குற்றப் புலனாய்வு பிரிவின் விசாரணையில் இந்த விவகாரம் இருந்து வருகிறது. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை உள்ளூராட்சிமன்றங்களில் நடந்த மோசடிகளை அம்பலப்படுத்தியதன் மூலமே மொத்த ஊழலும் அம்பலமானது. சிவாஜிலிங்கம், சுகிர்தன் ஆகியோரே அந்த இரண்டு சபைகளின் ஊழலையும் அம்பலப்படுத்தியிருந்தனர்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களிற்கு நினைவுச்சின்னம் அமைப்பது பற்றி மாகாணசபையில் இப்பொழுது தீவிரமாக பேசப்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் முன்னோடியாக மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் படுகொலை நினைவுச்சின்னம் ஒன்று நாகர்கோவிலில் அமைக்கப்பட்டது. அந்தபாடசாலையின் மீது இலங்கை விமானப்படை நடத்திய தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களின் நினைவாக நினைவுச்சின்னம் ஒன்று அமைக்கப்பட்டது. இதை அமைத்ததில் சுகிர்தன்தான் முக்கிய பங்காற்றினார்.

மாகாணசபை அமர்வுகளில் அதிகம் பங்குபெறுவதுடன், விவாதங்களில் அதிகம் ஈடுபடுபவர்களில் சுகிர்தனும் ஒருவர். மாகாணத்தில் இடம்பெறும் அதிகார துஷ்பிரயோகத்திற்கு எதிராக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகிறார்.

சமூக ஊடகங்களில் தமிழரசுக்கட்சியின் சில நடவடிக்கைகள் கடுமையான விமர்சிக்கப்படுவதுண்டு. சமூக ஊடகங் களில் உள்ள கட்சி உறுப்பினர்களை பலவந்தமாக இழுத்துவைத்து கழுவி ஊற்றுவார்கள். சமூக ஊடகவாசிகளிடம் பிடிகொடுக்காமல் தற்போதைய தமிழரசுக்கட்சி அரசியலை செய்வது என்பது கயிற்றில் நடக்கும் வித்தையை போன்றது. தமிழரசுக்கட்சி மாகாணசபை உறுப்பினர்களில் அதை வெற்றிகரமாக செய்வது சுகிர்தன்தான்.

அண்மையில் வடமாகாணசபையில் ஏற்பட்ட சர்ச்சையை தொடர்ந்து பல உறுப்பினர்கள் தமது பிரதேசங்களிற்கு, அலுவலகங்களிற்கு செல்லாமல் தவிர்த்து வந்தனர். மக்களின் அபிப்பிராயம் எப்படி யிருக்குமென்பதை எதிர்கொள்வதில் தயக்கமிருந்திருக்கலாம். எனினும், சுகிர்தன் அரசியல் கொந்தளிப்பிற்குமிடையில் வடமராட்சியில் இளைஞர்களை சந்தித்து, மக்களின் அபிப்பிராயங்களை கேட்டி ருந்தார். பொதுமக்களின் அப்பிராயங்களை கேட்பதில் அதிக அக்கறை காண்பிக் கிறார் என்கிறார்கள் அங்குள்ள இளைஞர்கள்.

வடக்கு மாகாணசபை சர்ச்சையில் சுகிர்தனின் நிலைப்பாடு தொடர்பாக இரண்டுவிதமான அபிப்பிராயமும் பிரதேச மக்களிடம் இருப்பதை அவதானிக்க முடிகிறது. சமூக ஊடகங்களிலும் அது எதிரொலித்தது. இதை தவிர்த்தால், வடமராட்சியில் சுகிர்தன் தொடர்பான சாதகமான அபிப்பிராயமே உள்ளது. எல்லா மக்கள் பிரதிநிதிகளிற்கும் கிடைக்காத வாய்ப்பிது!

# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்



மாலினி (வயது 22)
வவுனியா

**கேள்வி: உயர்தரம் படித்துக் கொண்டு உள்ளேன். எனது சந்தேகம் என்னவென்றால், உடலுறவில் ஈடுபட்டால் பெண்களின் அழகு வசீகரம் அதிகரிக்கும் என்று என் சகதோழிகள் கூறுகிறார்கள். இதுஉண்மையா?**

*பதில்: மகளே சில மாதங்களுக்கு முன்னர் இதே போன்ற அழகு சம்பந்தப்பட்ட கேள்வி ஒன்றை ஒரு பெண்மணி கேட்டிருந்தார். அதற்கான பதிலும் நான் கூறியுள்ளேன். அழகு என்பது தனியே புறத்தோற்றத்தில் மட்டுமல்ல ஒவ்வொருவரின் அழகுணர்ச்சி என்பது அவரவர் மனதைப் பொறுத்தது. இருந்தாலும் உங்களது கேள்விக்கான பதில் என்னவென்றால் உண்மையில் திருமணமாகி புது மாப்பிள்ளையுடன் புதிதாக குடும்பவாழ்வில் ஈடுபடும் பெண்ணைப் பொறுத்தவரை உடலுறவு என்பது ஒரு புதிய சுக அனுபவமே. அந்த சுக அனுபவம் ஒரு பேரின்பத்தைத் தரக்கூடிய ஒன்றே. இந்த மனமகிழ்வு, மனத்திருப்தி மற்றும் புதுமாப்பிள்ளையின் உயர் அன்பும் பகிர்வும் கவனிப்பும் புகுந்த வீட்டாரின் அன்பும் கவனிப்பும் வேளாவேளைக்கு கிடைக்கும் உணவு விருந்தும் சிற்றுண்டிகள் அழகுக் கவனிப்புகள் ஆடை அலங்காரங்கள் என கவனிப்புகள் காரணமாக அப் பெண் உடலமைப்பில் சற்று குளுகுளு தெரியத்தான் செய்யும்.*

*உண்மையில் உணவுப்பசி, உடற்பசி, தசைப்பசி, நகைப்பசி, ஆடைப்பசி போன்ற அனைத்துப் பசியிலும் தாராளமாக தீர்க்கப்படும் நிலையில் (உண்மையில் இவை எல்லாமே மனப்பசியே என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்) அப்பெண் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கேற்ப சற்று அழகு அதிகமாகத்தான் தெரிவாள்.*

*ஆனால் திருமணமாகி புதுவீட்டிற்குப் போன பெண்ணிற்கு தாம்பத்தியம் மட்டும் கணவனால் கிடைக்கிறது. ஆனால் புகுந்த வீட்டில் உள்ளோர் எவரும் சரியில்லை, கவனிப்பும் சரியில்லை, பொருளாதாரமும் சிக்கல் சாப்பாடும் சரியில்லை மொத்தத்தில் மனமே சரியில்லை. ஆனால் அந்தப் பெண் தினசரி புதுமாப்பிள்ளையுடன் உடலுறவு கொள்கிறார். என்ன நடக்கும்? கொஞ்ச நாளில் 'கிளியைப் பிடித்து குரங்கின் கையில் கொடுத்த' கதையாகவோ அல்லது 'குமர் முற்றி குரங்கான' கதையாகவோதான் இருக்கும்.*

*நீர் சொல்லுவதுபோல் பார்த்தால் பாலியல் தொழில் செய்யும் பெண்கள் எல்லாம் பேரழகிகள் ஆக அல்லவா இருக்கவேண்டும். ஆனால் அவர்களில் 95 வீதமானவர்கள் அரிதாரம் பூசாவிட்டால் மிகவும் குறைந்தளவு அழகாகவே இருப்பார்கள்.*

*எனவே உடலுறவு கொள்வதால் மட்டும் உடலழகு அதிகரிக்கும் என்பது பொதுப்பட ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தல்ல. மாறாக அழகு என்பது மனத்திருப்தி, மனமகிழ்வு, மனச்சந்தோசம் என்பவற்றின் வெளிப்பாடு. உடலமைப்பின் ஊடாக வெளிப்படுகிறது என்பதே உண்மையாகும்.*

பெண் (வயது 45)
குஞ்சர்கடை

**கேள்வி: எனக்கு தற்போது தாம்பத்தியத்தில் நாட்டம் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆனால் எனது கணவருக்கு (என்னைவிட நான்கு வயது கூடியவர்) அது மிகவும் அதிகமாகவே உள்ளது. என்னால் கணவருக்கு சுகத்தை கொடுக்க முடியாமல் உள்ளது. என் கணவர் வேறு பெண்ணுடன் தொடர்பை ஏற்படுத்துகிறாரோ என நான் பயப்படுகிறேன். ஏனெனில் அவர் இப்போது இந்த விடயத்தில் பெரிதாகஅலட்டிக் கொள்வதில்லை. நான் என்னசெய்வது?**

*பதில்: அன்புச் சகோதரி! இது உங்கள் ஒருவருக்கான பிரச்சினை இல்லை. இலங்கை இந்தியா போன்ற இந்து நாகாறிகத்தைப் பின்பற்றுகின்ற கோடிக் கணக்கான பெண்களின் பிரச்சினை. எமது பிரதேசத்தில் உங்களின் பிரச்சினைபோல் ஏராளமான பெண்கள் உள்ளனர். உண்மையில் இந்தப் பிரச்சினையில் உடலியல் உளவியல் சமூகவியல் ஆண்மீகம் சார்ந்த ஏராளமான விடயங்கள் பங்களிப்புச் செய்கின்றன.*

*உங்களின் வயது மாதவிடாய் (மானோபோஸ்) நிற்கின்ற வயது. இந்த வயதில் உடலில் ஏற்படுகின்ற சில ஓமோன்களின் சுரப்புகளின் சமமின்மை காரணமாக தாம்பத்திய உறவில் சில சிக்கல்கள் ஏற்படுவதுண்டு. குறிப்பாக உராய்வு நீக்கித் திரவங்களின் குறைபாடு காரணமாக உடலுறவில்வலிவேதனையோ அல்லது எரிச்சல் ஏற்படலாம். இதனால் இதில் வெறுப்பு மனநிலை ஏற்படலாம். அது மட்டுமல்லாமல் உறவில் ஆர்வத்தைத் தூண்டும் ஓமோன்களின் உற்பத்திக் குறைவு காரணமாக ஆர்வமின்மை ஏற்படலாம். மற்றும் உங்களின் வயது உங்களுக்கு பிள்ளைகள் இருந்தால் அவர்களின் வயதுகள் காரணமாக நீங்கள் உங்களை வயதான பெண்மணியாக (முதியோராக) எண்ணும் மனப்பாங்கு காரணமாக உளவியல் ரீதியாக ஒதுங்கும் மனப்பாங்கு அல்லது குற்றஉணர்வு, வெட்கஉணர்வு, உடலுறவில் பின்வாங்கும் மனப்பாங்கு ஏற்படலாம்.*

*அதுமட்டுமல்லாமல் சமூகவியல் பண்புகளின் படி இந்த வயதில் உடலுறவு கொள்வது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல என்னும் சமூக மனப்பாங்கு. இது ஒருபொறுப்பற்ற செயல், பிள்ளைகள் வாழ வேண்டியவயதில் இவர்களுக்கு இது தேவைதானா? என பிள்ளைகளே பேசுவார்கள் எனும் பயம்.*

*ஏன் உங்களில் சமய ஆன்மீக நம்பிக்கைகள், அது தொடர்பான உங்களின் செயற்பாடுகள் பயிற்சிகள் (விரதம் இருத்தல் பூசை புனஸ்காரங்களில் ஈடுபடல்) போன்ற சிலபல காரணங்களும் உடலுறவுக்கு ஒவ்வாமை மனப்பாங்கை உங்களிடம் ஏற்படுத்தி இருக்கலாம்.*


*எனவே உங்களுக்கு நான் கூறக்கூடியதெல்லாம் உங்களைவிட நான்கு வயது கூடிய உங்கள் கணவர் இன்னும் இளமை உணர்வுடன் வாழ ஆசைப்படும் போது நீங்கள் ஏன் வயதானவராய் உணர வேண்டும். மேற்கத்தைய நாடுகளில் 50 வயதுகளின் பின்னர் தான் தாம்பத்திய உறவுகள் அதிகமாகஉள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. உங்களுக்கு உடலுறவில் நாட்டமில்லை என்று கூறுவதற்கான காரணங்களைத் தெரிந்தபின் ஏன் தயக்கம்? அவற்றை பக்குவமாக ஒரு மூடையில் கட்டி தூர வையுங்கள். இன்னும் 10 அல்லது 15 வருடங்களின் பின் வேண்டும் என்றால் எடுக்கலாம்.*

*உங்கள் கணவருடன் மனம் விட்டுப் பேசுங்கள் அவரின் மீது உங்களின் அன்பையும் ஆசைகளையும் வெளிப்படுத்துங்கள். ஏனெனில் உங்களின் கணவர் வேறு ஒரு பெண்ணை நாட இடம் கொடுக்காதீர்கள். பிறகேன் பயப்படுகிறீர்கள். உங்கள் வாழ்க்கை உங்களுக்கே. பயம் வேண்டாம். பதட்டம் வேண்டாம். வெட்கம் வேண்டாம். கவலை வேண்டாம். ஆண்டவன் உங்களை கோபிக்கமாட்டார். வாழ்க்கையைத் திட்டமிடுங்கள் இயற்கை இடம்கொடுக்கும் வரை உங்களுக்கு இடமுண்டு.*

**உங்கள் கணவருடன் மனம் விட்டுப் பேசுங்கள் அவரின் மீது உங்களின் அன்பையும் ஆசைகளையும் வெளிப்படுத்துங்கள். ஏனெனில் உங்களின் கணவர் வேறு ஒரு பெண்ணை நாட இடம் கொடுக்காதீர்கள். பிறகேன் பயப்படுகிறீர்கள். உங்கள் வாழ்க்கை உங்களுக்கே.**







# சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு வந்தால் தக்காளி சட்னி! மாவை சேனாதிராசாவுக்கு வந்தால் இரத்தம்..!!

**நம்மாழ்வார்**

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன் நாலாறு மாதமாய்க் குணவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி”

அண்மைய வடமாகாணசபை சர்ச்சைகளை அவதானித்து வருபவர்களிற்கு இந்தப்பாடல் அடிக்கடி நினைவிற்கு வரும். இந்தப்பாடலை வடமாகாண சபையின் கிளிநொச்சி உறுப்பினர் பசுபதிப்பிள்ளைதான் இந்தப்பாடலிற்கு சொந்தக்காரராக இருப்பாரோ என்ற சந்தேகம் சிலரிற்கு வந்தாலும், உண்மையில் கடுவெளிச்சித்தரின் பாடல் இது.

வடமாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை வெளியான பின்னர், உறுப்பினர்களின் கருத்தறியும் அமர்வு ஜூன் 14ம் திகதி வடமாகாணசபையில் நடந்தது. அன்றுதான் அமைச்சர்கள் நால்வரிற்கும் எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையை முதல்வர் அறிவித்தார். முதல்வர் உரையாற்றிக்கொண்டிருந்த சமயத்தில், முன்னரே திட்டமிட்டதன் அடிப்படையில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். அப்போதுதான் “நந்தவனத்து ஆண்டி” பாடலை பாடிவிட்டு பசுபதிப்பிள்ளை வெளிநடப்பு செய்தார்.

பசுபதிப்பிள்ளை நந்தவனத்து ஆண்டியாக வர்ணித்தது முதல்வரை. ஆனால், வரலாறும், மக்களும் நந்தவனத்து ஆண்டிகளாக வர்ணிப்பது வடமாகாணசபையின் மொத்த உறுப்பினர்களையுமே. வடமாகாண சபையை

**மொத்தத்தில் நடந்து முடிந்திருப்பது மக்கள் நலன் சார்ந்த, கொள்கை பிரச்சனையல்ல. கட்சியை வெட்டியோடுகிறார் என தமிழரசுக்கட்சியும், மாகாணசபை நிர்வாகத்தில் தமிழரசுக்கட்சி தலையிடக்கூடாதென விக்கியும் கருதியதால் எழுந்த பிரச்சனை.**

செயலற்றதாக்கி, கட்சி அரசியலிற்காக மக்களை பற்றி சிந்திக்காமல் கத்திக் கத்தியே உயிரைவிடும் தவளைகளை போல செயற்படுபவர்களின் களமாக்கியதில் எல்லா உறுப்பினர்களிற்கும் பங்குண்டு. மொத்தத்தில் முப்பத்தியெட்டு நந்தவனத்து ஆண்டிகளின் கூடாரமே வடமாகாணசபை.

வடமாகாணசபை குழப்பங்கள் தற்போது தீர்க்கப்பட்டுவிட்டதைப் போன்ற தோற்றம் காணப்படுகிறது. உண்மையில் மறைப்பு கட்டி ஓட்டைகளை மறைத்த சம்பவமே நடந்துள்ளது. மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியை சரி செய்ய வேண்டிய கட்டாயம் தமிழரசுக்கட்சிக்கு, முதல்வர் நாற்காலியின் ருசியை இழக்க தயாராகாத விக்னேஸ்வரன் என ஒரே புள்ளி•யில் இரண்டு தரப்பும் சந்தித்த சமயத்தில் ஏற்பட்ட தற்காலிக இணக்கப்பாடு இது. இது நிச்சயம் நிரந்தர இணக்கப்பாடு அல்ல. ஏனெனில், நடந்தது கொள்கை சார்ந்த மோதல் அல்ல. கொள்கை சார்ந்த மோதல்



என்றால் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். நடந்தது வேறு.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் அதிக ஈகோ பார்ப்பவர். அவரை முதல்வர் வேட்பாளராக்கிய சமயத்தில், இதை கூட்டமைப்பின் தலைமையிடம் சிலர் சுட்டிக்காட்டியுமுள்ளனர். விக்கியுடன் இணைந்து பணியாற்றுவது மற்றவர்களிற்கு சிரமமானதென்றகருத்தைசம்பந்தன் அன்று பொருட்படுத்தவில்லை. அவர் தனக்கு கீழ் சலாம் போட்டுக்கொண்டிருப்பார் என்பதே சம்பந்தரின் கணக்கு. இறுதியில், “நான் போன் பண்ணினால் அவர் பதிலளிப்பாரோ தெரியாதே” என கையை பிசைந்தபடி மூன்றாவது நபரை தூது அனுப்பும் நிலைக்கு சம்பந்தரே வந்தார்.

முதல்வர் சர்ச்சை நடந்த சமயத்தில் சமரத்தில் ஈடுபட்டவர்களிடம் மாவை சேனாதிராசா சொன்ன சில விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. முதலமைச்சர் எங்களுடன் கலந்துரையாடுகிறார் இல்லை, அவரது வெற்றிக்கு உழைத்த இடத்திற்கு (தமிழரசுக்கட்சியின் தலைமையகம்) வருவதில்லை, எங்களை மதிக்கிறார் இல்லை என்பவையே.

அதாவது அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட எங்களிற்கு நேற்று வந்தவர் வாலாட்டலாமா என்பதே அவரது ஆதங்கம்.

மொத்தத்தில் நடந்து முடிந்திருப்பது மக்கள் நலன் சார்ந்த, கொள்கை பிரச்சனையல்ல. கட்சியை வெட்டியோடுகிறார் என தமிழரசுக்கட்சியும், மாகாணசபை நிர்வாகத்தில் தமிழரசுக்கட்சி தலையிடக்கூடாதென விக்கியும் கருதியதால் எழுந்த பிரச்சனை. இந்த ஆட்டத்திற்குள் நகர்த்தப்பட்ட காய்களே மற்றைய நந்தவனத்து ஆண்டிகள். இவர்களை நந்தவனத்து ஆண்டிகள் என குறிப்பிடுவதாக யாரும் பொங்கியெழ தேவையில்லை.

நீண்ட போராட்டத்தின் பின் கிடைத்த அற்ப வரப்பிரசாதத்தை கூட பக்குவமாக கையாண்டு, மக்களிற்கு எதையாவது செய்யலாமா என சிந்திக்காமல் கட்சி, தனிப்பட்ட பிரச்சனைகளிற்காக போட்டு உடைத்தவர்களை எப்படி அழைப்பது?


மாகாணசபை முறைமையின் மிகப் பெரிய பிரச்சனையே ஆளுனர் அதிகாரம் தான், ஆளுனரின் முன் சத்தியப்பிரமாணம் எடுக்க மாட்டோம் என்றெல்லாம் அண்மைக்காலம்வரை நரம்பு புடைக்க பேசிக் கொண்டிருந்தவர்கள், அர்த்த ராத்திரியில் முதல்வரை பதவி நீக்குங்கள் என ஆளுனரின் அலுவலக கதவை தட்டினார்கள்.

நந்தவனத்து ஆண்டியென முதல்வரை வர்ணித்து பாடிவிட்டு அன்றிரவே ஆளுனர் அலுவலகத்திற்கு சென்றார். இரண்டுநாள் கழித்து, அவரது முகப்புத்தககத்தில் ஆளுனர் அலுவலகத்திற்கு சென்றது துரதிஸ்டவசமானதென எழுதினார்.

முதல்வரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட அன்றே இரண்டு தரப்பும் மாறிமாறி பேரம் பேசலில் ஈடுபட்டது. பணம், அமைச்சு பதவியென மாறிமாறி கொக்கி போட்டவை அசிங்க நாட்கள்.

முதல்வரில் நம்பிக்கையிழந்து விட்டவர்கள் எப்படி அதை மீளப்பெற்றார்கள் என்பதை அவர்களும் சொல்லவில்லை, நாங்களும் கேட்கவில்லை.

அதுகூட பரவாயில்லை, முதலமைச்சரில் நம்பிக்கையில்லையென கையொப்பமிட்ட இம்மானுவேல் ஆனோல்ட் கல்வியமைச்சராக்குங்கள் என தமிழரசுக்கட்சி பரிந்துரைக்கிறது. இந்த பரிந்துரையால் ஆனோல்ட்டிற்கும் சங்கடங்களில்லை. விஜய் படமொன்று வெளியான அன்று, அமைச்சு கிடைக்கிறதென அவரும், கட்சியும் நினைக்கலாம். போனவாரம்



வரை முதலமைச்சரின் நிர்வாகம் சரியில்லையென போர்க்கொடி தூக்கிவிட்டு, இந்தவாரம் அமைச்சு பதவிக்கு போய் நின்றால் என்ன அர்த்தம்? அது வேற வாய், இது நாற வாய் என்ற வடிவேலுவின் நகைச்சுவையை சொல்லி கடந்து செல்வதா?

அடுத்தடுத்த வாரங்களில் அமைச்சு பதவிக்காக நமது மக்கள் பிரதிநிதிகள் குடுமிப்பிடி சண்டையில் ஈடுபடப் போகிறார்கள் என்பதற்கான அறிகுறிகள் தென்பட தொடங்கிவிட்டன. கல்வியமைச்சராக அனந்தியை நியமிக்கலாமென முதல்வர் நினைக்கிறார். மாகாணசபையிலுள்ள ஒரேயொரு பெண் பிரதிநிதி, தமிழரசுக்கட்சியை சேர்ந்தவர். தமிழ் தேசிய அரசியலென்பது ஆண்களின் அரசியல். பெண்கள் கையாளப்படுபவர்களாகத்தான் இருக்கிறார்கள். கடந்த பாராளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்த சாந்தி சிறிஸ்கந்தராஜாவை நியமித்தது, பெண் பிரதிநிதித்துவத்திற்காக அல்ல. சுரேஷ் பிரேமச்சந்திரனிற்கு வழங்ககூடாது, இதனால் எழும் விமர்சனங்களை அடக்கும் விதமான ஒரு காரணமாகவே பெண்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...



பிரதிநிதித்துவம் கையிலெடுக்கப்பட்டது.

இப்பொழுது முதல்வர் அனந்தியை எதற்காக அமைச்சராக்க நினைக்கிறார் என்பது தெரியவில்லை. ஆனால் தமிழரசுக்கட்சி அதற்கு எதிர்ப்பு தெரிப்பது வடிவேலுவின் தக்காளி சட்னி ரகம்.

2013இல் மாகாணசபை தேர்தல் முடிந்ததும் அமைச்சர்கள் நியமன சர்ச்சை ஏற்பட்டது. யார் அமைச்சர்கள், கட்சிக்கு எத்தனை என்பதையெல்லாம் தமிழரசுக்கட்சி தான் தீர்மானித்தது. அப்போதே ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழரசுக்கட்சி லடாய் ஆரம்பம். சுரேஷ் பிரேமச்சந்திரனின் தம்பி சர்வேஸ்வரனை அமைச்சராக்குவதென தேர்தலின் முன்னரே இரண்டு கட்சி தலைமைக்குமிடையில் வாய்மூல உடன்பாடொன்று ஏற்பட்டிருந்தது. அதை மீறி ஐங்கரநேசனை அமைச்சராக்கியது தமிழரசுக்கட்சி. அப்பொழுது கட்சி ஒழுங்கு முறைக்கு உட்படவில்லையென கூறி, அவர் கட்சியில் இல்லையென ஈ.பி.ஆர்.எல்.எவ் கூறியபோதும், தமிழரசுக்கட்சி அதை கேட்கவில்லை.

ரெலோ சார்பில் டெனிஸ்வரன் அமைச்சராக்கப்பட்டார். இந்த தெரிவில் ரெலோ தலைமைக்கு உடன்பாடில்லை. என்றாலும், தமிழரசுக்கட்சி அவரைத்தான் நியமித்தது.

இப்பொழுது பூமராங் போல சந்தர்ப்பம் மாறி வந்து நிற்கிறது. அனந்தி கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டுள்ளார், அவர் வேண்டாம் என்கிறது தமிழரசுக்கட்சி. சுரேஷ் பிரேமச்சந்திரனிற்கு வந்தால் தக்காளி சட்னி, மாவைக்கு வந்தால் மட்டும் இரத்தமா?

பகுவளமாக, முதலமைச்சர் இப்பொழுது தன்னால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தீர்ப்பை மீளாய்வு செய்யப் போகிறேன் என்கிறார். இது எவ்வளவு பெரிய கோமாளிக் கூத்து? விசாரணைக் குழுவை நியமிக்கும்போது அவர் கொழும்பிலுள்ள மூத்த சட்டத்தரணி கனகஈஸ்வரனிடம் ஆலோசனை கேட்டதாகவும், அப்படியான விசாரணைக் குழுவை அமைப்பதால் ஏற்படும் சட்டச் சிக்கல்களை அவர் புரிய வைத்ததாகவும் கூறப்படுகிறது. என்றாலும், விடாக்கண்டனாக விக்னேஸ்வரன் விசாரணைக்குழுவை அமைத்தார். அது முழுக்க முழுக்க விக்னேஸ்வரனின் தெரிவு. இப்பொழுது அதன் தீர்ப்பை மீளாய்வு செய்யப் போகிறேன் என்றால் என்ன அர்த்தம்?

தமிழ்தேசிய கூட்டமைப்பின் முப்பது உறுப்பினர்கள்தான் இப்படியென்றால்ஞ் எஞ்சிய எதிரணியின் எட்டு உறுப்பினர்களும் இவர்களின் அண்ணன் தம்பிகள்தான். மாகாணசபையை சுத்தம் செய்கிறேன், முறையாக மாகாணசபையை இயக்க முயற்சித்து கொண்டிருக்கிறேன் என மேடைக்குமேடை பேசும் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், நம்பிக்கைவாக்கெடுப்பில் முதல்வரிற்கு எதிராக வாக்களிக்க பேசிய பேரமெல்லாம் மாரடைப்பை ஏற்படுத்தும் ரகமானவை.

இதுதான் இன்றைய வடமாகாணசபையின் குறுக்கு வெட்டு முகம். நான்கு வருடங்களின் முன்னர், மாகாணசபை தேர்தலின் போது வாக்களிக்க திரண்ட தருணத்தை நினைவில் கொள்ளுங்கள். நமது ஒவ்வொரு வாக்கையும் ஒரு தோட்டாவாகத்தான் அப்போது மக்கள் கருதினார்கள். புள்ளடிகள் மூலம் ஒரு புது வரலாறு படைக்கலாமென்ற எதிர்பார்ப்புடன்தான் வாக்களிப்பை ஒரு மகத்தான கடமையாக செய்தார்கள்.

ஆனால், மக்களின் வாக்கை பெற்றவர்களிற்கு அந்த பொறுப்புணர்வு இல்லை. அவர்களில் யாரிடமும் அரசியல் நேர்மையுமில்லை, அது குறித்து வெட்கமுமில்லை. மொத்தத்தில் முப்பதெட்டு நந்தவனத்து ஆண்டிகளும் போட்டுடைப்பது நமது கனவையே!

3-ம் பக்க தொடர்ச்சி...

என்பதே. எனினும், அடுத்தடுத்த சந்திப்புக்களில் நிமலன் தனக்கருகில் இருக்கும்படியாக முதல்வர் பார்த்துக் கொண்டார்.

சம்பந்தரின் வாக்குகளை ஏற்று சமரசத்திற்கு செல்வதாக முதல்வர் கடிதத்தை தயார் செய்து கொண்டிருந்த சமயத்தில், நிமலனின் அதிகரித்த தலையீடு காரணமாக சிவாஜிலிங்கம் ஏடாகூடமான வார்த்தைகளை பாவித்த சம்பவமும் நடந்தது.

கடந்தவாரம் இரண்டு புதிய அமைச்சர்கள் பதவியேற்றனர். அதற்கு முதல்நாள், தனக்கு ஆதரவாக கையெழுத்திட்ட உறுப்பினர்களை சந்திப்பிற்கு அழைத்திருந்தார் முதல்வர். கலந்துரையாடலில் ஆரம்பத்திலேயே நிமலனை வெளியில் அனுப்பிவிடுங்கள் என சில உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதனையடுத்து நிமலனை வெளியில் உட்காரும்படி முதல்வர் கேட்டுக்கொண்டார்.

வடமாகாண சர்ச்சைகள் ஓய்ந்தபின் முதல்வரின் முன்னாலுள்ள முக்கிய பணி அனைத்து உறுப்பினர்களிற்கும் தலைவராக இருக்க வேண்டும். ஆனால் முதல்வர் பெரிய அரசியல் சறுக்கலில் ஈடுபட்டுள்ளார். தனக்கு ஆதரவாக கையொப்பமிட்டவர்களை மட்டுமே சந்திப்பிற்கு அழைத்துள்ளார். முதல்வரின் இந்த நடவடிக்கை, மாகாணசபைக்கு இன்னும் தலைவராக வில்லை என்பதுதானே அர்த்தம். பிழையான விசாரணைக்குழு, விசாரணைக் குழுவின் அறிக்கையின் பின் அமைச்சர்களை பதவி நீக்கும் பிழையான முடிவு, சர்ச்சை தீர்ந்த பின்னரும் அதை தொடர விரும்புவதைபோல தனக்கு ஆதரவான உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் என முதல்வரின் பிழையான அரசியல் முடிவுகள் அவருடன் கூடவே இருக்கும் உறுப்பினர்களிற்கு அதிருப்தியை அதிகரித்துக் கொண்டு செல்கிறது. நிமலன் கார்த்திகேயனின் அரசியல் ஆலோசனைகளை கேட்பதை நிறுத்தினால்தான் முதல்வரை சரியான பாதைக்கு திருப்பலாமென அவர்கள் பகிரங்கமாகவே முணுமுணுக்க தொடங்கி விட்டனர். நிமலன் கொழும்பு தொடர்புள்ளவர், கொழும்பு சிந்தனையுடன்தான் முதல்வரை வழிநடத்துவார், அது முதல்வரை குப்புற விழுத்தவும் கூடுமென்ற அச்சம் அவர்களிடம் உண்டு. எனினும், முக்கிய விவகாரங்களில் நிமலனை தனக்கு பக்கத்தில் வைத்திருக்க முதல்வர் விரும்புகிறார்.

மாகாணசபை சர்ச்சையின்போது பங்காளி கட்சிகள் சமரசத்தில் ஈடுபட்டன. இறுதியில் நிமலனின் நடவடிக்கையில் அதிருப்தியுடன் அதிலிருந்து ஒதுங்கிக்கொள்ளும் நிலைக்கு சென்றார்கள்.

கடந்தவாரம் அமைச்சர்கள் பதவியேற்பதற்கு முன்னர், அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், உயரதிகாரிகளை அழைத்து முதல்வர் ஒரு கூட்டமொன்று வைத்தார். இந்த கூட்டத்தில் பத்து நிமிடங்கள் அளவில்தான் முதல்வர் இருந்துள்ளார். பின்னர் எழுந்து சென்று விட்டார். அதன்பின் நிமலன் கார்த்திகேயன்தான் அன்றைய கூட்டத்தை வழிநடத்தினார்.

அண்மையில் நடந்த இன்னொரு சம்பவம். நிமலனின் நடவடிக்கைகள் தொடர்பாக, மாகாணசபை உறுப்பினர் ஒருவர் புகாரளித்திருக்கிறார். அதற்கு பதிலளித்த முதல்வர் “அவர் சி.எம் என்ற நினைப்போடதான் இருக்கிறார் போல”என நகைச்சுவையாக பதிலளித்திருக்கிறார். என்றாலும், இன்றுவரை முதல்வரின் முதலாவது அரசியல் ஆலோசகராக நிமலன்தான் செயற்படுகிறார். அவரது முடிவுகள் சரியானதாக இருக்குமா என்பதை துணிந்து செல்ல முடியாத நெருக்கடி இருக்கிறது. மாகாணசபை பணியாளர்களிற்கும் அவர்தான் நிழல் தலைவர். ஒவ்வொரு துறையின் செயலாளர்களையும் அவர்தான் கையாள்கிறார்.

சர்வேஸ்வரன், அனந்தி புதிய அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அவ்வளவு ஆளுமையானவர்கள் கிடையாதென அதிகாரிகள் நம்புகிறார்கள். நிமலன் அனைத்தையும் கவனித்துக்கொள்வார் என்ற துணிவில்தான் முதல்வர் புதிய அமைச்சர்களை நியமித்திருக்க வேண்டுமென்பது அதிகாரிகளின் அபிப்பிராயம்.

நிமலன் கார்த்திகேயனின் அரசியல் ஆலோசனைகள் முதல்வரிற்கு வெற்றியை கொடுக்கவில்லை. முதல்வரின் நகர்வுகளில் தேர்ந்த அரசியல் சூட்சுமம் இல்லை. முதல்வரிற்கு வந்த கண்டம் இன்னும் முழுமையாக தீரவில்லை. நிமலன் கார்த்திகேயனின் ஆலோசனைகள் அதற்காகவது கைகொடுக்குமா, நிர்வாக தலையீடுகள் என்னவிதமான பலனை கொடுக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தீபம் வழங்கும் மாபெரும் பரிசு திட்டம்,
தீபம் வாங்கினால் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.
ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 20 வாசகர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.
London metropolitan college
வழங்கும் 4500 பெறுமதியான கற்கைநெறி கட்டண கழிவினை பெறுவதற்கு அரியசந்தர்ப்பம்.

நீங்களும் எமது பரிசு மழையில் இணையலாம்.

முறை 1. கூப்பனை நிரப்பி எமது முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.

முறை 2. கூப்பனை நிரப்பி எமது பத்திரிகை முகவர் இடம் கொடுக்கலாம்.

முறை 3. கூப்பனை நிரப்பி எமது facebook.com/deepamweekly/ பக்கத்திற்கு அனுப்பலாம்

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாசகர்கள் பெயர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எமது பத்திரிகையில் வெளியிடப்படும்.

Issue Number 99

Full Name ....................

Address ....................

Nic ....................

Phone Number ....................




விஜய் ரீவியில் ஒளிபரப்பப்படும் "பிக் பாஸ்" என்ற நிகழ்ச்;சி பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. வீட்டில் இருப்பது போல் சும்மா இருந்து கொண்டு கோடிக் கணக்கில் உழைக்கக் கூடிய இந்த "பிக் பாஸ்" நிகழ்ச்சி பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.இந்தநிகழ்ச்சியை ஒளிபரப்பும் விஜய் ரீவியில் விளம்பரம் ஒன்றிற்கு 30 நிமிடத்துக்கு 25 இலட்சம் இந்தியப் பணம் அறவிடப்படுகிறது. நூறு நாட்களுக்கு அதிகளவு பணத்தை விளம்பரத்தின் மூலம் அள்ள முடியும் என்றால் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்களுக்கு கோடிக்கணக்கில் சம்பளம் கிடைக்கும் தானே.

இந்தியாவில் இந்த "பிக் பாஸ்" நிகழ்ச்சியானது முன்னர் வண்ணம் என்ற தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. இது நெதர்லாந்து நாட்டின் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட "பிக் பிரதர்" என்ற உண்மை நிகழ்வினை கொண்டு தொகுக்கப்படுகின்ற ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. இது 11 ஆண்டுகளில் 10 பருவங்களாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. இப்பொழுது "பிப் பாஸ்" மிகவும் பிரபலமான ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியாக வலம் வருகிறது.

ஜாக் டி மோல் உருவாக்கிய டச்சு "பிக் பிரதர்" வடிவத்தால் உருவாக்கப்பட்ட "பிப் பாஸ்" என்பது ஒரு உண்மை நிகழ்வினை கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியாகும். புதிதாக கட்டப்பட்ட ஒரு இல்லத்தில் 15 பேர் வாழ்கின்றனர். அங்கு தலைவர் தெரிவு செய்யப்படுவர். அவரின் சொல் கேட்டு நடக்க வேண்டும். உலகின் பிற பகுதிகளில் இருந்து இவர்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். ஒவ்வொரு வாரமும், வீட்டை விட்டு வெளியேறுவதற்கு, அவர்களது தோழர்களில் இரண்டு பேரை வேட்பாளர்களாக நியமித்தல் மற்றும் பெரும்பாலான பரிந்துரைகளை பெறுகின்றவர்கள் ஒரு பொது வாக்கை எதிர்கொள்வார்கள். இவற்றில் இறுதியில் ஒருவர் வீட்டை விட்டு வெளியேற்றப்படுவார். இவர் இல்லத்திலிருந்து வெளியேற்றப்படுபவராக இருப்பினும், பிப் பாஸ் ஆணையிட்டபடி இந்த செயல்முறைக்கு விதிவிலக்குகள் இருக்கின்றன. பொது மக்கள் வெற்றி பெற விரும்பியவர்களுக்கு வாக்களிப்பர்.

வீட்டுக்காரர்கள் முக்கியமாக தணிக்கை மூலம் தேர்வு செய்யப்படாத ஒரு பிரபலமாக இருப்பவர். பிப் பாஸ் என்று அறியப்படும் ஒரு மர்மமான நபர் மேற்பார்வை செய்வார். அவரின் ஒரே பிரசன்னம் அவருடைய குரல் மட்டும் தான்.

ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு "பிப் பாஸ்" இல்லம் கட்டப்பட்டுள்ளது. மகாராஷ்டிராவின் புனே மாவட்டத்தில் லோனாவலாவின் சுற்றலா தளத்தில் இந்த வீடு முன்பு இருந்தது. ஆனால் ஐந்தாவது பருவத்திற்கான வீடு கர்ஜாட்டிலுள்ள படப்பிடிப்புத்தளம் அமைந்துள்ளது. இந்த வீடு நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இது அனைத்து வகையான நவீன வசதிகளுடன் உள்ளது. ஆனால் ஒன்று அல்லது இரண்டு படுக்கையறைகள் மற்றும் நான்கு கழிப்பறை குளியல் அறைகள். இல்லம் ஒரு தோட்டம் மற்றும் நடைபயிற்சி பகுதி உள்ளது. "பிப் பாஸ்" வீட்டில் பல வசதிகள் உள்ளன. ரீவி தொடக்கம் போன் காடிகாரம் பேனா காகித வசதி கூட கிடையாது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு நிகழ்வு சம்பந்தமான விதிகள் கூறப்படவில்லை. இந்தியா தவிர வேறு எந்த மொழியிலும் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அனுமதிக்கப்படும் நேரம் தவிர எந்த நேரத்திலும் இல்ல வளாகத்தை விட்டு வெளியேற முடியாது. அவர்கள் யாருடனும் வேட்பு மனுக்களைப் பற்றி விவாதிக்க முடியாது. அவர்கள் பகல் நேரத்தில் தூங்க முடியாது. இரவில் 11 மணிக்கு மின்சாரத்தை தடை செய்வார்கள். சில நேரங்களில் வீட்டு உரிமையாளர்களால் நியமனம் செய்யப்படலாம், சிறப்பு சலுகைகள் (பணிகளை அல்லது பிற காரணங்கள் மூலம்) விதிகளை உடைத்து அல்லது வேறு ஏதேனும் ஒன்றைக் கொண்டு வருவதற்கு தீவிரமாக இருந்தால் ஒரு போட்டியாளர் நேரடியாக வெளியேற்றப்படலாம்.

விஜய் ரீவியில் உலகநாயகன் கமல் ஹாசன் தொகுத்து வழங்கும் பிக் பாஸ் நிகழ்ச்சி ஆரம்பமாகியுள்ள நிலையில், இந்த நிகழ்ச்சி குறித்த தகவல்களும் சமூகவலைதளங்களில் வெளிவர தொடங்கிவிட்டன. தற்போது, இந்த நிகழ்ச்சிக்கான மொத்த செலவு மற்றும் வரவு குறித்த தகவல்கள் வாட்ஸ் அப்பில் வைரலாகியுள்ளது.

### "பிக் பாஸ்" செலவுகள்!

ஸ்ருடியோ செட்டிங் செலவு 20 கோடி.

நிகழ்ச்சி தொகுப்பாளர் கமலுக்கு - 20 கோடி.

நிகழ்வில் பங்குபற்றும் 15 பேருக்கு - 2 கோடி

100 நாள் படப்பிடிப்பு செலவு 25 கோடி

முதல் நாள் மற்றும் கடைசி நாள் விழாச் செலவு - 3 கோடி

மொத்த செலவு - 70 கோடி.

### "பிக் பாஸ்" வரவு!

விளம்பரம் மட்டும் 30 வினாடிக்கு 25 லட்சம்

ஒரு நாளின் மொத்த வியாபார நிமிடங்கள் 25 (X 60 விநாடி = X 1500/30 = 50X25) = 12.5 கோடி

100 நாட்களுக்கு வரவு - 1250 கோடி

மொத்த லாபம் = 1180 கோடிகள்!

இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்க கமல்ஹாசனுக்கு 15 கோடி சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பளம் முதல் சீசனுக்கு மட்டுமா இல்லையா என்பது தெரியவில்லை.

"பிக் பாஸ்" நிகழ்ச்சியில் ஓவியா சினேகன் கஞ்சா கருப்பு நமீதா, குண்டு ஆர்த்தி அனுயா, ஜல்லிக்கட்டு போராட்ட பெண்மணி ஜூலியானா கணேஷ் வெங்கட்ராம், சக்தி போன்றோர் கலந்து கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரே வீட்டுக்குள் தங்க வைக்கப்பட்டு இவர்களை சுற்றி 30 கமராக்கள் கண்காணித்து வருகின்றன. இதில் சர்ச்சைக்குரிய காட்சிகள் மட்டும் அன்றாடம் இரவு 9 மணி முதல் 10 மணி வரை விஜய் டிவியில் ஒளிபரப்பப்படுகிறது.

ஒருவருக்கொருவர் சண்டை போட்டு அழுவதும் பின்னர் ஆறுதல் சொல்வதுமாக நிகழ்வு விறுவிறுப்பாக தொடர்கிறது.





கிழக்கிலங்கை இந்துசமய சமூக அபிவிருத்தி சபையினால் 40ம் கிராம சக்தி கலா மன்றத்திற்கு இசைக்கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன. கிழக்கிலங்கை இந்து சமூக அபிவிருத்தி சபையின் தலைவர் த.துஷ்யந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற கோட்ட கல்வி அதிகாரி பூபாலச்சந்திரன் தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சி.தணிகசீலன் வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய அதிபர் திரு.கணேசமூர்த்தி சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ஆலய பிரதம குரு ஆலய நிர்வாக தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் சக்தி கலா மன்ற தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





யாழ்ப்பாணத்தில் அரியவகை நாக பாம்பு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. நல்லூர் வடக்கு வாலையம்மன் ஆலய மீள் நிர்மாணிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் முன்னால் மண்ணெண்ணை ஊற்றப்பட்ட நிலையில் உயிருக்கு போராடிய வெள்ளை நாகம் மீண்டும் அலைந்து படுவதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் அதை பராமரித்து வருகிறார்கள்.

# பெண்களிற்கு எங்கெல்லாம் மச்சமிருந்தால் அதிர்ஸ்டம்?

ராசி, நட்சத்திரம், ஜாதகம், கைரேகை வைத்து ஒருவரை பற்றி கூறுவது போலவே, ஒருவரது உடலில் இருக்கும் மச்சங்களை வைத்தும் அவர்களை பற்றி கூற முடியும் என்கிறார்கள். மச்சம் என்பது பெண்களுக்கு ஒரு அழகும் கூட. அது எங்கு அமைகிறது என்பதை பொறுத்திருக்கிறது. பொதுவாக மச்சம் கருப்பு நிறத்தில் இருக்கும் என்றாலும் சிலரது சரும நிறம் சார்ந்து அது தேன், சிவப்பு, பச்சை நிறங்களில் கூட காணப்படும். இந்த நிறத்தில் அமையும் மச்சங்கள் நல்ல லக் என்று கூறுகின்றனர். மச்சங்கள் அதிகமாக இருந்தால் லக் அதிகமாக இருக்குமாம். இதற்காக தான் மச்சக்காரன் என்று கூறுகிறார்களோ என்னவோ...



### நெற்றி

முகத்தின் வலது புறத்தில் மச்சம் இருந்தால் அந்த பெண்ணின் வாழ்வில் செல்வமும், ஆரோக்கியமும் நன்றாக இருக்கும். இவர்கள் கடவுள் நம்பிக்கையில் ஆழமாக இருப்பார்கள். இதுவே இடது புறத்தில் மச்சம் இருந்தால் அவர்களது வாழ்க்கை அவ்வளவு சிறப்பாக அமையாது என கூறுகின்றனர். இவர்கள் மத்தியில் சுயநலம் இருக்கும். மிக செல்வமாக இருப்பார்கள்.

### நெற்றிப்பொட்டில்

வலது புற நெற்றிப்பொட்டில் மச்சம் இருந்தால் அவர்கள் நேர்த்தியாகவும், சீக்கிரமாக திருமணம் செய்துக் கொள்பவருமாக இருப்பார்கள். இவர்களுக்கு அமையும் கணவர்களும் நல்லவர்களாக இருப்பார்கள். இடது புறத்தில் மச்சம் இருந்தால் இவர்களது திருமண வாழ்க்கை சற்று சறுக்கல்களை சந்திக்கும். புரிதல், முதிர்ச்சி இல்லாமல் கணவன் மனைவி இல்லற வாழ்வில் ஈடுபடுவர்கள்.

### கண்ணிமை


வலது புற கண்ணிமையில் மச்சம் இருந்தால் அவர்கள் நிதானமாக செயல்படுவார்கள். பணம் மெல்ல, மெல்ல தான் சேமிப்பார்கள். இவர்களுக்கு ஏற்படும் நெருக்கடி உடனே சரியாகிவிடும். இடது புறத்தில் மச்சம் இருந்தால், இவர்களது குணாதிசயங்கள் அவ்வளவு சிறப்பாக இருக்காது. தன்னலம் மட்டும் தான் பார்ப்பார்கள். பிறர் நலம் பார்க்க மாட்டார்கள். வாழ்க்கையில் நிலையற்று செயல்படுவார்கள்.

### கண்கள்

வலது கண்ணில் மச்சம் இருந்தால், அவர்கள் மிகவும் லக்கானவர்கள். செல்வம் அவர்களிடம் அதிகம் சேரும். வாழ்க்கையில் பெரிதாக சிரமப்பட மாட்டார்கள். இன்பமான வாழ்க்கை அமைந்து காணப்படுவார்கள். இடது கண்ணில் மச்சம் இருந்தால், அவர்கள் எதையும் பெரிதாக எண்ண மாட்டார்கள். இவர்களது அணுகுமுறை காரணத்தாலேயே திருமண வாழ்வில் சிக்கல்கள் உண்டாகலாம்.

### மூக்கு

மூக்கின் நுனியில் மச்சம் இருந்தால் அவர்களுக்கு வெடுக்கு வெடுக்குன்னு கோபம் வரும். சின்ன சின்ன விஷயத்திற்கு எல்லாம் முறைப்பார்கள். ஆயினும், மற்றவர்களை அதிகம் மதிப்பார்கள். சமூகத்தில் நல்ல பெயர் பெற்றிருப்பார்கள்.




மூக்கின் வலது புறத்தில் மச்சம் இருப்பவர்கள் புகழ் பெற்று விளங்குவார்கள். இதுவே இடது புறத்தில் இருந்தல அவர்கள் சற்று பதட்டத்துடன், சௌகரியங்கள் குறைந்தும் காணப்படுவார்கள்.

### இதழ்கள்

மேல் இதழில் மச்சம் இருந்தால், அவர்கள் காதலில் சிறந்து விளங்குவார்கள். ஆடம்பர வாழ்க்கை அமைய வாய்ப்புகள் உண்டு. சுய கருத்தை, குரலை உலகம் கேட்கும்படி ஈடுபடுவார்கள். கீழ் உதட்டில் மச்சம் இருந்தால், அவர்கள் கிரியேட்டிவ் நபராக இருப்பார். இந்த பெண்கள் அவர்களது திறமையை உலகறிய பாடுபடுவார்கள். கலை சார்ந்த விஷயங்களில் சிறந்து விளங்குவார்கள்.

### கன்னம்

வலது புற கன்னத்தில் மச்சம் இருந்தால், அவர்கள் தங்கள் குடும்பத்தை விரும்புவார்கள், வயதில் மூத்தவர்களை மதித்து செயல்படுவார்கள். வீட்டு பறவையாக இருப்பார்கள். குடுமபத்துடன் தான் அதிக நேரம் செலவிடுவார்கள். இடது புற கன்னத்தில் மச்சம் இருந்தால், அந்த பெண்கள் சற்று கர்வத்துடன் காணப்படுவார்கள். தனக்கான இடத்தில் சுதந்திரமாக இருக்க விரும்புவார்கள். அதில் யாரும் தலையிட விரும்பமாட்டார்கள்.

### கழுத்து

பின் கழுத்தில் மச்சம் இருக்கும் பெண்கள் ஆக்ரோஷமாக இருப்பார்கள். தங்கள் கனவு மெய்ப்பட வேண்டும் என்றால் எதையும் செய்ய தயங்க மாட்டார்கள். முன் கழுத்தில் மச்சம் இருக்கும் பெண்கள் நன்கு பாடும் திறன் பெற்றிருப்பார்கள். கலை ஆர்வம் இருக்கும். இவர்கள் சிறந்த தாய், மகள், மனைவியாக விளங்குவார்கள்.


### தோள்

வலது புற தோளில் மச்சம் இருக்கும் பெண்கள் ஸ்மார்ட்டாக, தைரியமாக இருப்பார்கள். இடது புற தோளில் மச்சம் இருக்கும் பெண்கள் தேவையற்ற சண்டைகளில் மூக்கை நுழைக்கும் பழக்கம் கொண்டிருப்பார்கள்.

### மார்பு

வலது மார்பில் மச்சம் இருக்கும் பெண்கள் நிறைய பொருளாதார நெருக்கடியை சந்திப்பார்கள். கடவுள் நம்பிக்கை இருக்கும். பிரச்சனைகளை எதிர்த்து போராடும் குணாதிசயம் கொண்டிருப்பார்கள்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்
SKY ROSE CHIDAMBARAM COVERING
ஸ்கை ரோஸ் சிதம்பரம் கவரிங்
அனைத்து வெரைட்டிங் கவரிங் நகைகளை இங்கே பெற்றுக்கொள்ளலாம்
No: 1 Hospital Road, Jaffna. Call: 0771536914



உடல்நலம் பாதிக்கப்பட்ட பெண்மணியை முதல்வர் எம்.ஜி.ஆர். அக்கறையோடு விசாரிக்கிறார். அருகில் ஹண்டே..

ஸ்ரீதர் சுவாமிநாதன்

# பொருளாதாரம் தெரியாதவர்!

**எம்.ஜி.ஆர்.** அதிமுகவை தொடங்கிய பின் சுதந்திரா கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் ஒருவரை விரும்பி அழைத்து கட்சியில் சேர்த்துக் கொண்டார். தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த போதும் மருத்துவரான அவரது சேவை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரா கவும் ஆக்கினார். அவர்...டாக்டர் எச்வி.ஹண்டே.

"எம்.ஜி.ராமச்சந்திரனை திமுகவில் இருந்து விலக்கியது மறைந்த அண்ணா அவர்களையே விலக்கியது போலாகும். தனித்துப் போராடுகிறார் எம்.ஜி.ஆர்! மகாபாரத அர்ஜுனனைப் போல அவரை வெற்றி வீரர் ஆக்குங்கள்". திமுகவில் இருந்து எம்.ஜி.ஆர் நீக்கப்பட்டபோது மூதறிஞர் ராஜாஜி சொன்ன வாசகங்கள்தான் இவை. 1971ம் ஆண்டு தேர்தலில் பெருந்தலைவர் காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸும் மூதறிஞர் ராஜாஜியின் சுதந்திரா கட்சியும் கூட்டணி அமைத்து போட்டியிட்டு திமுகவிடம் கடும் தோல்வியை சந்தித்தன.

அதிமுகவையும் திமுகவையும் சமதூரத்தில் வைத்துப் பார்த்த காமராஜருக்கு, ராஜாஜியின் எம்.ஜி.ஆருக்கு ஆதரவான அறிவிப்பு ஏற்புடையதாக இல்லை. சுதந்திரா கட்சியில் இருந்த டாக்டர் எச்.வி. ஹண்டேயை அழைத்து தனது அதிருப்தியை ராஜாஜியிடம் தெரிவிக்குமாறு காமராஜர் கூறினார்.

அதற்கு ராஜாஜியின் பதில், "காமராஜரும் எம்.ஜி.ஆரை ஆதரிக்க வேண்டும்" என்பதே. அவரது பதிலோடு தன்னை சந்தித்த ஹண்டேயிடம், ராஜாஜியை அவரது பிறந்தநாளின்போது சந்தித்து பேசுவதாகக் கூறியிருக்கிறார் காமராஜர். "ஆனால், அதற்குள் ராஜாஜி உடல் நலம் பாதிக்கப்பட்டு மறைந்துவிட்டார்" என்கிறார் டாக்டர் ஹண்டே. "அடுத்த சில மாதங்களில் நடந்த திண்டுக்கல் இடைத்தேர்தலில் அதிமுக பெற்ற அமோக வெற்றி, ராஜாஜியின் கணிப்பை உறுதிப்படுத்தியது" என்றும் கூறுகிறார்.

சட்டப்பேரவையில் அப்போதைய திமுக அரசை எதிர்த்து சுதந்திரா கட்சியின் பேரவைத் தலைவராக இருந்த ஹண்டேயின் செயல்பாடுகளை பார்த்த எம்.ஜி.ஆர், "ராஜாஜி என்னை ஆதரித்தார். அவரது விருப்பப்படி நீங்கள் அதிமுகவில் சேர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அதன்படி, 1973 ஜூன் 19ம் தேதி அதிமுகவில் ஹண்டே சேர்ந்தார். அதிமுகவின் முதல் தலைமை நிலையச் செயலாளர் ஆக அவரை எம்.ஜி.ஆர் நியமித்தார். 1980ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை அண்ணாநகர் தொகுதியில் திமுக தலைவர் கருணாநிதியை எதிர்த்து போட்டியிட்டு 699 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிவாய்ப்பை ஹண்டே இழந்தாலும், அவரை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக்கினார் எம்.ஜி.ஆர்!

எம்.ஜி.ஆருடன் சேர்ந்து பணியாற்றிய தனது அனுபவத்தில், அவர் தனது அரசியல் எதிரிகளைக்கூட கடுமையாகப் பேசி ஹண்டே பார்த்தது இல்லை. எதிர்க் கட்சியை சேர்ந்தவர்களின் தொகுதிகளுக்கும் பாரபட்சமில்லாமல் அரசின் திட்டங்களை எம்.ஜி.ஆர் செயல்படுத்தியிருக்கிறார். அப்படி ஒரு அனுபவம் ஹண்டேவுக்கே உண்டு.

திமுக ஆட்சியில் சட்டப்பேரவை சபாநாயகராக இருந்தவர் புலவர் கோவிந்தன். கருணாநிதிக்கு நெருக்க மானவர். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக ஹண்டே இருந்தபோது, அவரை புலவர் கோவிந்தன் சந்தித்தார். வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தனது செய்யாறு தொகுதியில் சுகாதாரத்துறை சார்பில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து ஒரு பட்டியலைக் கொடுத்தார்.

அந்தப் பட்டியலை எடுத்துக் கொண்டு முதல்வர் எம்.ஜி.ஆரை ஹண்டே சந்தித்து விஷயத்தைத் தெரிவித்தார். அதற்கு எம்.ஜி.ஆர், "எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. அந்தப் பணிகளை உடனே நிறைவேற்றுங்கள். புலவர் கோவிந்தன் நல்ல மனிதர். அவர் திமுகவில் இருந்தாலும் நீங்கள் செய்யாறு தொகுதிக்கு நேரடியாகச் சென்று பணிகளை முடிக்க ஏற்பாடு செய்யுங்கள்" என்றார். இந்த பதிலால் ஹண்டேயின் மதிப்பிலும் மனதிலும் எம்.ஜி.ஆர் விஸ்வரூபம் எடுத்து நின்றார்.

தன் மீது வீசப்படும் கடுமையான விமர்சனங்களுக்குக் கூட எம்.ஜி.ஆர் கோபப்பட மாட்டார். அதேநேரம் அந்த விமர்சனங்களுக்கு அவர் அளிக்கும் பதில் மிகக் கூர்மையாக இருக்கும்.

எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது, பரமத்திவேலூர் என்ற இடத்தில் அதிமுக பொதுக்கூட்டம். அதில் கலந்து கொள்வதற்காக எம்.ஜி.ஆருடன் ஹண்டே சென்றார். ஹண்டேயின் கையில் அன்றைய மாலை நாளிதழ் இருந்தது. "என்ன நியூஸ்?" என்று எம்.ஜி.ஆர் கேட்டார். சொல்வதற்கு ஹண்டேக்கு தயக்கம். என்றாலும் தயங்கியபடியே சொல்லிவிட்டார். "திமுக தலைவர் கருணாநிதி உங்களுக்குப் பொருளாதாரம் தெரியாது என்று விமர்சித்திருக்கிறார்" என்றார் ஹண்டே.

அதைக் கேட்டு எம்.ஜி.ஆர் கோபமோ, வருத்தமோ அடையவில்லை. நிதானமாகச் சொன்னார்... "திமுக தலைவர் கூறுவது உண்மைதான். நான் பெரிய படிப்பு படித்தவன் அல்ல. பொருளாதாரம் பற்றி எனக்கு சொல்ல, அதுபற்றி நன்கு அறிந்த உயர் அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், பல முதல் அமைச்சர்களுக்குத் தெரியாத விஷயம் எனக்குத் தெரியும். பசி என்றால் என்னவென்று எனக்குத் தெரியும். அந்தக் கஷ்டம் புரியும். மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய முதல் அமைச்சருக்கு இது தெரிந்தால் போதும்."

"எம்.ஜி.ஆர் சொன்னது கரெக்ட்தானே" என்கிறார் டாக்டர் ஹண்டே!

தொடரும்...

மூதறிஞர் ராஜாஜி நகைச்சுவை உணர்வு உடையவர். எம்.ஜி.ஆரும் அப்படியே. அதிமுகவைத் தொடங்கிய புதிதில் ராஜாஜியின் ஆசியை பெறுவதற்காக அவரை எம்.ஜி.ஆர் சந்தித்தார். படப்பிடிப்பு இருந்ததால் அதை முடித்துவிட்டு ராஜாஜியை பார்க்கச் சென்றபோது தாமதமாகிவிட்டது. வருத்தம் தெரிவித்த எம்.ஜி.ஆர், "ஷூட்டிங்கினால் தாமதமாகிவிட்டது" என்றார். அதற்கு, துப்பாக்கிச் சூடு சம்பவத்தை குறிப்பிடும் வகையில் "ஷூட்டிங்தான் ஏற்கெனவே முடிஞ்சுடுத்தே" என்று சிலேடையாக ராஜாஜி சொல்ல, ரசித்து சிரித்தார் எம்.ஜி.ஆர்.!



இது, எம்.ஜி.ஆரின் ஷூட்டிங். 'ஊருக்கு உழைப்பவன்' படத்துக்காக. | எம்.ஜி.ஆருடன் எச்.வி.ஹண்டே.


மூதறிஞர் ராஜாஜிக்கு மாலை அணிவிக்கிறார் எம்.ஜி.ஆர்

# தப்பியோடிய காதலர்கள்... இடித்து விழுத்திய உறவுகள்!

## இளம் காதலர்களின் பதறவைக்கும் கடைசி நிமிடங்கள்

ஸ்கானன்

மட்டக்களப்பில் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்ட யுவதி வீதி விபத்தில் பலி என்ற செய்தி அண்மையில் வெளியாகியிருந்தது. விபத்தில் யுவதி பலியானதாக முதலில் வெளியான செய்திக்கு மாறாக, அதிர்ச்சியளிக்கும் பல செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. யுவதி எதிர்பாராத விபத்தில் மரணமாகவில்லை, காரால் மோதியதில் மரணமாகியுள்ளார் என்பதே தற்போது வெளியாகியுள்ள தகவல்.

கடந்த 23ம் திகதி இரவு பத்து தொடக்கம் பத்தரை மணிக்குள் இந்த சம்பவம் நடந்திருக்கலாமென கருதப்படுகிறது. காதலனுடன் தப்பிச் சென்ற யுவதியை உறவினர்களின் கார் துரத்திச் சென்று, பின்னால் மோதியதில் அசம்பாவிதம் நடந்துள்ளது.

மட்டக்களப்பு ஏரிக்கரை வீதியை சேர்ந்தவர் ஸ்ரீதரன் திவ்யசாகரி. 1998 இல் பிறந்தவர். மட்டக்களப்பு திமிலைதீவை சேர்ந்த வாலிபர் ஒருவருடன் சிலகாலத்திற்கு முன்பிருந்து காதல் தொடர்பு ஏற்பட்டிருந்தது. இருவரும் உயிருக்கு உயிராக காதலித்திருக்கிறார்கள். பராயமடையாத வயதிலிருந்தே இந்த காதல் ஏற்பட்டது.

இந்தகாதல் விவகாரம் திவ்யசாகரியின் வீட்டில் தெரிய வந்தபோது கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்த காதலை வீட்டில் யாருமே ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த காதல் விவகாரம் பூதாகரமாகி, மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு, பொலிசார் தலையிட்டு சமரசமாக தீர்த்து வைத்துள்ளனர்.

திவ்யசாகரியின் காதலை மறக்க செய்ய தாயார் வேறொரு உத்தியை கையாண்டார். அவரை இந்தியாவில் கல்வி கற்க அனுப்பினால், காதலை மறந்து விடுவார் என நினைத்தார்.

எனினும், அவரின் எதிர்பார்ப்பிற்கு மாறாகவே சம்பவங்கள் நடந்தன. உறவினர்களிற்கு தெரியாமல், இந்தியாவிலிருந்தபடி மட்டக்களப்பு காதலனுடன் தொலைபேசி தொடர்பை பேணி வந்தார். இந்த நிலையில், ஒரு வருடம் கல்வியை பூர்த்தி செய்துவிட்டு, சில நாட்களின் முன்னர்தான் மீண்டும் மட்டக்களப்பிற்கு திவ்யசாகரி வந்தார்.

மட்டக்களப்பிற்கு வந்ததும், தனது காதலனை காண்பதற்கு ஆர்வம் கொண்டிருந்தார். எனினும், வீட்டில் கடுமையான கண்காணிப்பு இருந்ததால் அவரால் நினைத்ததை போல காதலனை சந்திக்க முடியவில்லை. இதனால் வேறு விதமான உத்தியொன்றை அவர் கையாண்டார். அதுதான், இந்த விபரீதம் வரை சென்றுள்ளது.

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு திவ்யசாகரி குடும்பம் சென்றது. திருக்கோணேஸ்வரத்திற்கு செல்ல வேண்டுமென திவ்யசாகரி விரும்பியதாலேயே இந்த பயணம் திட்டமிடப்பட்டதாக கூறப்படுகிறது. திவ்யசாகரியின் தாயார், பெரியப்பா, கார் சாரதி ஆகியோர் திருகோணமலை சென்றனர். காதலனை சந்திப்பதற்கான ஏற்பாடாக திருகோணமலை பயணத்தை அவர் திட்டமிட்டிருக்கலாமென்ற சந்தேகமும் பொலிசாரிடம் உள்ளது.

எனினும், காதலனால் குறித்த நேரத்தில் திருகோணமலைக்கு செல்ல முடியவில்லை. இதற்குள் திவ்யசாகரி குடும்பம் திருகோணமலையிலிருந்து திரும்ப ஆரம்பித்தார்கள். இந்த பயணத்தின் போது தனது காதலனுடன் குறுந் தகவல் பரிமாற்றத்தில் திவ்யசாகரி ஈடுபட்டிருந்தார். தமது காரின் இலக்கம், ரகம் எல்லாவற்றையும் குறிப்பிட்டு, குறிப்பிட்ட இடமொன்றில் ஏதாவது காரணத்தை சொல்லி காரிலிருந்து இறங்குகிறேன், என்னை வந்து அழைத்து செல்லுங்கள் என காதலனிற்கு தகவல் அனுப்பியுள்ளார். அவர்களது குறுந்தகவல் உரையாடல் ஆதாரங்களும் தற்போது வெளியாகியுள்ளது.

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் சந்திவெளிக்கு அண்மையாக கார் வந்து கொண்டிருந்தபோது, காதலன் காரை அடையாளம் கண்டு பின்தொடர்ந்துள்ளார். இன்னொரு நண்பனையும் அழைத்துக்கொண்டு காதலன் வந்திருந்தார்.

காதலனை கண்டதும், அருகிலிருந்த கடையொன்றில் தேனீர் குடிக்க காரை நிறுத்தும்படி திவ்யசாகரி கேட்டுள்ளார். காதலனும் பின்தொடரும் விடயத்தை அறியாமல் கார் நிறுத்தப்பட்டிருக்கிறது. காரிலிருந்து இறங்கிய திவ்யசாகரி உறவினர்கள் எதிர்பார்க்காத தருணத்தில், அருகில் வந்த காதலனின் மோட்டார் சைக்கிளில் ஏறியுள்ளார். காதலன், திவ்யா, பின்னால் காதலனின் நண்பன் உட்கார, மோட்டார்சைக்கிள் மின்னலாக பறந்து சென்றது. கார் அவர்களை விரட்டி சென்றது.

தம்மை பின்பக்கமாக கார் மோதியதாக மோட்டார்சைக்கிளில் இருந்த இளைஞர்கள் பொலிசாரிடம் வாக்குமூலமளித்துள்ளனர். முதலாம் தடவை மோதியபோது, மோட்டார்சைக்கிளின் பின்னால் இருந்த காதலனின் நண்பனின் காலில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும், மோட்டார் சைக்கிள் நிறுத்தாமல் சென்றது. இரண்டாம்முறையும் கார் பின்னாலிருந்து மோதியதில், மோட்டார்சைக்கிளில் இருந்தவர்கள் தூக்கி வீசப்பட்டனர்.

தமது தலைக்கவசங்களை பறித்து காரில் வந்த திவ்யசாகரியின் பெரியப்பாவும், கார்ச்சாரதியும் தாக்கியதாக இளைஞர்கள் வாக்குமூலமளித்துள்ளனர். தம்மை தாக்கிய பின், காதலியை பிடித்து காரில் ஏறுமாறு அவர்கள் கூறியதாகவும், காதலி மறுத்தபோது அவரது தலையில் தலைக்கவசத்தால் பலமாக தாக்கியதாகவும், காதலன் வாக்குமூலமளித்துள்ளார்.


இந்த கைகலப்பை அவதானித்த பிரதேசவாசிகள் ஒன்றுகூடி, திவ்யசாகரியின் பெரியப்பாவையும், கார் சாரதியையும் தாக்கியுள்ளனர். உடனடியாக பொலிசாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் நிலைமையை கட்டுப்படுத்தி, நோயாளர் காவு வண்டி மூலம் காயமடைந்த திவ்யசாகரி, காதலன், காதலனின் நண்பனை சந்திவெளி பிரதேசவைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். திவ்யசாகரியின் பெரியப்பா, கார்ச்சாரதியை பொலிசார் கைது செய்து கொண்டு சென்றனர்.

தலையில் படுகாயமடைந்த திவ்யசாகரி மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு, சிகிச்சை பலனின்றி மறுநாள் காலையில் மரணமடைந்தார். காதலனும், காதலனின் நண்பனும் இருபது வயதானவர்கள். அவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

திவ்யசாகரியின் உடல் பிரேதப்பரிசோதனை முடிந்து ஞாயிறன்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. யுவதியின் பெரியப்பாவான தவராஜா வசந்தராசபிள்ளை (வயது 66), கார் சாரதியான மாணிக்கவாசகர் பகிரதன் (35) ஆகியோரை ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றபதில் நீதிவான் வினோபா இந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை யூலை 7ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த சம்பவம் மட்டக்களப்பில் பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சினிமா பாணியில் நடந்த இந்த சம்பவத்தில் யார் மீது குற்றம் சொல்வது? பெற்று சீராட்டி வளர்த்த பெற்றவர்களை தூசாக மதித்து உதறிச்செல்லும் முதிர்ச்சியடையாத காதலின் வேகமா, பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்துகொள்ளாமல் இருக்கும் பெற்றவர்களின் வறட்டு கௌரவமா இந்த அனர்த்தத்திற்கு காரணம்? காலம்காலமாக நீடித்து வரும் இந்த விவாதத்திற்கு விடையில்லை. அதனால்தான் திவ்யசாகரிகளை நம்மால் பாதுகாக்க முடியாமல் இருக்கிறது.






MA Holidays & Travels
Ticketing/Hotel/Holiday/Visa/Insurance
All Countries Air Ticketing




261, Power House Road,
Jaffna.
021 300 3888
077 00 666 56
Maholidaysmayu@gmail.com
www.maholiday.com
B.Mayuran
Managing Director

## அதற்காகத்தான் பிகினி அணிந்தாராம்!

சினிமா நடிகைகளிற்கு ஈடாக சின்னத்திரை நடிகைகளும் தற்போது பிரபலமாகி வருகிறார்கள். சினிமா நாயகிகள் பரபரப்பை கூட்ட செய்யும் உத்திகளை சின்னத்திரை நடிகைகளும் கையாள தொடங்கிவிட்டனர். அப்படியொரு உத்தியைத்தான் இந்தி சீரியல் நடிகை அனேரி வஞ்சானி கையாண்டிருக்கிறார். இவர் இந்தியில் சீரியல், ரியாலிட்டி சோக்களில் நடித்து பிரபலமானவர். அவற்றிலேயே படு கவர்ச்சியாகத்தான் நடிப்பார். அண்மையில் தனது இணையப்பக்கத்தில் படு கவர்ச்சியாக பிகினி போஸ் கொடுத்திருந்தார். இந்த படத்தை அதிகமானவர்கள் பார்த்திருந்தார்கள். என்றாலும், இப்படி கவர்ச்சிப்படங்களை வெளியிடலாமா என்றும் ஒப்புக்கு கேட்டும் வைத்தனர். இவர்களிற்கெல்லாம் அம்மணி என்ன பதில் சொல்லியிருக்கிறார் தெரியுமா?. யோகா செய்ய வசதியாக அப்படி உடையணிந்தாராம்.

## துரைபாண்டிக்கு கிடைத்த கௌரவம்!

தற்போது ஒளிபரப்பாகி வரும் குலதெய்வம் தொடரில் துரைபாண்டி என்ற முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார் ஈ.வி.கணேஷ்பாபு. தொகுப்பாளராக அறிமுகமாகி தென்பாண்டி சிங்கம் தொடரில் உதவி இயக்குனராகி இப்போது சீரியல் நடிகராகி விட்டார். இருபதிற்கு மேற்பட்ட தொடர்களில் நடித்துவிட்டார். முப்பதிற்கு மேற்பட்ட படங்களிலும் நடித்துவிட்டார். யமுனா என்ற படத்தையும் இயக்கியுள்ளார். இவரது கலைச்சேவையை பாராட்டி பெங்களூரில் உள்ள இந்தியன் வெர்ச்சுவல் யூனிவர்சிற்றி கௌரவ டொக்ரர் பட்டம் வழங்கியுள்ளது. சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்த தனக்கு இப்படியொரு கௌரவம் கிடைக்குமென நினைக்கவேயில்லையென அவர் நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

## பிரியங்கா சும்மா விட்டதன் ரகசியம்!

விஜய் டிவியின் சூப்பர் சிங்கர், கலக்கப்போவது யாரு, கிங்ஸ் ஆப் டான்ஸ் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருபவர் பிரியங்கா. நிகழ்ச்சிகளை கலகலப்பாக தொகுப்பதில் வல்லவர். இணையத்தளத்தில் ரசிகர்களின் கேள்விகளிற்கும் ஜாலியாக பதிலளிப்பார். கடந்த ஆண்டுதான் இவருக்கு திருமணம் நடந்தது. இந்தநிலையில், ரசிகர் ஒருவர் பிரியங்காவை ரென்சன் ஆக்கியுள்ளார். பிரியங்காவிற்கும் கணவருக்கும் விவாகரத்து நிச்சயம் என ருவிற் செய்துள்ளார். இதை பார்த்த பிரியங்கா, "மக்களே இவனை என்ன செய்யலாம்" என கேட்டார். ருவிற் செய்தவர் அஜித் படத்தை புரபைல் பிக்சராக வைத்திருந்தார். "தல படத்தை வைத்திருப்பதால் உன்னை சும்மா விடுகிறேன்" என பதிலளித்துள்ளார்.

## ஆபாசபடத்தை வெளியிட்ட நித்யா!

சுந்தர் சி, குஷ்பூ இணைந்து தயாரிக்கும் தொடர் நந்தினி. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என நான்கு மொழிகளில் ஒளிபரப்பாகி வருகிறது. இதில் கங்கா என்ற பாத்திரத்தில் நித்யா ராம் நடிக்கிறார். தமிழில் அவள் என்ற தொடரில் ஏற்கனவே நடித்திருக்கிறார். இவரது இணையப்பக்கத்தில் சென்னையை சேர்ந்த வாலிபர் ஒருவர் அடிக்கடி ஆபாச படங்களை அனுப்பி வந்திருக்கிறார். சிறிதுகாலம் இதை சகித்து வந்த நித்யா, அண்மையில் அந்த ரசிகரின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார். "இப்படியான செயல்களை எந்தப்பெண்ணிற்கும் இவன் செய்யக்கூடாது என்பதற்காகவே படத்தை வெளியிடுகிறேன். பெண்களை மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும்" என அதற்கு விளக்கமும் கொடுத்துள்ளார்.




இருஷா ஹிருணி

## மீண்டும் வரும் பூஜா!

மிஸ் கேரளா, மிஸ் கோயம்புத்தூர் டைட்டில்களை வென்றவர் பூஜா. ஒருகாலத்தில் கொடிகட்டி பறந்த எஸ்எஸ் மியூசிக்கின் நட்சத்திர தொகுப்பாளினி. அந்த சனல் நிறுத்தப்பட்ட பின்னர் திரைப்படங்களில் நடிக்க தொடங்கினார். ஹீரோயினின் தோழி, சகோதரி வேடங்கள்தான் கிடைத்தன. பின்னர் சின்னத்திரையில் நடித்தார். திருமணமானதும் சின்னத்திரையை விட்டும் ஒதுங்கினார். சிறிய இடைவெளியின் பின் மீண்டும் நடிக்க வந்திருக்கிறார். அதுவும் திரைப்படங்களில் நாயகியாக. இரண்டு தெலுங்கு, ஒரு மலையாளப்படங்களில் நடிக்கவுள்ளாராம். அதை தொடர்ந்து சின்னத்திரை தொகுப்பாளினியாக தொடர திட்டமிட்டுள்ளாராம்.

# வண்ணத் திரை


அனுஸ்ரீ ராவ்

## மொட்டை ராஜேந்திரனுக்கு ஜோடியாக திவ்யா

தமிழ் சனல் ஒன்றில் பாலியல் மருத்துவம் குறித்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்குபவர் திவ்யா. வம்சம், கிருஷ்ணதாசி, பொம்மலாட்டம் என சில சீரியல்களில் நடித்துள்ளார். அத்துடன் சதுரங்க வேட்டை, பூலோகம், இனிமே இப்படித்தான் என சில படங்களில் நடித்த இவர் தற்போது கல்யாண் இயக்கத்தில் பிரபு தேவா நடித்து வரும் குலேபகாவலி படத்தில் நடிக்கவுள்ளார். பிரபு தேவாவுக்கு ஜோடியாகவா என நீங்கள் உடனே நினைப்பீர்கள். ஆனால் இவர் மொட்டை ராஜேந்திரனுக்கு மனைவியாக நடிக்க இருக்கிறாராம். இருவரும் ஜோடி சேருவது இதுவே முதன்முறை. ஸ்ரீஆரோக்கியா ஹெல்த் ரூ எஜுகேஷன் என்ற அறக்கட்டளையை ஆரம்பித்துள்ள திவ்யா, இதன் மூலம் ஏழைகளுக்கு கல்வி மற்றும் தொழிலுக்கான உதவிகளை செய்து வருகிறார்.

## ஏ.ஆர்.ரகுமானுடன் ஜீ.வி.பிரகாஷ் கூட்டு

விஜய், அட்லீயின் மெர்சல் பட தகவல்கள் நாளுக்கு நாள் வந்து கொண்டே இருக்கிறது. இந்த படத்தில் நான் நடிக்கிறேன் என்று ஒவ்வொரு பிரபலங்களாக இப்போது தான் தெரிவித்து வருகின்றனர். நீண்ட வருடங்களுக்கு பிறகு அதாவது அர்ஜுனின் முதல்வன் (1999) படத்தை அடுத்து ஏ.ஆர். ரகுமான் இசையமைப்பில் ஒரு பாடல் பாட இருக்கிறார் ஜி.வி. பிரகாஷ். என்னுடைய பேவரெட் ஏ.ஆர். ரகுமான் இசையில் விஜய் அண்ணா நடித்திருக்கும் மெர்சல் படத்தில் ஒரு பாடல் பாடுவது மகிழ்ச்சி என்று தன்னுடைய டுவிட்டரில் ஜி.வி. பிரகாஷ் கூறியுள்ளார்.

## முகத்தை மூடி படம் பார்த்த சயீஷா

பிரபலங்கள் சாதாரணமாக வெளியில் செல்ல முடியாது. அதுவும் அவர்கள் படம் திரையரங்கில் ஓடிக் கொண்டிருக்கும் போது எந்த ஒரு பாதுகாப்பு இல்லாமல் அந்த அரங்கில் ரசிகர்களுடன் படம் பார்க்கவும் முடியாது. ஜெயம் ரவி, சயீஷா நடித்த வனமகன் படம் வெளியாகி இருந்தது. இப்படத்தை ரசிகர்களுடன் பார்க்க விரும்பிய சயீஷா பிரபல வெற்றி திரையரங்கில் ரசிகர்களுடன் படம் பார்த்துள்ளார். அதுவும் முகத்தில் துணி கொண்டு மூடியபடி படம் பார்த்துள்ளார்.

## பாடலாசிரியராகிறார் விஜயலட்சுமி

பிரபல இயக்குனர் அகத்தியனின் மகளான விஜயலட்சுமி 'சென்னை 600028' மற்றும் 'அஞ்சாதே' படங்களில் நடித்து முத்திரை பதித்தவர். தற்பொழுது அவர் தயாரிப்பாளர் அவதாரம் எடுத்தது மட்டுமல்ல பாடலாசிரியராகவும் திகழ்கிறார். கிருஷ்ணா மற்றும் ஆனந்தி நடிக்கும் 'பண்டிகை' படத்தின் தயாரிப்பாளரான இவர் இப்படத்தின் பாடல் ஒன்று எழுதியுள்ளார். விஜயலட்சுமியை பாடல் எழுத வைத்தது குறித்து இயக்குனர் கூறும்போது, 'பண்டிகை' படத்தின் ஒரு பாடலுக்காக நாங்கள் சில பாடலாசிரியர்களை அணுகினோம். அவர்கள் தந்த வரிகளில் எனக்கு திருப்தியளிக்காத நிலையில், விஜயலட்சுமி தான் எழுதலாமா என கேட்டார். நானும் தடுக்கவில்லை. ஒரு சில நாட்கள் கழித்து அவர் எழுதியிருந்த வரிகளை படித்து மலைத்து போனேன். இசைக்கும் கதை நிலவரத்திற்கும் மிக சரியாக பொருந்தும் வரிகள்! 'அடியே' என தொடங்கும் இப்பாடல் வரிகளை நானும் இசையமைப்பாளர் ஆர்.எச்.விக்ரமும் மிகவும் ரசித்தோம். ஜூலை 7 ஆம் தேதி ரிலீஸ் ஆகவுள்ளது என்றார்.

## பலூனில் பறக்கவுள்ள ரஜினி

ரஜினி நடிப்பில் கடைசியாக வெளிவந்த 'கபாலி' படத்திற்கு இதுவரை இந்திய சினிமாவில் எந்தவொரு படத்திற்கும் இல்லாத அளவுக்கு விளம்பரங்கள் செய்யப்பட்டது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அந்த வரிசையில் தற்போது ரஜினி நடித்துள்ள '2.ஓ' படத்திற்கும் பிரம்மாண்ட அளவில் விளம்பரங்கள் செய்ய படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர். லைக்கா புரொடக்சன்ஸ் தயாரித்துள்ள இப்படத்தின் இறுதிக்கட்ட பணிகள் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. ஆனால், படத்திற்கான விளம்பரங்கள் இதுவரை தொடங்கப்படவே இல்லை. அடுத்த வருடம் ஜனவரியில் இப்படத்தை வெளியிட திட்டமிட்டுள்ள நிலையில், விரைவில் இப்படத்தை விளம்பரப்படுத்தும் பணிகளை தொடங்கவுள்ளதாக லைக்கா நிறுவனம் தலைமை செயல் நிர்வாகி ராஜு மகாலிங்கம் தெரிவித்துள்ளார். வெப்பக்காற்று அடங்கிய 100 அடி உயர பலூனில் 2.ஓ படத்திற்கான விளம்பரங்கள் இடம்பெறப்போவதாக அறிவித்துள்ளார். வரும் செவ்வாய் கிழமை லாஸ் ஏஞ்சல்ஸில் ஹாலிவுட் சிளம்பரத்தில் இந்த பலூனை பறக்கவிடப் போகிறார்களாம். மேலும், லண்டன், துபாய், சான்பிரான்சிஸ்கோ, ஆஸ்திரேலியா, ஐரோப்பா மற்றும் மேற்காசிய நாடுகளிலும் இந்த பலூனை பறக்கவிடப் போகிறார்களாம். இந்தியாவின் பல்வேறு நகரங்களுக்கும் இந்த வெப்பக்காற்று பலூனை கொண்டு வர திட்டமிட்டுள்ளார்களாம். நாடு முழுவதும் உள்ள பிரபல திரைப்பட நட்சத்திரங்கள் இந்த பலூனில் சவாரி செய்யப்போவதாகவும் கூறப்படுகிறது. இந்தப் படத்தை பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கர் இயக்கியுள்ளார். எமி ஜாக்சன், பாலிவுட் நடிகர் அக்‌ஷய்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஏ.ஆர்.ரகுமான் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.


படைப்புக்கு முந்தைய மனதின் ரசானுபவத்தை, மனம் மென்று விழுங்கிய சாறின் சுவையை வாசகனுக்குக் கடத்துவதில்தான் இருக்கிறது கவிதா அனுபவம்.

க.வை.பழனிசாமி




த.ஜெயசீலன்

நட்டாற்றில் நின்ற நாலுலட்சம் பேரினோலம்
எட்டவில்லை தோட்டா
வேலிகளைக் கடந்தெங்கும்.
கண்டுமே காணாத கனவான்களும்... நேரே
கண்டுமே கண்மூடிக் கடந்த கடவுளரும்
பெருமௌனம் பூணப் பரவிற்று போர்க்காய்ச்சல்!
ஒருபக்கம் உப்புக் கடல்
செங்கொடி போலே
மறுபக்கம் இரத்தக் கடல்
இவற்றிடையே
குடிக்கத் துளியுமின்றிக்
குலைந்ததையோ நூறுஉடல்!
'பெட்டி அடிபட்ட' முற்றுகைச் சிறைக்குள்ளே
விட்ட எறிகணை வெடிமழையால் சிதறியவர்
அந்தந்த இடத்தில் அப்படியே சமாதியாக
கந்தகப் புகைக்காற்றே
சுவாசமாச்சு மிஞ்சியோர்க்கு!
புத்தம் எரிக்கப் பொசுங்கிய தேன்கூடாய்
அவ்விடம் கருக
அவ்விடம் இருந்து மீண்டு
மௌனித்தன வாய்கள்.
மௌனித்தன கரங்கள்.
மௌனித்தன உடல்கள்.
மௌனித்தன மனங்கள்.
மௌனித்தது உணர்வு.
மௌனித்தது கனவு.
மௌனித்தது ரோசம்.
மௌனித்தது மானம்.
மௌனித்தது துவக்கின் மனச்சாட்சி.
உயிர்பிழைத்தோர் வெளியேற...
எண்ணற்ற புதைகுழிகள், சாம்பல்
விளைந்து தணலாறா வெட்டை வெளிகளிடை,
"யுத்தமும் இறந்த" தென்று எழுந்ததொரு பேரோசை!
இத்தனைக்குப் பின்னும்..
நடந்தது களையெடுப்பு!
வெற்றிடமே சூழ்ந்ததனால்
வெளிவரலை வேட்டினொலி!
தங்கிந்... திசையெங்கும் பரவ
வழியின்றி... அன்று
தேங்கிற்று வரலாறு!
தேங்கியே மாசடைய...
ஓங்கிற்று நாற்றம்!
ஒருகோடி வகைக் கிருமி
கேத்தாய்ப் பெருக சமூகக் கிளைகளெங்கும்
தொற்றின தொடர்நோய்கள்.
தொலைந்தது சுக வாழ்வு.
அத்தனை வடு சுவடும் அழிந்தும் அழியாதும்
இருக்கும் அமைதிபூத்த இந்நாளில்
இறுதிவரை
மறுதலிக்கப் பட்ட நீதியினை
மீண்டுமொரு சுடரேற்றித் தேடித்
துடிக்கிறது நினைவேந்தல்.



# சுதந்திரக் கனவுகள்

வி.அஜந்தன்
மருக்காரம்பளை
வவுனியா

எங்கள் தெருக்களில்
இன்றும்
குருதித்துளிகள்
சிந்திக்கொண்டிருக்கிறது

இரவுகள்
சுதந்திரப் போர்வைகளை சூறையாடி
நிர்வாண விம்பங்களை
அம்பலப்படுத்திக் கொள்கின்றது

எம் தேசத்தின்
காலக்கோடுகள் யாவும்
காலாவதியானவை
ஆதலால்
விழிகள் இரண்டிலும்
ஆழ்ந்த குழிவெட்டி எம்
சுதந்திரக் கனவுகள்
புதைக்கப்படலாயிற்று

ஒளியில்லாச் சூரியன் எங்களது
விழியோரக் கண்ணீரும் எங்களதே,
நிம்மதி இல்லா வானம்

நிரந்தரமற்ற நிலம்
காதல் செய்யாக் காற்று
விருப்பில்லாத விடியல்
இவை அத்தனையும் எங்களதே

பிளிறல்களின் விசும்பல்களையும்
அலறல்களையும் கேட்டே
அயர்ந்து கொள்ளும்
கண்களும் எங்களதே

கண்கள் கட்டப்பட்ட பின்
எம் சுதந்திரக் கனவுகளும்
களவாடப்பட்டு விட்டது

தளிர்களைத் துளிர்க்க முனைந்த
சாலைகளோடு
இப்போது
பாலை மணலுக்காய்
எம் பாதங்கள் பரிட்சயமாகி விட்டது

எங்கள்
உரத்த குரல்களும்

உயிர்ச் சுவாசிப்பின்
உணர்வலைகளும்
அடக்கி அடக்கியே
ஊமையாகிப் போனவை

எம் பூமித்தாயின்
விலா எலும்புகளில்
விரத்தியின் விம்பங்கள்
நிழலாடுகின்றன

இருப்பினும் நாங்கள்
நித்தியமானவர்கள்
அதனால் தான்
நியாயங்களைக் கூறிக் கூறியே
நிமிர்ந்து நிற்கின்றோம்
நிராயுதபாணிகளாக

எல்லாம் இழந்த பின்னும்
இன்றும் எம் தேசத்தில்
குருதித்துளிகள்
சிந்தியபடியே

# அகதி!

அஸ்தீர் (கொழும்பு)



ரேகை படிந்த வார்த்தைகள்
ஆருடம் சொல்கிறது.
ஆயிரமாயிரம் ஆன்ம ஞானம்
தேடினும்.
பிறிதொரு நாளில் பிரபஞ்சமதில்
வாழினும், வீழினும்,
தொடரினும்,
தீராதந்த மௌனத்தாகமேயதாம்..

தடம்புரண்டோர் தானாயிரம்
தரணியில் தாட்சண்யமாய்
கோருவதென்னவோ
அமைதியைத் தானாம்!

கானல் விளைதேசமது.
பாழ்வெளியில் பாலைவனமாய்,
பறைச்சாற்ற பக்குவமாய்,
பரிதவித்து நிற்கிறோம் அய்யா
நேசமற்ற நெடுந்தொடர் அகதியாய்.

வாழ்வாதாரம் ஏதுமின்றி,
வரண்ட வாய்காலில்,
நினைவுகளை
உணவாய்க் கொண்டும்,
கனவுகளில் கண்ணீர்
அருந்தியும்,
அடுத்துவரும் நாளுக்காய்
நாழிகைகளை நகர்துகிறோம்
நப்பாசையில் நாளும்..

விடியலுக்காய் திசைவழி காட்ட
உதித்த கதிரவனோ,
உதிர்க்கிறான் பொதுவெளியெங்கும்
கருமையதை கருணை
இல்லாமலேயே,

சூரியகிரகணமாம்!
'ஏனய்யா உமக்கும் எம் வலி
வலித்ததோ' என்றோம்
புலம்பெயர்ந்தோருக்குப்
புதிய அத்தியாயமா
புத்திபேதலித்ததா உமக்கென்றான்.

நியாயமா எனக்கேட்டால்
விதியது உன்னது என்கிறான்.

வேலிகள் மட்டுமே எம் சேவகம்.
மானிடர்களிடம் மறுசீக்கோரியும்,
அகதியென்ற வார்த்தைதனை
அழித்தார்கள் இல்லையே..

அகதிகள்தாம்,
ஆதரவற்றோர்தாம்,
அன்பை இழந்தோர்தாம்,
ஆனாலும் மதிதனை
ஆதரித்தோர் யாம்

அறிவீரோ நீவீர்.

அகதியென்றெம்மை அனாச்சாரமாய்
ஆசீர்வதித்தோரே,
உங்களுக்கோர் செய்தி!
அகிலமதில் கல்வியெனும்
ஒரு துளி நீருக்காய்
காத்திருக்கிறோம்.
அதில் எதிர்பட்ட பொழுதுகள்
எல்லாம்,
எம் விசைப் பொழுதுகள்தான்..
விடா முயற்சியது
விட்டகழ்ந்ததில்லை
எம்மை என்றும் அறிவீர்.

மின்சாரம் இல்லாவிடில் என்ன
மின்மினிப் பூச்சிகள் உண்டெமக்கு,
விருட்சமாய் நிச்சயம் என்றாவதும்
நாம் நிற்போம்.
அன்று நிழல் பெற நீரும் வாரீர்!




# வங்கியில் நியமனமும் வாடிக்கையாளர் அறிய வேண்டியவையும்

எம்.ரமணன் LLB



வங்கிகளின் வாடிக்கையாளர் திடீரென மரணமடையும் போது அவரின் வங்கிக்கணக்கில் உள்ள பணம் மற்றும் வங்கியின் பாதுகாப்பிலுள்ள அசையும் சொத்துக்கள் எவ்வாறு அவரின் சட்டரீதியான உரித்தாளிகளுக்கு மீளச்செலுத்தப்படல் வேண்டுமென்பது தொடர்பில் இலங்கையின் சட்டமுறைமையில் ஒரு நீண்டபடிமுறையும் காலதாமதமும் பலநடைமுறைச் சிக்கல்களும் காணப்படுகின்றது. இதனை குறைக்கும நோக்கில் நியமனம் (Nomination) எனும் ஏற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் மக்களிடையே நியமனம் தொடர்பான பூரண விளக்கமென்பது குறைவாகவே காணப்படுகின்றது.

குடியியல் நடபடிமுறைக் கோவை (திருத்தப்பட்டது) இல14 1993ன் Civil Procedure Code (Amendment) No14 of 1993) பிரிவு544ற்கு அமைவாக கொண்டு வரப்பட்ட நியமனம் மரணமடைந்த வாடிக்கையாளர் கணக்குகள் தொடர்பான விடயங்களை இலகுபடுத்துகின்றது. "நியமனம் (Nomination)" என்பது வங்கியின் நிதி நிறுவனங்களின் வாடிக்கையாளர் தனதுபெயரில் உள்ள கணக்குகள் மற்றும் அசையும் சொத்துக்களினை தனது மரணத்தின் பின்னர் குறிப்பிட்ட நபருக்கு வழங்குவதற்கு வங்கி நிதி நிறுவனங்களிற்கு எழுத்துமூலம் பணிக்கின்ற ஏற்பாடாகும்.

பிரிவு 544ன்உப பிரிவு(i)ன் படி 16 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு நபரும்



தனது பெயரில் உள்ள பின்வரும் விடயங்களுக்கு பிறிதொரு நபரை உரித்தாளராக (Nominee) நியமிக்க முடியும்.

அ) வங்கிச் சட்டம் இல30 1988ற்குகீழ் உள்ள அங்கீகாரம் பெற்ற வணிக வங்கிகள் அல்லது அங்கீகாரம் பெற்ற விசேட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் வாடிக்கையாளரின் பெயரிலுள்ள நடைமுறைக் கணக்கு தவிர்ந்த ஏனைய கணக்குகள்

ஆ) வாடிக்கையாளரின் கம்பனிச் சட்டம் பிரிவு7 2007ற்கு அமைவாக பதியப்பட்ட கம்பனிகளின் பங்குகள்.

இ) காப்புறுதி நிறுவக சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற காப்புறுதிக் கம்பனிகளிலுள்ள வாடிக்கையாளரின் ஆயுள் காப்புறுதிகள்

ஈ) நிதிக் கம்பனிச் சட்டம் இல78 1988ற்கு கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் வாடிக்கையாளரின் பெயரிலுள்ள வைப்புக்கள்

உ) வங்கிச் சட்டம் இல30 1988ன்கீழ் உள்ள அங்கீகாரம் பெற்ற வணிகவங்கிகள் அல்லது அங்கீகாரம் பெற்ற விசேட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் வாடிக்கையாளரின் பெயரில் உள்ள பாதுகாப்பு பெட்டகங்கள்

ஊ) கைமாற்றத்தக்க நிதியியல் சாதனங்கள் தவிர்ந்த ஏனைய கம்பனிகள் சட்டஅங்கீகாரம் உள்ள நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் நிதியியல் சாதனங்கள் (2005 மாசிமாதம் பிரிவு544(i) திருத்தப்பட்டமைக்குப் பின்)

இத்தகைய சொத்துக்களுக்கு மேற்கொள்ளப்படும் நியமனமானது பிரிவு 544(ii)ன் படி குறித்த வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்படும் கடைசி விருப்பாவணத்தை (Last will) விட மேலோங்கும். உதாரணமாக வாடிக்கையாளர் ஒருவர் தனது கணக்குகள் தொடர்பில் மூன்றாம் நபர் ஒருவரை பின்னுரிமையாளராக நியமித்துவிட்டு பின்னர் தனது கடைசி விருப்பாவணத்தில் தனது கணக்குகளில் உள்ள பணம் தனது குடும்பத்தினருக்குச் சேரும் என்று குறிப்பிட்டு பின் மரணமடைந்தால் அவரின் நடைமுறைக் கணக்கு தவிர்ந்த ஏனைய அனைத்து கணக்குகளிலும் உள்ள பணம் நியமிக்கப்பட்ட மூன்றாம் நபரையே சாரும்.

பொதுவாக வாடிக்கையாளர் நியமனம் வழங்கும்போது அதற்குரிய விண்ணப்பப்படிவம் அவரால் பூர்த்தி செய்யப்பட்டு வங்கி உத்தியோகத்தர் சமாதான நீதவான் சாட்சி ஒப்பமிட்டு வங்கி முகாமையாளரால் பதவி முத்திரை மற்றும் ஒப்பமிட்டு உறுதிசெய்து படிவத்தின் ஒரு பிரதி வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டு மூலப்பிரதி மற்றும் பின் உரித்தாளரின் தேசிய அடையாள அட்டை கடவுச்சீட்டு பிரதி இணைக்கப்பட்டு வங்கியில் பேணப்படும். குறித்த வாடிக்கையாளர் இறந்ததும் பிரிவு544(iv)ன் பிரகாரம் பின்னுரித்தாளர் நியமித்த நபரின் (Nominator) இறப்புச் சான்றிதழையும் தனது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு அவர் பணம் மற்றும் அசையும் சொத்துக்களைக் கோரும்போது பிரிவு544(V)ன்படி வங்கியால் ஒரு முழுமையான விடுவிப்பே மேற்கொள்ளப்படும். இதன்பின்னர் வங்கி எந்தவிதமான பொறுப்புக்கூறலுக்கும் உட்படாது என்பதுடன் வங்கியின் கடப்பாடு சரியான முறையில் பின்னுரித்தாளரை அடையாளம் காணுதல் மட்டுமே ஆகும்.

பிரிவு 544(iii)ற்கு அமைவாக ஒரு நியமனம் பின்வரும் சந்தர்ப்பங்களில் ரத்து செய்யப்படும்

அ) நியமித்த நபர் உயிரோடு இருக்கும் போது நியமிக்கப்பட்டவர் இறந்தால்

ஆ) நியமித்த நபர் குறித்த நியமனத்தை எழுத்துமூலமாக மீளப்பெற்றால்

இ) நியமித்த நபர் மற்றொரு நியமனத்தை பின்னர் மேற்கொண்டால்

இவ் நியமனம் தொடர்பில் வாடிக்கையாளர் மத்தியில் குழப்பங்கள் ஏற்படக் காரணம் நியமனம் தொடர்பாக வங்கிச் சட்டம், நாணயவிதிச் சட்டம் போன்ற சட்டங்களில் இது தொடர்பான ஏற்பாடுகள் குறிப்பிடப்படாமல் குடியியல் நடபடிமுறைக் கோவையில் மட்டும் குறிப்பிடப் பட்டிருப்பதால் போதுமான அளவு எல்லோராலும் அறிய முடிவதில்லை. மேலும் வாடிக்கையாளர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வங்கி ஊழியர்களின் தூண்டுதலின் பெயரிலேயே நியமனங்களை மேற்கொள்கின்றார்களே தவிர அது தொடர்பில் பூரண விளக்கத்தினைப் பெறுவதில்லை. இதைவிட வாடிக்கையாளர்கள் நியமனம் வழங்கியதற்குரிய பிரதியை பெற்றுக்கொள்ளத் தவறல் அல்லது அதனைத் தொலைத்து விடுவதால் தாம் நியமனம் வழங்கியதை சிறிதுகாலத்தின் பின் மறந்துவிடுவதுடன் பின்னர் கடைசி விருப்பாவணத்தை மேற்கொள்கின்றபோது அது செல்லுபடியற்றதாகின்றது.

இவ் நியமனம் தொடர்பாக பல நீதிமன்றத் தீர்ப்புச் சட்டங்களும் இல்லாமையால் இது தொடர்பான பொருள்கோடல்களும் சரியான முறையில் மக்களுக்கு விளக்கப்படுவதில்லை. இவ் நியமனம் தொடர்பான பூரண விளக்கத்தினை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொண்டால் மரணமடைந்த வாடிக்கையாளர்களின் பெயரில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள அசையும் சொத்துக்கள் மற்றும் பண வைப்புக்களை அவரின் உரித்தாளர்கள் சட்டசிக்கல்கள் மற்றும் காலதாமதமின்றி பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை குறித்த வாடிக்கையாளரின் உரித்தல்லாத மூன்றாம் நபர் பெற்றுக் கொள்வதற்கும் வழிவகுக்கும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவிடயம் ஆகும்.






# அற்ப சுகம்... அநாதரவாக இறந்த குழந்தை!

## வவுனியா கள்ளக்காதலால் நடந்த அதிர்ச்சி சம்பவம்

வன்னிமது

தமிழர்களின் வாழ்வியலில் உறவுகள் மிக முக்கியமான ஒன்று. அதிலும் தாய் சேய் உறவானது மிக உன்னதமான இடத்தை பிடிக்கின்றது. அப்படிப்பட்ட உறவு தற்போது குறைவடைந்து செல்வதுடன் சில ஏற்றுக்கொள்ள முடியாததும் அருவருக்க தக்கதுமான விடயங்கள் தமிழர்களின் கலாச்சாரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளன. ஒரு தாய் பத்துத்திங்கள் பிள்ளையை சுமந்து பிரசவிக்கின்றாள். அவ்வாறு பெற்றெடுத்த தன் பிள்ளையை ஆவலுடனும் ஆசையுடனும் பார்க்கவும், ஏந்தவும் துடிக்கின்ற துடிப்பு அபரிமிதமானது. ஆனால் பெற்ற பிள்ளையை குப்பை தொட்டியில் போடுவதும் கழிப்பறையில் விட்டுச்செல்வதுமே தற்போது தினசரி பத்திரிகைகளில் மிக முக்கியமான செய்தியாக மாறியுள்ளது.


இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுவதற்கு மிகமுக்கியமான காரணமாக சமுகத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாத தகாத உறவின் மூலம் ஏற்படும் கர்ப்பமே ஆகும். மேற்கத்தேய நாடுகளை பொறுத்தவரை இவை ஒரு சர்வசாதாரண ஒரு விடயம். ஆனால் இலங்கையை பொறுத்தவரை அதிலும் குறிப்பாக தமிழர்கள் மத்தியில் இது ஒருகலாச்சார சீர்கேடாகவும், தமிழ் மக்களால் நூற்றாண்டுகளாக கட்டிக்காத்துவரும் விழுமியங்களிற்கு ஒவ்வாத ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. ஏன்எனில் தமிழ் சமூக, கலாச்சார அடிப்படையில் ஒருவனுக்கு ஒருத்தி என்பதே. அதை மனிதர்களுக்கு புரியும்படி இந்துக்கடவுளான இராமபிரானே வாழ்ந்து காட்டியுள்ளார். இது ஆணுக்கு மட்டுமன்றி பெண்ணுக்கும் பொருந்தும். இதை விடுத்து ஒரு யுவதி பிற ஆண்களுடன் கூடுபவளாக இருக்கின்ற பட்சத்தில் அவளை பரத்தையர்கள் என்று சொல்லுவார்கள்.

இப்பரத்தையர்கள் தமது ஏதோவொரு தேவைக்காக பிற ஆண்களுடன் கூடுபவர்களாக இருப்பர். இப்படிப்பட்டவர்கள் சில சமயங்களில் பாதுகாப்பற்ற முறையில் கூடும்போதுகர்ப்பம்தரிக்கின்றனர். இதனை உலகிற்கு எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெரியாமல் மூடி மறைக்கின்றனர். இவ்வாறான நிலையில் பிறக்கின்ற குழந்தைகளே குப்பை தொட்டிகளில் தவளும் நிலைக்கு உள்ளாகின்றது. சில வேளைகளில் பிறந்து அநாதரவாகி மரணத்தையும் தழுவுகின்றது.

இதேபோன்ற ஒரு சிசுவின் மரணம் அண்மையில் வவுனியா ஈஸ்வரிபுரத்தில் நடந்துள்ளது. இருபத்து ஏழு வயதே ஆன சரோஜா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) இரண்டு பெண்பிள்ளைகளின் தாய். கணவன் இரண்டு வருடங்களிற்கு முன்னர் பாலைப்பழம் பிடுங்கச்சென்று மரத்தில் இருந்து வீழ்ந்து படுத்த படுக்கையாக இருந்து இறந்துள்ளான். அதன் பின்னர் சிதம்பரபுரத்தில் உள்ள தனது தாயாரின் வீட்டில் வசித்து வந்துள்ளாள். எனினும் மறவன்குளம், ஈஸ்வரிபுரத்தில் உள்ள தனது தமக்கையின் வீட்டிலும் சில வாரங்கள் தங்கிச்செல்வது வழமையாக இருந்துள்ளது. கணவனை சிறு வயதில் இழந்தமையினால் தனது இரண்டு பெண்பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகக் கூடாது என்பதற்காக வீட்டு வேலைகளில் ஈடுபட்டு தன் குடும்பத்தை காப்பாற்றி வந்துள்ளார்.

இவ்வறான நிலைமையில் கணவனை இழந்து ஆதரவற்று இருப்பவள். அதிலும் சிறுவயது, அழகானவள் என்றவுடன் சில ஆடவர்களின் கண்கள் சரோஜாவின் மீது விழுந்ததுடன், சரோஜாவிற்கு உதவி செய்யவும் தொடங்கினர். இவ்வாறான செயற்பாடு சரோஜாவுடனான நெருக்கத்தை அதிகரிக்க செய்தது. இவ் நெருக்கம் அவர்கள் சரோஜாவிடம் இருந்து என்ன எதிர்பார்த்தார்களோ அதை நிறைவேற்ற ஏதுவானது. அதை சரோஜா புரிந்து அதற்கேற்றாற் போல் நடந்துகொண்டாள். இவ்வாறு சரோஜாவிடம் பேருந்து வாகன சாரதி உட்பட சிலர் அதிக நெருக்கம் காட்டினர். இதன் விளைவு பிள்ளை ஒன்றை சுமக்க வேண்டிய நிலைமைக்கு கொண்டுவந்தது. இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் சரோஜா தவித்தாள். ஐந்து நிமிட சந்தோசம் ஆயுளுக்கும் வினையானதே என்ற எண்ணமும் குற்ற உணர்ச்சியும் ஏற்பட்டது. இதனால் தான் கரப்;பம் தரித்தமையை சமூகத்திற்கு மறைத்தாள்.

ஒரு பெண் தான் கர்பிணி இல்லை என்பதை எவ்வளவு காலம்தான் மறைக்க முடியும். மாதங்கள் செல்லச்செல்ல வயிறு பெருக்க ஆரம்பித்தது. அதன் விளைவு ஊரவர்கள் என்ன என்று கேட்க ஆரம்பித்தனர். சரோஜா கேட்பவர்களிடம் தனது வயிற்றில் கட்டி வளர்கின்றது என்று கூறியுள்ளார். இவ்வாறான நிலைமையில் பேறுகாலம் நெருங்க ஆரம்பித்தது. சரோஜாவிற்கு என்ன செய்வது என்று தெரியாமல் தலையை பிய்க்க ஆரம்பித்தாள். வேறு வழியின்றி ஈஸ்வரிபுரத்தில் உள்ள தனது தமக்கை வீட்டிற்கு சென்றாள்.




இந்நிலையில் கடந்த 20.06.2017 மலசலகூடத்தில் மாலை 05.00 மணியளவில் ஆண் குழந்தையினை பெற்றெடுத்து மலசகூடத்திலேயே விட்டு விட்டு மீண்டும் வீட்டிற்குள் சென்றுவிட்டாள். குழந்தை மலசல கூட வாசலில் தனது இறுதி நிமிடங்களை சுவாசித்து கொண்டு எறும்புகளினால் கடிக்கப்பட்ட நிலையில் இருந்துள்ளது. இதனை கண்ணுற்ற அயலவர்கள் ஈச்சங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இத்தகவலின் அடிப்படையில் பொலிஸார் அவ்விடம் விரைந்து பிள்ளை மற்றும் தாயை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இருந்த போதும் குழந்தை பிறந்த போது சுத்தம் செய்யாமை போன்ற காரணங்களினால் இறந்துள்ளது. மேலும் சரோஜா அதீத இரத்த போக்கு காரணமாக வைத்தியசாலையில் தொடர்ந்தும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இங்கு சரோஜாஜா ஒரு ஐந்து நிமிட சந்தோசத்திற்காக சென்று வயிற்றில் குழந்தையை வேண்டா வெறுப்பாக சுமந்து அதனை பெற்றெடுத்து, ஒருசில நிமிடங்களில் மரணத்தை பரிசளித்துள்ளார். இதில் தாய்மை என்ற எண்ணமே இல்லாமல் மிருகம் போல் செயற்பட்டுள்ளார். ஏன்எனில் இக்குழந்தை சமூக கட்டுப்பாடுகளிற்கு உட்படாத ஒன்று. அதனை சமூகத்திற்கு பயந்து இப்படியான காரியங்களில் சரோஜா ஈடுபட்டாலும், அதனை குழந்தை கருவுற்ற மூன்று மாதங்களிற்கு முன்னாலே செய்திருந்திருக்கலாம். அதனை செய்யாது இப்படியொரு உயிர் பிரிய மூல காரணமாக மாறியுள்ளார். இதுதவிர்ந்து இக்குழந்தை வேண்டாம் என்றால் வைத்தியசாலையின் ஊடாக நீதிமன்றத்தின் மூலம் சிறுவர் காப்பகத்திற்கு வழங்கியிருக்கலாம். அவ்வாறு செய்யும் பொழுது அந்த பிஞ்சு உயிர் பிழைத்திருக்கும், அதுவும் செய்யாமல் ஒரு சிசுவை எறும்புகள் மொய்க்க விட்டு செல்வது, தாய்மையை ஆராதிக்கும் தமிழினத்தில் பிறந்த எந்த பெண்ணுலாம் ஏற்றுக்கொள்ள முடியாத செயல்.

இதுதவிர்ந்து இந்நிகழ்விற்கு அரசு, சமூகம் மற்றும் குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் ஆகியோரின் பொறுப்பு ஒன்றும் உள்ளது. ஏன்எனில் சமூகத்தில் இவ்வாறு சந்தேகத்தை தூண்டக்கூடிய மாற்றத்திற்கு உள்ளான பெண்கள் பற்றி குடும்பநல சுகாதார உத்தியோகத்தருக்கு வழங்க வேண்டிய சமூக பொறுப்பு சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் உள்ளது. அவ்வாறான சமூக பொறுப்பு இச்சம்பவத்தில் யாருக்கும் இருந்ததாக தெரியவில்லை. அத்துடன் ஒரு பிரதேசத்திற்குரிய குடும்பநல உத்தியோகத்தர் கற்பினி தாய்மார்களின் வீடுகளிற்கு சென்று பார்வையிடுவது அவர்களின் முக்கிய கடமையில் ஒன்று. இக்கடமையை எத்தனை குடும்பநல உத்தியோகத்தர்கள் ஒழுங்காக செய்கின்றனர் என்ற கேள்வி உள்ளது. அத்துடன் இவ்வாறான கடமைகளின் மூலம் அப்பிரதேச மக்களுக்கும் உத்தியோகத்தருக்கும் இடையில் நல்ல உறவு ஏற்படுகின்றது. இதன் மூலம் அப்பிரதேசம் தொடர்பாக குடும்பநல உத்தியோகத்தருக்கு தேவையான தகவல்கள் பெற ஏதுவாகின்றது. அத்துடன் குடும்பநல உத்தியோகத்தர் அவருக்கு கடமையாற்றும் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அவக்கான விடுதியில் தங்க வேண்டும். ஆனால் இங்கு அவ்வாறான நிலைமையும் இல்லை உறவும் ஏற்படவில்லை.

இதைவிடுத்து ஒழுங்காக கடமையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அரசினால் இடமாற்றம் செய்யும் போது புதிதாக வரும் உத்தியோகத்தர் திரும்பவும் முதலில் இருந்து மக்களுடன் உறவினை பேன வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. ஆரம்ப காலங்களில் இவ்வாறான வேலைகளினை இலகுபடுத்த சுகாதார தொண்டர்கள் இருந்தமையினால் இது போன்ற சம்பவங்கள் அரிதாவே இருந்தது. தற்போது இவ்வாறான சம்பவங்கள் தொடர்கதையாக மாறும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமை இனிவரும் காலங்களில் ஏற்படாமல் தவிர்க்க அரசு மற்றும் சுகாதார பணிமனை போன்ற சம்மந்தப்பட்ட அலுவலகங்கள் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் இவ்வாறான சம்பவங்களை ஆரம்பத்திலேயே தடுக்க முடிவதோடு. சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் இதில் அக்கறையுள்ளவர்களாக இருப்பதும் அவசியம்.

# ஐபோனில் இதெல்லாம் செய்யலாமென்று தெரியுமா?

ஐபோன் அம்சங்கள் பயன்படுத்த சிரமமாக இருக்கும் என்ற கருத்து நிலவி வருகின்றது. இதன் காரணமாக ஐபோனில் வழங்கப்பட்டிருக்கும் பல அம்சங்கள் பலருக்கும் தெரிவதில்லை. இங்கு உங்களுக்கு தெரிந்திராத ஐபோன் கமரா அம்சங்கள் சிலவற்றை குறிப்பிடுகிறோம்.



க்ரிட் லைன்களின் உதவியோடு போட்டோகளை சிறப்பாக அலைன் செய்ய உதவும். இதை செயல்படுத்த செட்டிங்ஸ் போட்டோஸ் கமரா சென்று க்ரிட் ஒப்ஷனை தேர்வு செய்யுங்கள்.
அப்பிள் இயர்பட்ளை பயன்படுத்தினால், வால்யூம் பட்டன்களின் மூலம் போட்டோ எடுக்க முடியும்.



வால்யூம் பட்டன்களை ஷட்டராக பயன்படுத்த முடியும்.




போகஸ் செய்தால் புகைப்படத்தை துல்லியமாக எடுக்க முடியும்




ஷட்டர் பட்டன்களின் மூலம் ஸ்கிரீனில் பர்ஸ்ட் மோடு எனேபிள் செய்ய முடியும், இது ஒரே நொடியில் 10 புகைப்படங்களை எடுக்கும்.




ப்ளாஷ் பயன்படுத்தாமல் சிறந்த புகைப்படங்களை எடுக்க முடியும்.




ஐபோனில் இருக்கும் ஆட்டோ ஹெச்டிஆர் மோட் மூன்று புகைப்படங்களை மூன்று வித எக்ஸ்போஷர்களில் எடுக்க உதவுகின்றது.




ஐபோனில டைமர் செட் செய்து போட்டோவில் நீங்களும் இடம் பெற முடியும்.




போனினை அன் லொக் செய்யாமல் லாலொக் ஸ்கிரீனில் இருக்கும் கமரா ஐகானினை க்ளிக் செய்து போட்டோ எடுக்க முடியும்.



# புதிய பல்சர் என்எஸ்160 பைக்

தென்னாசிய சந்தையில் புதிய பல்சர் என்எஸ்160 பைக்கை ஓசையில்லாமல் விற்பனைக்கு அறிமுகம் செய்துள்ளது பஜாஜ் நிறுவனம். கடந்த ஆண்டு துருக்கி மற்றும் லத்தீன் அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்ட பல்சர் என்எஸ்160 பைக் இந்தியாவில் நீண்ட நாட்களாக சோதனை செய்யப்பட்டு வந்தது. தற்போது இந்தியாவில் அறிமுகம் ஆகியுள்ளது. வரும் வாரங்களில் தென்னாசியா முழுவதும் அறிமுகமாகவுள்ளது.

புதிய பல்சர் என்எஸ் 160 பைக் முன்னதாக கைவிடப்பட்ட 'பல்சர் ஏஎஸ்150' பைக்கை அடிப்படையாகக் கொண்டது. பல்சர் 150 பைக்குக்கு அடுத்த இடத்தில் இந்த புதிய என்எஸ்160 பைக் நிலைநிறுத்தப்படும். மேலும் இது என்எஸ் 200 பைக்கின் இளைய சகோதரனாக விளங்கும்.

இந்த பைக்கில் ஹாலோஜன் முகப்பு விளக்கு, ஸ்பிலிட் சீட்கள், எல்ஈடி பின்புற விளக்கு, டிஜிடல்அனலொக் கிளஸ்டர் பனல், அண்டர் பெல்லி எக்ஸ்ஹோஸ்ட் பைப், ஸ்பிலிட் க்ரேப் ரெயில்கள் ஆகியவை உள்ளன.

துருக்கியில் விற்பனையில் உள்ள பல்சர் என்எஸ்160 பைக்கில் சிங்கில் சனல் ஏபிஎஸ் பிரேக்கிங் சிஸ்டம் உள்ளது. ஆனால் தென்னாசியாவில் களமிறங்கும் என்எஸ்160ல் இது இடம்பெறாது என்பது ஒரு குறையாகவே உள்ளது.

புத்தம் புதிய பல்சர் என்எஸ்160 பைக்கில் ஒற்றை சிலிண்டர் கொண்ட 160சிசி, ஓயில் கூல்ட் இஞ்சின் இடம்பெற்றுள்ளது. இது அதிகபட்சமாக 15.05 பிஹச்பி ஆற்றலையும், 14.6 என்எம் டார்க்கையும் வெளிப்படுத்தவல்லது. இதில் 5 வேக கியர் பொக்ஸ் உள்ளது.

150160சிசி பைக் பிரிவில் டிவிஎஸ் அப்பாச்சி160, சுசுகி ஜிக்ஸர், யமஹா எஃப்இசட் எஸ், ஹொண்டா சிபி ஹார்னெட் 160 ஆகிய பலமான பைக் மொடல்களுடன் போட்டி போட இருக்கிறது புதிய பஜாஜ் பல்சர் என்எஸ்160 பைக். இலங்கையில் சுமார் 250,000 ரூபாவில் விற்பனையாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# புதிய யமஹா ஃபேஸர் 250 பைக்

ஜப்பானைச் சேர்ந்த யமஹா நிறுவனம் புதிய ஃபேஸர்250 பைக்கை சிறிது நாட்களாகவே இந்திய சாலைகளில் சோதனை செய்து வருகிறது. வரும் ஓகஸ்ட் 2017 முதல் முழு அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, ஒக்டோபர் 2017 முதல் ஷோரூம்களை அடைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஸ்போர்ட்ஸ் டூரர் வகையைச் சேர்ந்த புதிய யமஹா ஃபேஸர்250 பைக், ஃஎப்இசட்25 பைக்கின் வழித்தோன்றலாக இருக்கும்.

புதிய பைக்கின் ஒட்டுமொத்த டிசைனும் ஃஎப்இசட்25 பைக்கை தழுவி இருந்தாலும், இதன் முகப்பு முற்றிலும் ஏரோடைனமிக் வடிவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் ஃஎப்இசட்25 பைக்கில் உள்ளதைப் போன்றே இதில் எல்ஈடி ஹெட்லைட், இன்ஸ்ட்ருமெண்ட் கிளஸ்டர் ஆகியவை இடம்பெற்றிருக்கும்.

அதிகபட்சமாக 20 பிஹச்பி ஆற்றலையும், 20 என்எம் டார்க்கையும் வெளிப்படுத்தக்கூடிய ஒற்றை சிலிண்டர் கொண்ட 250சிசி ஓயில் கூல்ட் இஞ்சின் உள்ளது. இதில் 5 ஸ்பீடு கியர் பொக்ஸ் உள்ளது.

இருபக்கமும் டிஸ்க் பிரேக் இருக்கும். ஏபிஎஸ் பிரேக்கிங் சிஸ்டம் இதில் இடம்பெறாது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் அகலமான சீட் கொடுக்கப்பட்டுள்ளதால் தொலைதூர பயணங்களுக்கு ஏற்ற சொகுசை இந்த பைக் வழங்கும்.

இதன்விலை இலங்கையில் 420,000 ரூபாய் வரை விற்பனையாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.



# கடன் தொல்லைக்கு பரிகாரம்



கடன்பட்டார் நெஞ்சத்தை உவமையாககம்பர் ராமாயணத்தில் சொல்லியிருக்கிறார். கடன் தொல்லையை காலைச் சுற்றிய பாம்பு என்பர். கடன்தொல்லையில் இருந்து மீள ருணவிமோசன லட்சுமி நரசிம்மர் ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்வது நல்லது. இந்த துதி சமஸ்கிருதத்தில் இருப்பதால், படிக்க இயலாதவர்களுக்கு எளிமையான பரிகாரம் இருக்கிறது.


லட்சுமி நரசிம்மம் சரணம் பிரபத்யே என்ற மந்திரத்தை மாலை நேரத்தில் 108 முறை பாராயணம் செய்யவேண்டும். அப்போது லட்சுமி நரசிம்மருக்கு காய்ச்சிய பசும்பால் அல்லது பானகம் (எலுமிச்சை சாறு, தண்ணீர், வெல்லம் சேர்ந்த கலவை) பிரசாதமாக வைக்கவேண்டும். 48 நாட்கள் இந்த பூஜையைச் செய்தால் கடன் தொல்லையில் இருந்து விடுபட வழி உண்டாகும். தீராத பிரச்னைகள், செவ்வாய் தோஷத்தால் திருமணத்தடை ஏற்படுதல் நீங்கவும் இது சிறந்த பரிகாரம்.

# ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாற்றுவது ஏன்?



ராம ராவண யுத்தம் நடக்கிறது அப்போது ராமரையும் லக்குமணரையும் தன் தோளில் சுமந்து கொண்டுச் சென்றார் அனுமான் அப்போது ராவணன் சராமாரியாய் அம்பு தொடுக்க சக்திமிக்க அம்பால் அவர் தாக்கப்பட்டார். அந்தக் காயத்திற்கு மருந்தாக தன் உடம்பில் வெண்ணெய் பூசிக் கொண்டாராம்.

வெண்ணெய் சீக்கிரமாக உருகும் தன்மை உடையது அந்தவெண்ணை உருகுவதற்கு முன்பாகவே நாம் நினைத்த காரியம் நடந்து விடும் என்ற நம்பிக்கை, அதனால் வெண்ணெய் சார்த்தும் பழக்கம் உள்ளது.



# பெண்கள் ருத்ராட்சம் அணியலாமா?

ருத்திரன் என்ற பெயரில் இருந்து வந்ததே ருத்திராட்சம் ஆகும். சிவபெருமானின் முக்கண்களிலிருந்தும் தெறித்த ஆனந்தக் கண்ணீர் சொட்டுகளே ருத்திராட்சங்களாகின. மொத்தம் முப்பத்தெட்டு விதமான ருத்திராட்சங்கள் தோன்றின. வலது கண்ணிலிருந்து மஞ்சள் நிற ருத்திராட்சங்கள் பன்னிரண்டும், இடது கண்ணில் இருந்து பதினாறு வெண்ணிற ருத்திராட்சங்களும் தோன்றின. நெற்றிக் கண்ணிலிருந்து கருப்பு வண்ணத்தில் பத்து ருத்திராட்சங்கள் வெளிப்பட்டன.

ருத்திராட்சத்தை மனிதர்கள் அனைவரும் அணியலாம். ஆனால் இதனை அணிந்தவர்கள் மிகுந்தகட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும். தீட்டு இடங்களுக்கோ, இல்லத்திற்கோ செல்லக்கூடாது. தீட்டு ஆனவர் கைகளால் உணவு அருந்தக் கூடாது. அப்படி ஏதேனும் அறியாமல் நடந்து விட்டால் ருத்ராட்சத்தை தூய்மை செய்து பின்பு அணிந்தால் நன்மை தரும். மேலும், பெண்கள் ருத்திராட்சம் அணிந்திருந்தால் இரவில் கழற்றி பூஜை அறையில் வைத்து விட்டு காலை எழுந்து குளித்து விட்டு அணிய வேண்டும், மாதவிடாய் காலங்களில் இதனை கண்டிப்பாக தொடுதல் கூடாது.

குழந்தைகள் ருத்ராட்சம் அணிந்தால் ஜீரணம் சரியாக இருக்கும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும், கல்வியை சிறந்த முறையில் பயில்வார்கள். ருத்திராட்சங்கள் ஒரு முகம் முதல் 16 முகம் வரை கொண்ட பதினாறு வகை உண்டு. இதன் மேல் உள்ள கோட்டின் எண்ணிக்கையைக் கொண்டு ருத்திராட்சம் எத்தனை முகம் கொண்டது என்பதை அறியலாம். ருத்ராட்சம் செயற்கை பொருளாகவும் கிடைக்கிறது. இதனை அணிந்தால் பலன் கிடைக்காது. இயற்கை பொருளாக இருந்தால் மட்டுமே ஆன்மீக பயன் மற்றும் மருத்துவ பயன், ஜோதிட பயன்களையும் தரும்.

மேலும், குறிப்பிட்ட முகம் கொண்ட ருத்ராட்சங்களை இடது கையால் தொடவும், எடுக்கவும் கூடாது. அதே போல ஜெப ருத்ராட்ச மாலைகளை பிறர் தொடவும் அனுமதிக்க கூடாது. பிறருக்கு தரவும் கூடாது. ஜெபம் செய்யும் ருத்ராட்ச மாலைகளை கழுத்தில் அணிய கூடாது. கழுத்தில் அணியும் ருத்ராட்ச மாலையை ஜெபம் செய்ய பயன்படுத்தக் கூடாது.

# இந்தவார ராசி பலன்கள்

## 02.07.2016 – 08.07.2016



மேஷம்: சூரியன் பாக்ய ஸ்தானத்தைப் பார்ப்பதால் இடையூறுகள் நீங்கும். அரசாங்க விஷயங்கள் அனுகூலமாய் முடியும். செவ்வாயின் பார்வை காரணமாக சொத்து சம்பந்தமாக நல்ல முடிவு வரும். வழக்கில் ஏற்பட்ட தாமதம் நீங்கும். உத்யோகத்தில் சாதகமான காற்று வீசும். புதன் பலத்துடன் இருப்பதால் மாமன் வகை உறவுகளால் ஆதாயம் உண்டு. வண்டி வகையில் செலவுகள் இருக்கும். தனஸ்தான பலத்தால் அடமானத்தில் இருக்கும் நகைகளை மீட்பீர்கள். தொழில், வியாபாரம் சீராக இருக்கும். பண வரவு உண்டு. பழைய கடன்கள் அடைபடும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள்.

ரிஷபம்: தனம், குடும்பம், வாக்கு ஸ்தானத்தில் கூட்டுக்கிரக சேர்க்கை இருப்பதால் வரவு, செலவு இரண்டும் உண்டு. புதனின் பலம் காரணமாக போட்டி பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். கல்வி சம்பந்தமாக அலைச்சல், செலவுகள் இருக்கும். செவ்வாயின் பார்வை காரணமாக பிறர் விஷயங்களில் கருத்து கூறவேண்டாம். நிழல் கிரகங்களால் அலுவலகத்தில் பயணங்கள், டென்ஷன் வந்து நீங்கும். மாமனார் மூலம் மருத்துவ செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆன்மிக சுற்றுலா செல்வதற்கான ஏற்பாடுகளை செய்வீர்கள். பெண்கள் சமையல் செய்யும்போது கவனமாக இருப்பது அவசியம்.

மிதுனம்: ராசியில் சூரியன், புதன் இருப்பதால் மதில் மேல் பூனையாக இருந்த நிலை மாறி ஸ்திரமாக முடிவு எடுப்பீர்கள். கடல் கடந்து செல்வதற்கு விசா கிடைக்கும். சுக்கிரன் சொந்த வீட்டை பார்ப்பதால் ஆடம்பரப் பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். தொலைபேசி செய்தியால் மகிழ்ச்சி அடைவீர்கள். வேலை சம்பந்தமாக பெரிய நிறுவனத்தில் இருந்து அழைப்பு வரும். அலுவலகத்தில் உங்கள் திறமைக்கு பாராட்டு, அங்கீகாரம் கிடைக்கும். கணவரின் உடல்நலத்தில் கவனம் தேவை. உங்கள் அன்பான கோரிக்கையை பிள்ளைகள் நிறைவேற்றுவார்கள்.

கடகம்: குரு பகவானின் பார்வை காரணமாக முயற்சிகள் வெற்றியடையும். சுபவிஷயமாக முக்கிய முடிவு எடுப்பீர்கள். 2ல் ராகு தொடர்வதால் அலைச்சல், செலவுகள் இருக்கும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். பிள்ளைகள், பேரன், பேத்திகள் மூலம் செலவு இருக்கும். சொத்து சம்பந்தமாக முக்கிய முடிவு எடுப்பீர்கள். சுக்கிரன் பார்வை காரணமாக ஆரோக்கியம் மேம்படும். வழக்கு சம்பந்தமாக இருந்த தடைகள் நீங்கும். இடமாற்றத்திற்கான கிரக அமைப்புகள் உள்ளன. தொழில், வியாபாரம் சீராக இருக்கும். பண வரவுகள் ஏற்றம், இறக்கம் இருந்தாலும் பாதிப்பில்லை.

சிம்மம்: சூரியனின் பார்வை காரணமாக உற்சாகமாக செயல்படுவீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கதவைத் தட்டும். மகன், மகளுக்கு தோஷங்கள், தடைகள் நீங்கி திருமணம் கூடிவரும். புதன் பலமாக இருப்பதால் கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். வசதியான பெரிய வீட்டிற்கு குடிபோகும் நேரம் வந்துள்ளது! சனிபகவானின் சஞ்சாரம் காரணமாக அலைச்சல், பயணங்கள் இருக்கும். வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும். சொத்து சம்பந்தமாக யோசித்து முடிவு செய்யவும். வெளியூரில் வேலை செய்பவர்களுக்கு சொந்த ஊருக்கு மாற்றல் கிடைக்கும்.

கன்னி: குரு பகவானின் பார்வை அனுகூலமாக இருப்பதால் குழப்பத்தில் இருந்த விஷயங்கள் எல்லாம் சாதகமாக கூடிவரும். கணவன்மனைவி இடையே நெருக்கம் கூடும். புதன் பலம் காரணமாக பொன், பொருள் சேர்க்கை உண்டு. சொத்து சம்பந்தமாக ஒருமித்த கருத்து ஏற்படும். கர்ப்பமாக இருக்கும் பெண்கள் உரிய கவனத்துடன் இருப்பது அவசியம். சூரியனின் சஞ்சாரம் காரணமாக வீடு, கடையில் பராமரிப்புச் செலவுகள் உண்டாகும். பழைய வண்டியை மாற்றி புது வண்டி வாங்குவீர்கள். குலதெய்வ வழிபாடு நேர்த்திக்கடன்கள் இனிதே நிறைவேறும். மாமியார் மூலம் மருத்துவ செலவுகள் வரவாய்ப்புள்ளது.

துலாம்: ராசிநாதன் சுக்கிரன் ராசியை பார்ப்பதால் இல்லறம் இனிக்கும். மனைவியின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். புதன்கிழமை நீங்கள் எதிர்பார்த்த செய்தி வரும். செவ்வாயின் பார்வை காரணமாக ஜமீன், மத்தியஸ்தம் ஆகியவற்றிற்கு செல்ல வேண்டாம். சகோதர உறவுகளால் செலவுகள் உண்டாகும். குருபகவானின் பார்வை காரணமாக மருத்துவச் செலவுகள் குறையும். வெளிநாட்டில் இருப்பவர்கள் சொந்த ஊர் திரும்புவார்கள். தொழில் சாதகமாக இருக்கும். வேலையாட்களிடம் அனுசரணையாக போகவும்.

விருச்சிகம்: தன, வாக்குஸ்தானத்தை சூரியன், புதன், செவ்வாய் ஆகிய மூன்று கிரகங்கள் சேர்ந்து பார்ப்பதால் நிறை, குறைகள் உண்டு. வரவேண்டிய பணம் வசூல் ஆகும். மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி, ஆதாயம் உண்டு. குடும்பத்தில் சுபவிசேஷங்களுக்கு பிள்ளையார் சுழி போடுவீர்கள். அரசு, வங்கி விஷயங்கள் அலைச்சலுக்குப் பிறகு கூடிவரும். செல்போன், லேப்டாப் போன்ற சாதனங்கள் வாங்குவீர்கள். கேது 4ல் தொடர்வதால் தாயார் உடல்நலத்தில் கவனம் தேவை. சமையலறையில் பெண்கள் கவனமாக இருப்பது நல்லது. கடல் கடந்து செல்வதற்கான நேரம் வந்துள்ளது.

தனுசு: ராசிநாதன் குரு சுகஸ்தானத்தை பார்ப்பதால் மனநிறைவு மகிழ்ச்சி உண்டு. புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியத்தை எதிர்பார்க்கலாம். புதன் 7ல் பலம் பெறுவதால் குழப்பங்கள் நீங்கும். மகன், மகள் திருமண விஷயமாக முக்கிய முடிவு எடுப்பீர்கள். செவ்வாய் கேந்திரத்தில் இருப்பதால் சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். பெண்களுக்கு பிறந்த வீட்டில் இருந்து மகிழ்ச்சியான செய்தி வரும். உத்யோகத்தில் வேலைச்சுமை வந்து நீங்கும். திடீர் வெளியூர் மாற்றலுக்கு இடமுண்டு.

மகரம்: கேது வாக்குஸ்தானத்தில் தொடர்வதால் சாதக, பாதகங்கள் உண்டு. வாய் மூலம் பேசி தொழில் செய்பவர்கள் நிதானமாகப் பேசுவது நல்லது. சுக்கிரன் சாதகமாக இருப்பதால் தனலாபம் உண்டு. அசையும், அசையா சொத்து வாங்கும் யோகம் உள்ளது. குரு 9ல் இருப்பதால் தந்தையிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். சொத்து சம்பந்தமாக ஒருமித்த கருத்து ஏற்படும். பணியில் இருக்கும் பெண்களுக்கு சில இடையூறுகள் வரவாய்ப்புள்ளது. காலியாக இருக்கும் இடத்திற்கு புதிய வாடகைதாரர் வருவார். வியாபாரம் சீராக இருக்கும். புதிய தொழிலில் கால் பதிப்பதற்கான யோகம் உள்ளது.

கும்பம்: சுக்கிரன் பாக்யஸ்தானத்தைப் பார்ப்பதால் காரிய வெற்றி, பண வரவு, கோரிக்கை என்று குதூகலம் அடைவீர்கள். சந்திரனின் சஞ்சாரம் காரணமாக திடீர் பயணங்கள் வரும். 5ல் புதன் வலுவாக இருப்பதால் பிள்ளைகளால் மகிழ்ச்சி, பெருமை உண்டு. மருமகள் கர்ப்ப சம்பந்தமாக இனிக்கும் செய்தி வரும். மாணவர்கள் உயர்கல்வி பயில வாய்ப்பு கூடிவரும். சொந்த, பந்தங்களுடன் பிரசித்தி பெற்ற கோயில்களுக்குச் சென்று வருவீர்கள். வேலை சம்பந்தமாக தேர்வு எழுதியவர்களுக்கு நல்ல தகவல் வரும். நண்பர்களிடையே மனவருத்தம் வந்து நீங்கும்.

மீனம்: வார ஆரம்பத்தில் சில அலைச்சல், செலவுகள், அதிருப்தி இருந்தாலும் குருபகவானின் பார்வை காரணமாக சமாளித்து விடுவீர்கள். கைமாற்றாக கொடுத்த பணம் வசூலாகும். தாய்வழி உறவுகளால் செலவுகள் உண்டு. புதன் பலமாக இருப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கல்வி வகையில் அனுகூலம் உண்டு. செவ்வாயின் பார்வை காரணமாக எதிர்ப்புகள் நீங்கும். சொத்து வாங்கும் நேரம் வந்துள்ளது. உத்யோகம் சாதகமாக இருக்கும். வியாபாரம் கை கொடுக்கும். பணப்புழக்கம் உண்டு. புதிய ஓடர்கள் கிடைக்கும்.


தென்வியட்நாமில் சிறைக்கைதியொருவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த படம்

# கொல்ல வந்தவரை கண்டுபிடித்த பொட்டம்மானின் சாமர்த்தியம்!

பீஷ்மர்

மரணதண்டனை விதிக்கப்படகூடியவர்களின் விபரம் மட்டுமே பிரபாகரனின் பார்வைக்கு செல்லும். அவர் செய்த குற்றங்கள், அதை ஏற்றுக்கொண்ட வாக்குமூலம் அல்லது கையெழுத்து அதில் இருக்கும். மரணதண்டனை பரிந்துரையும் இருக்கும். சம்பந்தப்பட்டவரை பிரபாகரன் மீள் விசாரணை செய்ய வாய்ப்பில்லை. தனது புலனாய்வு கட்டமைப்பின் மீது பிரபாகரனிற்கு நம்பிக்கையிருந்தது. அதனடிப்படையில், மரணதண்டனை விதிக்க வேண்டிய குற்றவாளிகளின் பத்திரத்தின் கீழ் கையொப்பமிடுவார்.

கடந்த இதழில் குறிப்பிட்ட முன்னாள் கடற்புலி போராளி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, கடற்புலிகளின் தளபதி சூசை மீதான கொலைத்தாக்குதல் சதி முயற்சி. புதுக்குடியிருப்பில் அமைந்திருந்த சூசையின் முகாமில் அல்லது அதற்கு சமீபமாக தாக்குதல் திட்டமிட்டதாக அவரது விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கிளைமோர், கைக்குண்டு எது தேவையோ, வசதிக்கு தக்கதாக இராணுவ புலனாய்வுப்பிரிவினர் அதை தாக்குதலாளிக்கு கிடைக்க செய்வார்கள் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்பின் அவரது கண்கள் கட்டப்பட்டு, காலில் விலங்கிடப்பட்டு கடற்புலிகள் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு, தாக்குதல் திட்டத்தில் ஈடுபட்டது பற்றி மற்றைய போராளிகளிற்கு விரிவான விளக்கம் சொல்லப்பட்டது.

அவர் மரணதண்டனைக்குரிய கைதியென்ற விபரம் பிரபாகரனிடம் அனுப்பப்பட்டது. தன்னிடம் வரும் மரணதண்டனை விபரங்களை உடனடியாக பரிசீலிப்பதை பிரபாகரன் தவிர்த்து விடுவார். ஆபத்தானவர், உடனடி தண்டனை வழங்கப்படவேண்டியவர் என புலனாய்வுத் துறை நெருக்குதல் வழங்கினால்தான் கோவையை கையில் எடுப்பார். சூசை மீதான தாக்குதல்தாரியின் விபரமும் பிரபாகரனால் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இப்படியான ஒருநாளில்தான், பிரபாகரனிற்கு இன்னொரு கோவை வந்தது. புலனாய்வுப்பிரிவின் பொறுப்பாளர் பொட்டம்மானின் மீது கைக்குண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டார் என ஒருவரின் மரணதண்டனை கோவை பிரபாகரனிற்கு சென்றது. சுமார் பத்தொன்பது வயதேயான ஒரு இளைஞன். புலனாய்வுத்துறையில் இணைந்து சிறிது காலமேயான போராளி. பொட்டம்மானின் முகாமொன்றில் சிறிதுகாலம் பணியாற்றிவிட்டு, காந்தியின் நிர்வாகத்திற்கு மாறிய போராளி அவர்.

அவரது கோவையை படித்து பார்த்த பிரபாகரன் அதிர்ந்து விட்டார். சூசை, பொட்டம்மான் என முக்கிய தளபதிகளை இலக்கு வைத்து இராணுவத்தினர் நெருங்கி வந்திருக்கிறார்கள் என்பது பிரபாகரனை யோசிக்க வைத்தது. சமாதான காலப்பகுதியில் படைக்கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து ஏராளமானவர்கள் புலிகளில் இணைந்திருந்தார்கள். இதைவிட, போராளிகள் கூட படைக்கட்டுப்பாட்டு பகுதிகளிற்கு பல்வேறு காரணங்களிற்காக சென்று வந்தனர். இப்படியான நிலையில் முக்கிய தளபதிகளை இலக்கு வைத்த இராணுவம், தளபதிகளை நெருங்கியிருக்கிறதே என்ற விடயம் பிரபாகரனை எச்சரிக்கை அடையவைத்தது. உடனடியாக பொட்டம்மானை அழைத்தார்.

பொட்டம்மானை கொல்வதற்காக முயற்சித்த போராளியின் விசாரணை கோவையை பொட்டம்மானிடமே கொடுத்த பிரபாகரன், இதை ஆராய்ந்து, பொட்டம்மான் மற்றும் தளபதிகளின் பாதுகாப்பை மறுசீரமைக்குமாறு கூறினார். அந்த விசாரணை அறிக்கையில் பொட்டம்மானின் இருப்பிடத்தின் மீது கையெறி குண்டை வீசுவதற்கு குற்றம்சாட்டப்பட்டவர் திட்டமிட்டிருந்தார் என கூறப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையை வாங்கிக்கொண்டு சென்ற பொட்டம்மான் மறுநாள் திட்டமிட்டிருந்த சந்திப்புக்களை எல்லாம் இரத்து செய்துவிட்டு படித்தார். பொட்டம்மானின் புலனாய்வு மூளை எப்படியானதென்பது பிரபாகரனிற்கு தெரியும். எல்லா பொறுப்புக்களையும் கொடுத்து அவரை சிரமப்படுத்த கூடாதென்பதற்காகத்தான் உள்ளக புலனாய்வு பிரிவை காந்தியிடம் கொடுத்தார். இரண்டாம் மட்ட தளபதிகளின் வளர்ச்சிக்கும் இடம்கொடுக்க வேண்டுமல்லவா!

அந்த விசாரணை கோவை பொட்டம்மானிற்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. என்றாலும், புலனாய்வு விவகாரங்களில் விளையாட்டுத்தனமாக இருக்க முடியாது. அல்பா 2 சிறைச்சாலையில் ஏதோ விவகாரம் இருப்பதை பொட்டம்மான் புரிந்து கொண்டு விட்டார். ஆனால் அவர் நேரடியாக அதை ஆய்வுசெய்ய முயற்சிக்கவில்லை. காரணம், காந்தியின் நடவடிக்கைகள் பொட்டம்மானிற்கு ஏட்டிக்குப்போட்டியானவையாக இருந்தது. பொட்டம்மானை தவிர்த்து தன்னால் இயங்க முடியுமென நிறுவ முயன்று கொண்டிருந்தார். காந்தியின் மீது பிரபாகரனும் நம்பிக்கை வைத்திருந்த நிலையில், ஊகத்தினடிப்படையில் எதையும் கதைக்க அவர் விரும்பவில்லை. அல்பா 2 இல் என்ன நடக்கிறதென்பதை அறிய, தனது பாணியிலேயே ஒரு திட்டம் வகுத்தார். இந்த இடத்தில் இன்னொரு தகவலையும் பதிவு செய்ய வேண்டிய பொறுப்புணர்வு எனக்குள்ளது. உள்ளக பாதுகாப்பு பிரிவின் இரண்டாம் நிலை பொறுப்பில் இருந்த ஒருவர், அங்கு முறையற்ற விசாரணை நடக்கிறதென்பதை கண்டறிந்து பொட்டம்மானிற்கு தகவல் வழங்கினார் என கூறப்படுகிறது. பிரபாகரன் கோவையை வழங்கியதற்கு சில வாரங்களின் முன் அந்த சம்பவம் நடந்ததென்றும், அதனால்தான் அவர் துணிந்து ஒரு முடிவை எடுத்தார் என்றும் ஒரு தகவல் உள்ளது. எனினும், கட்டுரையாளரால் அதை உறுதிசெய்ய முடியவில்லை. பொட்டம்மானின் நடவடிக்கைகளின்படி, தனக்கு எழுந்த இயல்பான சந்தேகத்தினாலேயே அடுத்த அதிரடி முயற்சியில் இறங்கியதாக காட்டிக்கொண்டார்.

இரகசிய நடவடிக்கை போராளிகள் இருவரை தயார்படுத்தினார். அவர்கள் இராணுவத்தின் உளவாளிகளாக இருக்கலாமென்ற சந்தேகத்தில் புலிகளின் உள்




நடவடிக்கை அணிகளால் கடத்தி வரப்பட்டதாக ஒரு சம்பவத்தை புனைந்தார். இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்து கடத்தி வரப்பட்ட பாதுகாப்புத் துறை செயற்பாட்டாளர்கள் அல்பா 2 முகாமில் ஒப்படைக்கப்பட்டே விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். பொட்டம்மானால் தயார்படுத்தப்பட்டவர்கள் என்ற உண்மையை மட்டும் இறுதிவரை சொல்லக்கூடாதென்பதுதான் போராளிகளிற்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல். மற்றும்படி, அவர்கள் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் வாழ்ந்த இளைஞர்கள், சில இராணுவ அதிகாரிகளை மேலோட்டமாக தெரியும் என்பதுதான் உருவாக்கப்பட்ட பின்னணி.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்டது தயார்படுத்தப்பட்டவர்கள் என்பதை விசாரணையாளர்கள் அறிந்திருக்கவில்லை. அல்பா 2 விசாரணை பாணியில் விசாரணை செய்தனர். அல்பா 2 விசாரணை முறை பற்றி முன்னரே குறிப்பிட்டிருந்தோம். புலனாய்வுத்துறையின் பட்டியலில் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள இராணுவ புலனாய்வு அதிகாரிகள், அவர்களது தொலைபேசி இலக்கங்கள் இருக்கும். மன்னாரில் கைதாகி அல்பா 2 இற்கு வருபவர் எனில், அந்த பகுதியில் உள்ள இராணுவ புலனாய்வு அதிகாரியின் பெயரை குறிப்பிட்டு, அவருடன் தொடர்பிலிருந்து, நடவடிக்கைக்குதிட்டமிட்டார் என ஒரு கதை புனையப்பட்டது. பின்னர் ஒரு விசாரணை அறிக்கை தயார்செய்யப்பட்டது.

விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டவர்கள் இருவரும் முக்கிய நபர்கள், அவர்களது விசாரணை அறிக்கையை விரைவாக தருமாறு பொட்டம்மானிடமிருந்து விசாரணையாளர்களிற்கு தகவல் அனுப்பப்பட்டு கொண்டேயிருந்தது. இதனையடுத்து, முதற்கட்ட விசாரணை அறிக்கையை விசாரணையாளர்கள் அனுப்பினார்கள்.

அந்த அறிக்கையை படித்த பொட்டம்மானிற்கு தூக்கிவாரிப் போட்டது.

(தொடரும்)


மட்டு - தொப்பிகலவில் புலிகளின் தடுப்பில் இருந்தவர்கள்


வானம்பாடி சிறைச்சாலையின் உள்பகுதி



# தொடை, தோள்களுக்கு வலிமை தரும் கருடாசனம்

இந்த ஆசனம் கருட பட்சி போன்று தோற்றமளிக்கும். ஒரு தொடை மற்றொரு தொடையை பின்னப் படுவதால் தொடைகளும், தோள்களும் கைகளும் ஆரோக்கிய மடைகின்றன. அவற்றில் சுத்த ரத்தம் பாய்கிறது. இந்த ஆசனத்தை தொடர்ந்து செய்து வந்தால் விரைகள் பலப்படும். ஹேறனியா தடுக்கப்படும். இடுப்பு வலி, வாதம் நீங்கும். தொடைகள் பலப்படும். கொழுப்பு சத்து நீங்கும். கிரண்டைக்கால் தசைப்பிடிப்பு நீங்கும்.

**செய்முறை:** விரிப்பில் இரண்டு கால்களையும் சேர்த்து வைத்து நேராகா நிற்க வேண்டும். இரண்டு கைகளையும் நேராக நீட்டி இடது காலை நேராக வைத்து அதை வலது காலை ஒட்டினாற்போல் பாம்பு போல சுற்றிக்கொள்ள வேண்டும். அதன் பின் இரண்டு கைகளையும் ஒட்டினார் போல பாம்பு போல சுற்றிக்கொண்டு இரண்டு உள்ளங்கைகளையும் சேர்த்தார் போல வைக்க வேண்டும். இரண்டு உள்ளங்கைகளையும் முகத்திற்கு நேராக இருக்க வேண்டும்.

ஒன்றிலிருந்து ஐந்து நிமிடம் வரை நின்று கொண்டிருக்க வேண்டும். கைகளையும் கால் களையும்இறுக்கமாகசுற்றி பின்னிக்கொண்டு இருக்க வேண்டும். நரம்புகளும் தசைகளும் இறுக்கினாற்போல இருக்க வேண்டும். அதன் பின் கை,கால்களை தளர்த்திவிட்டு ஒரு நிமிடம் வரை ஓய்வு எடுக்க வேண்டும். அதன்பின் வலது காலை நேராக வைத்துக்கொண்டு அதில் இடது காலை பாம்புபோல சுற்ற வேண்டும்.

இரண்டு கைகளையும் முன்பு போல சுற்றி உள்ளங்கைகளை சேர்த்து எதிரில் வைக்க வேண்டும். இதற்கு முன்பிருந்த நிலையில் எவ்வளவு நேரம் நின்றோமோ அதே நேரத்தின் அளவில் வலது காலில் நின்றிருக்க வேண்டும். பின்பு எல்லாவற்றையும் தளர்த்தி ஒரு நிமிடம் ஓய்வு எடுக்கவேண்டும். இது போல மாறி மாறி ஐந்து முறை இந்த ஆசனத்தை செய்யலாம்.

ஆரம்பத்தில் ஒரு காலில் ஒரு நிமிடம் வரை நிற்பது கடினமாக இருந்தால் முப்பது நொடி வரை நிற்கலாம். இந்த ஆசனம் செய்து கால்களுக்கு பலம் வந்து விட்டால் படிப்படியாக இயல்பாக ஒரே காலில் நெடுநேரம் நிற்க முடியும். சிலர் ஆசனத்தில் நின்ற நிலையில் இரண்டு கை மணிக்கட்டுகளையும் சேர்த்து மூக்கு நுனியில் வைத்து கருடன் மூக்கு போல சேர்த்த உள்ளங்கைகளை கருடன் மூக்கு போல வைப்பார்கள். இதனால் மனம் ஒருநிலைபடும்.

பார்வையை கைகள் மீது வைத்தால் கண்களுக்கு பயிற்சியாகிறது. ஐந்து நிமிடம் இந்த ஆசனத்தை போட்டு பழகியபின் சுற்றிய கால் பெருவிரலை பூமியில் வைக்க முயற்சி செய்ய வேண்டும். அதனால் நின்ற கால் வளையும். இவ்வாறு செய்யும் போது விழுந்து விடாமல் பார்த்துக்கொள்வது நல்லது.



# உருளைக்கிழங்கு மிளகு வறுவல்

தேவையான பொருட்கள்: உருளைக்கிழங்கு 200 கிராம், வெங்காயம் 1, மிளகாய்த்தூள் 1 டீஸ்பூன், தனியாத்தூள் 2 அல்லது 3 டீஸ்பூன், மஞ்சள் தூள் 1/4 டீஸ்பூன், மிளகு 1 டீஸ்பூன், சீரகம் 1/2 டீஸ்பூன், காய்ந்த மிளகாய் 3, கறிவேப்பிலை சிறிது, எண்ணெய் 2 டேபிள்ஸ்பூன், உப்பு தேவைக்கேற்றவாறு

செய்முறை: மிளகை கொரகொரப்பாக பொடித்து கொள்ளவும். உருளைக்கிழங்கை வேக வைத்து, தோலை உரித்து விட்டு, சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.

வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் சீரகம், கறிவேப்பிலை, காய்ந்த மிளகாய் சேர்த்து தாளித்த பின்னர் வெங்காயத்தை போட்டு வதக்கவும்.

வெங்காயம் நன்றாக வதங்கியதும் அதில் உருளைக் கிழங்கைப் போட்டு சற்று வதக்கவும். அதன் பின் அதில் மிளகாய்த்தூள், தனியாத்தூள், மஞ்சள் தூள், உப்பு சேர்த்து நன்றாகப் பிரட்டி விடவும்.

அனைத்து சேர்த்து வரும் போது கடைசியில் மிளகுத்தூளைத் தூவி, மீண்டும் நன்றாகக் கிளறி விடவும். அடுப்பை சிறு தீயில் வைத்து, உருளைக்கிழங்கை அடிக்கடி திருப்பி விட்டு 5 முதல் 10 நிமிடங்கள் வரை அல்லது கிழங்கு பொன்னிறமாகும் வரை வைத்திருந்து எடுக்கவும். சூப்பரான சூப்பரான உருளைக்கிழங்கு மிளகு வறுவல் ரெடி.

# பெண்கள் மணக்கோலத்தில் அழகாக ஜொலிக்க டிப்ஸ்

திருமணத்துக்கு தேதி குறிக்கப்பட்டு நிச்சயம் செய்ததுமே முகத்தில் சந்தோஷ ரேகைகள் படர தொடங்கி விடும். திருமணத்திற்கு நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கையில், தங்களை அழகுப் படுத்திக்கொள்வதற்கு மணமகன்மணமகள் இருவருமே ஆர்வம் காட்டுவார்கள். அதிலும் பெண்கள் ஒப்பனையிலும், ஆடை அலங்காரத்திலும் மிகுந்த அக்கறை கொள்வார்கள். மணக்கோலத்தில் மகிழ்ச்சியுடன் திளைக்க ஒருசில விஷயங்களை கவனத்தில் கொள்வது அவசியம்.



* அழகாக தோற்றமளிக்க வேண்டும் என்பதற்காக வழக்கத்திற்கு மாறான புதிய அழகுசாதன பொருட்களை பயன்படுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்படலாம். அவை ஒவ்வாமை பிரச்சினையை ஏற்படுத்துமா? என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். ஒருசில வாரங்களுக்கு முன்பாகவே பரிசோதித்து பார்த்துவிட வேண்டும். இல்லாவிட்டால் மணநாளின்போது முகப்பொலிவுக்கு பங்கம் ஏற்பட்டு விடும். கூடுமானவரை புதிய அழகுசாதன பொருட்களை தவிர்ப்பது நல்லது.

● திருமண தேதி நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் தொலை தூர பயணங்களை தவிர்க்க வேண்டும். அவை சோர்வை ஏற்படுத்தி விடும். தேக நலனுக்கும் பாதகத்தை ஏற்படுத்தும். சருமம் வறட்சி பாதிப்புக்கு இலக்காகி பொலிவிழந்து போய்விடக்கூடும்.

● அழகுசாதனங்கள் மட்டுமே முகத்தை அழகுபடுத்துவதில்லை. ஆழ்ந்த தூக்கமும் முக அழகுக்கு வசீகரம் சேர்க்கும். திருமண நாள் நெருங்கும்போது வேலைப்பளுவும் கூடும். அது நிம்மதியான தூக்கத்திற்கு தடையை ஏற்படுத்தும். குடும்ப உறுப்பினர்களிடம் வேலைகளை பிரித்து கொடுத்துவிட வேண்டும். எட்டு மணி நேரமாவது ஆழ்ந்து தூங்க வேண்டும்.

நிறைய பேர் திருமணத்துக்கு ஒருசில நாட்களுக்கு முன்னரும், திருமணத்திற்கு முந்தைய நாளும் சரிவர தூங்காமல் திருமண வேலைகளை தடாலடியாக செய்துகொண்டிருப்பார்கள். நன்றாக தூங்கி எழுந்தால்தான் உடல் தோற்றத்தில் புத்துணர்ச்சியும், பிரகாசமும் வெளிப்படும். இல்லையென்றால் உடலும், முகமும், கண்களும், மனமும் சோர்ந்து போய் விடும்.

● திருமணம் நெருங்கும் வேளையில் கடினமான வேலைகள் எதையும் செய்யக் கூடாது. எதிர்பாராதவிதமாக காயங்கள் ஏற்பட்டுவிட்டால் தேவையில்லாத நெருக்கடிகள் ஏற்படக்கூடும்.

● திருமண வேலைகளில் மூழ்கிவிடும் மணமகனும், மணமகளும் சரிவர சாப்பிடமாட்டார்கள். ஒருசிலர் தங்களுக்கு பசியே எடுப்பதில்லை என்பார்கள். ஒருபோதும் சாப்பாட்டை தவிர்க்கக்கூடாது. சத்தான காய்கறிகள், பழ வகைகளை அதிகம் உட்கொள்ள வேண்டும். அவை சருமத்திற்கு பொலிவு சேர்க்கும். உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களையும் பெற முடியும்.

● முகத்திற்கு பேஷியல் செய்ய விருப்பப்படு பவர்கள் இரண்டு வாரத்திற்கு முன்பாகவே செய்துவிட வேண்டும். திருமணத்தின்போது இயற்கை பொருட்களை பயன்படுத்தி பேஷியல் செய்வதே நல்லது. பழங்களை கொண்டும் பேஷியல் செய்து முகத்தை பளபளப்பாக்கலாம்.


● திருமணத்தின்போது அணிவதற் காக வாங்கும் ஷூக்கள் கால்களுக்கு பொருத்தமாக இருக்கிறதா என்று முன்கூட்டியே அணிந்துபார்த்து பரிசோதித் துக்கொள்ள வேண்டும். திருமணத்தன்று வலிகளை ஏற்படுத்திவிடக்கூடாது. பெண்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே சிகை அலங்காரம் செய்வதற்கான ஒத்திகை பார்த்துவிட வேண்டும். திருமணத்திற்கு சில நாட்களுக்கு முன்பாக தலைமுடிகளை கத்தரித்து அலங்கரிப்பதை தவிர்க்க வேண்டும்.


# குழந்தையின் விக்கலை நிறுத்தலாம்

குழந்தைகளுக்கு விக்கல் எடுக்கும் போது அவர்களது உடலே ஒருவித ஆட்டத்தை ஏற்படுத்தும். அதைப் பார்த்தால், அனைத்து அம்மாக்களுக்கும் பயமாக இருக்கும். ஆகவே அத்தகைய விக்கலை நிறுத்துவதற்கு என்ன வழியென்று தெரிந்து கொண்டு, விரைவில் அதனை நிறுத்த முயற்சிக்க வேண்டும்.

அதைவிட்டு அது தானாக போய்விடும் என்று காத்துக் கொண்டிருந்தால்,பின் குழந்தை அழத்தொடங்கி, அதன் அழுகையை நிறுத்துவது பெரும் அவஸ்தையாகிவிடும். ஆகவே அத்தகைய விக்கலை உடனே நிறுத்துவதற்கு ஒருசில இயற்கை வழிகள் உள்ளன. அதைப் பின்பற்றி வந்தால், குழந்தையின் விக்கலை எளிதில் நிறுத்திவிடலாம். சரி, இப்போது அந்த விக்கலை எப்படியெல்லாம் செய்தால் நிறுத்திவிடலாம் என்று பார்ப்போம்.

- தாய்ப்பால் கொடுக்கும் போது குழந்தை அதிகப்படியான காற்றை விழுங்குகிறது. இதனால் அடிக்கடி விக்கல் ஏற்படுகிறது. எனவே குழந்தைகள் அதிகப்படியான காற்றை விழுங்காமல் இருப்பதற்கு, பால் கொடுக்கும் நேரத்தில் அவ்வப்போது ஒரே பக்கத்தில் கொடுக்காமல், அடிக்கடி நிலையை மாற்றிக் கொண்டே இருந்தால், குழந்தைகள் அதிகமான காற்றை விழுங்காதவாறு பார்த்துக் கொள்ளலாம். மேலும் விக்கலும் ஏற்படாமல் இருக்கும்.
- தாய்ப்பால் கொடுத்தப் பின்னர் குழந்தைகள் ஏப்பத்தை விட வேண்டும். அவ்வாறு ஏப்பம் வந்தால், தாய்ப்பாலின் போது, அவர்கள் விழுங்கிய காற்றானது வயிற்றில் இருந்து வெளியேறிவிடும். மேலும் சில சமயங்களில் அத்தகைய ஏப்பமும் குழந்தைகளுக்கு விக்கல் ஏற்படாமல் தடுக்கும்.
- குழந்தைகள் விக்கல் எடுக்கும் போது அவர்களது முதுகுப் பகுதியை மெதுவாக தேய்த்துக் கொடுத்தால், அவை விக்கலை நிறுத்திவிடும்.
- குழந்தைகளுக்கு விக்கல் ஏற்படாமல் இருப்பதற்கு, அவர்களுக்கு பசிக்கும் முன் தாய்ப்பால் கொடுத்துவிட வேண்டும். விக்கல் ஏற்படுவதற்கு ஒரு காரணம் வாயுத் தொல்லை என்றும் சொல்லலாம். எனவே குழந்தைகள் வாயுத் தொல்லையினால் தான் விக்கல் எடுக்கிறார்கள் என்றால், அதன் அறிகுறியாக அவர்கள் வாந்தி எடுப்பார்கள். ஆகவே அவர்களுக்கு வாயுத் தொல்லை ஏற்படாமல் இருப்பதற்கு, அவர்களுக்கு அவ்வப் போது பால் கொடுக்க வேண்டும்.
- தாய்ப்பால் கொடுத்தும் விக்கல் நிற்கவில்லையெனில், தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்திவிட வேண்டும். அதைவிட்டு, தொடர்ந்து கொடுத்தால், பின் குழந்தை வாந்தி எடுக்க ஆரம்பித்துவிடும். பின்னர் இதுவே அவர்களை பெரும் அவஸ்தைக் குள்ளாக்கிவிடும்.





# உடலில் போதியளவு நீர் இல்லாததை வெளிபடுத்தும் அறிகுறிகள்

உடலில் போதியளவு நீரின் அளவு இல்லாததை தான் நீர் வறட்சி என கூறுகிறோம். உடலில் நீர் சத்து / அளவு குறைந்தால் இரத்தத்தின் அடர்த்தி குறையும். இதனால், இரத்த ஓட்டம் தடைப்படும், உடல் உறுப்புகளின் செயல்பாடு குறையும், செரிமான சிக்கல்கள் ஏற்படும்.

சில அறிகுறிகளை வைத்து உங்கள் உடலில் நீர் வறட்சி ஏற்பட்டுள்ளதை அறியலாம். மேலும், நீங்கள் சரியான அளவு நீர் குடித்து வருகிறீர்கள் என்பதையும் சில அறிகுறிகளை வைத்து அறியலாம்.

**முகப்பரு:**உங்கள் உடலில் நீர் வறட்சி ஏற்பட்டுள்ளது அல்லது போதுயளவு நீர்சத்து இல்லை எனில், முகப்பரு அதிகரிக்க ஆரம்பிக்கும். நீங்கள் போதியளவு நீர் பருகினாலே உடலில் உள்ள நச்சுக்கள் வெளியேற்றப்பட்டு முகப்பரு ஏற்படுவதை குறைக்க முடியும்.

**வேனிற்கட்டி / வெங்குரு** (Sun Burn)

உடலில் போதியளவு நீர் இல்லையெனில், சூரிய கதிர் / வெப்பம் அதிகமாக வெளிப்படும் இடத்தில் அதிக நேரம் இருந்தால் வெங்குரு / வேனிற்கட்டி உருவாகும். நீங்கள் சரியான அளவு தண்ணீர் பருக ஆரம்பித்தால் தானாக இந்த பிரச்சனை குறைந்துவிடும்.

**கண்:** உடலில் நீர் வறட்சி ஏற்பட்டால், கண்களுக்கு கீழே குழி போல (Eye Bag) விழ ஆரம்பித்துவிடும்.

**சிவந்த மூக்கு:** மூக்கின் சருமம் வறட்சியாக மாறும். எரிச்சல் உணர்வு இருக்கும். உங்கள் உடலில் போதியளவு நீர் சத்து இல்லை என்பதை வெளிகாட்டும் அறிகுறி தான் இது.

**ஹேங்கோவர்:** உங்கள் உடலில் நீர்சத்து குறைவாக இருந்தால், ஆல்கஹோல் போதை அதிகமாக இருக்கும். நீங்கள் சரியான அளவு நீர் அன்றாடம் குடித்து வந்தாலே இதை தவிர்க்க முடியும்.

**உச்சந்தலை:** நீங்கள் சரியான அளவு நீர் குடித்து வருகிறீர்கள் என்பதற்கான முதல் அறிகுறி. உங்கள் உச்சந்தலை ஆரோக்கியமாக இருக்கும். அரிப்பு, எரிச்சல், பொடுகு, என எந்த தொல்லையும் இருக்காது.

**முடி, நகம்:** உடலில் நீர்ச்சத்து சரியாக இருந்தால் உங்கள் முடி மற்றும் நகங்கள் வலிமையாக இருக்கும். முடி உதிர்தல், உடைத்தல் பிரச்சனைகள் இருக்காது. (முடி உதிர்வது மரபணு சார்ந்தும் இருக்க வாய்ப்புகள் இருக்கின்றன)

**பிரகாசமான பார்வை:** நீர்வறட்சி ஏற்படுவதால் பொட்டாசியம் மற்றும் எலக்ட்ரோலைட் அளவில் குறைபாடு ஏற்பட்டு கண் ஆரோக்கியம் குறைகிறது. எனவே, சரியான அளவு தண்ணீர் ககுடித்து வந்தால், கண்கள் பளிச்சென ஆரோக்கியமாக இருக்கும்.

**உடல் எடை:** உணவருந்துவதற்கு 20 நிமிடங்களுக்கு முன்பு 2 கப் நீர் குடித்து வந்தால் உடல் எடையை குறைக்க முடியும்.

**சருமம்:** நீங்கள் சரியான அளவு தண்ணீர் குடித்து வந்தால், உங்கள் சருமம் மிருதுவாகவும், சுருக்கங்கள் இன்றியும் இருக்கும்.

# அந்த 3 நாட்களை மாத்திரையால் தள்ளிப் போடலாமா?

மாதவிலக்கைத் தள்ளிப் போடக்கூடிய மாத்திரைகள் மார்க்கெட்டில் நிறைய கிடைக்கின்றன. மாதவிலக்கைத் தள்ளிப்போட மாத்திரைகளைப் பயன்படுத்துவது எந்த அளவுக்கு சரி என மருத்துவர் கூறுகிறார் கேளுங்கள்.

மாதவிடாயைத் தள்ளிப்போட நினைப்பவர்கள் மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெறாமல் மாத்திரைகளின் பெயரைச் சொல்லி வாங்கிக் கொள்கிறார்கள். இது உடலைப் பெரிய அளவில் பாதிக்கச் செய்யும். பீரியட்ஸ் வருவதே தெரியாத அளவுக்கு பாதுகாப்பான நாப்கின்ஸ் இப்போது கிடைக்கிறது. அப்படியிருக்க, மாத்திரைகளைப் பயன்படுத்தி மாதவிலக்கை ஏன் தள்ளிப்போட வேண்டும்? இயற்கைக்கு மாறாக நாம் நிகழ்த்தும் எந்தச் செயலுமே தவறானதுதான்.


விசேஷமான நாட்களில் மாதவிலக்கு ஏற்பட்டால், சங்கோஜமாகத்தான் இருக்கும். ஆனால் அதைத் தள்ளிப்போடும் எண்ணத்தில் மாத்திரைகளைச் சாப்பிடும் போது உடலுக்குத் தேவையற்ற சங்கடமாகிவிடும். மாதவிடாய் விஷயத்தில் மட்டும் அல்ல... எதற்காகவும் மாத்திரைகளைப் பயன்படுத்தும்போது மருத்துவர்களின் அறிவுரையை அவசியம் கேட்க வேண்டும்.


மாதவிலக்கு தள்ளிப்போக மாத்திரை போடுபவர்கள், முதலில் கர்ப்பப்பையை ஸ்கான் செய்து கொள்ள வேண்டியது அவசியம். யூட்ரஸின் நிலை, ஏதேனும் பிரச்சனை இருக்கிறதா, வயிற்று வலி, அல்சர், மாதவிடாய் கோளாறு, கர்ப்பப்பை கான்சர் பாதிப்பு என எது வேண்டுமானாலும் நம்மை தாக்கி இருக்கலாம். அதுகுறித்து தெரியாமல் மாத்திரைகளைச் சாப்பிட்டால் அத்தகைய பாதிப்புகள் பன்மடங்காகி, உடலை வருத்திவிடும் வாய்ப்பு இருக்கிறது.

மருத்துவர்களின் அட்வைஸ் இல்லாமல் மாதவிலக்கு மாத்திரைகளை உட்கொள்வதால் உடல் எடை கூடுவது, வயிற்றுப் புரட்டல், வாந்தி, வாய்க்கசப்பு உள்ளிட்ட பல பாதிப்புகள் ஏற்படலாம். சிலருக்கு 'மைக்ரேன்' எனப்படும் ஒற்றைத் தலைவலியும் வர வாய்ப்பு இருக்கிறது.

இப்படி மாத்திரைகளைச் சாப்பிடும் போது மாதவிடாய் சுழற்சியும் மாறுபடும். இதனால் அடுத்த மாதவிடாய் சுழற்சியை உடல் ஏற்றுக் கொள்ளாமல் போகும்போது ரத்தப்போக்கு அதிகரிக்கும். நம் உடம்பின் உஷ்ணமும் அதிகமாகும்.

மாதவிடாய் மாத்திரை, கருத்தடை மாத்திரை அளவுக்கு ஆபத்தை விளைவிக்க கூடியது, இல்லை. ஆனாலும், சிறு பாதிப்புகள்கூட ஏற்படாத அளவுக்கு நம் உடலைப் பாதுகாப்பது அவசியம். பெண்ணின் உடல் பூவுக்குச் சமமானது. மாத்திரைகளின் வீரியம் தெரியாமல், அவற்றைப் பயன்படுத்தும்போது அந்தப் பூ எத்தகைய அவதிக்கு உள்ளாகும் என்பதை உணரவேண்டும்.




முத்தப்பன் தெய்ய வடிவில்

# முத்தப்பனும் தெய்யமும் கள்ளும் கருவாடும்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளினியன் தற்போது இந்தியாவில் பத்திரிகையாளராக பணிபுரிகிறார். கேரளாவின் பல்வேறு பகுதிகளிற்கும் சென்று அவர் எழுதிய தொடரின் பகுதி இது.

அருளினியன்

நான் மங்களூரில் இருந்து கண்ணூருக்கு வந்தது முத்தப்பனைப் பார்க்க முத்தப்பன், சேட்டா இல்லை அவர் கேரளத்தின் புகழ் பெற்ற சிறு தெய்வம். 'பசினிக்கடவு' என்ற இயற்கை அழகு கொட்டிக் கிடக்கும் கிராமத்தில்; 'வலப்பட்டணம்' என்ற நதியோரம் ஜம்மென வீற்றிருக்கிறார் முத்தப்பன்.

முத்தப்பன்; உண்மையில் "தெய்யம்" என்ற கேரளத்தின் இசை வடிவத்துடன் பின்னிப் பிணைந்துள்ள; கேரளத்தின் Folk deity. ஆனால், முத்தப்பனை சிவனின் அவதாரம் என்றும் விஷ்ணுவின் அவதாரம் என்றும் நிறுவ

தலையால் தண்ணி குடிக்கிறார்கள் கேரளத்து நம்பூதிரிகள். எல்லாப் பிராமணர்களைப் போல நம்பூதிரிகளும் சிறுதெய்வ வழிபாட்டை அசூசையுடனே நோக்குகிறார்கள். முத்தப்பன் என்ற வேத விதிகளுக்கும், ஆகம விதிகளுக்கும்; பிராமணியத்துக்கும், ஆர்ய மாயைகளுக்கும் கட்டுப்படாத சிறுதெய்வத்தின் கோவிலுக்கு லட்சக் கணக்கில் மக்கள் படையெடுப்பது; அவர்களை சஞ்சலத்துக்கு உள்ளாக்குகிறது.

முத்தப்பன் கோவிலில் நடைபெறும் பூஜை முறை மகா சுவாரசியமானது. என் வாழ்நாளில் நான் பார்த்த அத்தனை கோவில்களின் வழிபாட்டு முறைகளில் இருந்தும் அது முற்று முழுதாக வேறுபட்டிருக்கிறது.

முத்தப்பனுக்கு கள்ளும் கருவாடும்தான் பிடித்த உணவுகள். முத்தப்பன் வேஷம் அணிந்த ஒருவர் முட்டி நிறையக் கள்ளருந்தி விட்டு கேரளத்தின் பாரம்பரிய 'தெய்யம்' நடனத்தை ஆடுவார். இந்த நடனத்தில் முத்தப்பனின் நண்பனான சண்டனும் இணைந்து கொள்வர். செண்டை மேளம் ஒலிக்க உக்கிரமாக இவர்கள் ஆடும் நடனத்தைப் பார்க்க ஆயிரம் கண் வேண்டும். இங்கே 'தெய்யம்' என்ற பாரம்பரிய இசை நடன வடிவத்தின் வழியே இறைவனை வேண்டுகிறார்கள்.

வடக்கு மலபார் தேசத்தின் பக்திமுறை; கேரளத்தின் மற்றைய இடங்களின் பக்தி முறைகளில் இருந்து வேறுபட்டது. 'தெய்யம்' என்பது வடக்கு மலபாருக்கென்றே பிரத்யேகமான பக்தியின் வடிவமாகும். இங்கெல்லாம் தெய்யம் என்ற இசை நடனக் கலை மூலமாக இறைவனுடன் சம்பாஷிக்கிறார்கள். தெய்வம்" என்பது தான் மருகி "தெய்யம்" ஆனது.

கேரளாவில் வேதாகம முறைப்படி அமைக்கப்படாத கோவில்களில்தான் தெய்யாட்டம் மூலம் இறைவனை வணங்குகிறார்கள்.

கடுமையான விரதங்கள், நோன்புகள் இருந்த பின்புதான் ஒருவரால் தெய்ய அவதாரம் எடுக்க முடியும். தெய்யமாய் மாறுபவர்கள் சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத செயல்களைச் செய்வதைப் பார்த்தேன். கண்ணூரின் காவுகள் ஒன்றில் தெய்யமாடிய ஒருவர் அசால்டாக பெரும் மரக் குற்றி ஒன்றை தலைக்குமேல் சுழற்றி ஆடினார். "இதென்னங்க பெரிசு தீயில் கூட விழுந்து புரண்டு ஆடுவார்கள்" என்றார் என்னுடன் வந்திருந்த கிருஷ்ணன் நாயர். தெய்யம் ஆடுபவர் தான் இறைவன் எனக் கருதப்படுவதால் தெய்யம் ஆடுபவர் உடலில் தெய்வீக சக்தி புகுந்துவிடும் என்றார்கள்.

தெய்யத்தின் நூல் பிடித்துச் சென்றால் அது மூத்தோர் வழிபாட்டில் வந்து நிற்கும். தங்களுக்காக உயிர்துறந்த போர் வீரர்களையும், அவர்கள் உபயோகித்த ஆயுதங்களையும் வணங்கி வழிபடுவது தான் தெய்யத்தின் அடிப்படை. தமிழுக்கு இது புதிதல்ல கோவில்களில் அருள் வந்து 'வெறியாட்டம்' ஆடுபவர்களை நாம் காமெடியாகக் கடந்து போயிருப்போம். ஆனால், இந்த வெறியாட்டத்துக்கு பல ஆயிரமாண்டுகள் வரலாறு உண்டு. வெறியாட்டம் பற்றிய பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. திருமுருகாற்றுப்படையில் வெறியாட்டம் ஆடுபவனை "வேலன்" என்று குறிப்பிடுகிறார் நக்கீரர். 'வேலன் வெறியாட்டல் " பண்டைய தமிழகத்தில் புகழ் பெற்றிருந்தது. தமிழ்நாட்டின் சில பகுதிகளில் இன்னமும் இதை ஆடுகிறார்கள்.

முத்தப்பன் கோவிலில் தெய்யம் வேஷம் போடுபவர்தான் முத்தப்பனாகக் கருதப்படுவார். என்னதான் தெய்யத்தில் தேர்ச்சி பெற்றவராக இருந்தாலும் இறைவனின் கிருபை இல்லாமல் தெய்யம் ஆட முடியாது என்பது மலையாளிகளின் நம்பிக்கை. தெய்யத்தை சேர நாட்டுப் பழந்தமிழர்களின் பாரம்பரிய நடனம் என்று கூறுபவர்களும் உண்டு. பெரும்பாலும் கீழ் ஜாதி இந்துக்களுக்குப் பிரத்யேகமானதாக இந்தத் தெய்யக் கலை இருப்பதை அவதானித்தேன்.

தெய்யத்தின் பிறகு குறி சொல்லல் படலம் நடைபெறும் முத்தப்பன் வேஷம் அணிந்தவரிடம் உண்மையாகவே முத்தப்பன் இறங்கிவிடுவதாக அய்தீகம். அவரும் நன்றாகக் கள் அடித்துவிட்டு நிறை வெறியில் குறி சொல்வார். வரிசையாகப் பெருங் கூட்டமாக மக்கள் வந்து இவரிடம் குறி கேட்பார்கள். என் முறை வந்தபோது என் கைகளைப் பிடித்து ஏதோ சொன்னார். புரியவில்லை.

முத்தப்பன் கோவிலில் முக்கியத்துவம் பெறும் இன்னொன்று நாய்கள். முத்தப்பன் பெரும் வேட்டைக்காரனாக இருந்தார் என்பது வரலாறு என்பதனால் அவருடன் நாய்கள் எப்போதுமே இருக்கும் என்பது அய்தீகம். முத்தப்பன் சன்னதியில் இரு பெரிய நாய்களின் சிலைகள் உண்டு. அதைத் தவிர பக்தர்கள் கூட்டங்களிடையே ஹாயாக பல நாய்கள் வாக்கிங் போவதைப் பார்க்கலாம். பூசையின் போதும் நாய்களுக்கு தனி மரியாதை செலுத்தப்படுவதைப் பார்த்தேன். நாய்களுக்குத் தனிப் படையல் வேறு உண்டு.

பக்தர்களுக்கு தேங்காய் சொட்டுப் பிரசாதம் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு வரைக்கும் கள்ளும் கருவாடும்தான் இக்கோவிலில் பிரசாதமாக வழங்கப் பட்டன.

நம்பூதிரிகளின் ஈகோவில் அடிக்கும் கோவில் இது என்றார் கோவிலில் நான் சந்தித்த பெரியவர் ஒருவர். இங்கே நம்பூதிரிகள் பூசை செய்வதில்லை. எளிய மக்கள்தான் பூசகர்களாக உள்ளனர்.

எனக்கு முத்தப்பன் கோவிலை அவ்வளவு

தொடர்ச்சி அடுத்த பக்கம்...


பரசின்னிப் பாலம்

# வீதிவீதியாக மோதல்.. பொலிஸ் நிலையம் சென்ற மாணவர்கள்

## வவுனியா பாடசாலையின் மோதல் கதை

மில்லர்

இன்றைய கால இளைய தலைமுறைகள் நவீன கலாச்சாரத்தின் பிரதி பிம்பங்கள். இவர்களின் நடத்தைகள், உடை எல்லாமே மாறிவிட்டன. இவர்களின் இந்நிலைக்கு தூபம் போடுவதற்கு ஏதுவாக இன்றைய சினிமாவின் பாணியும் மாறிவிட்டது. அடி, தடி, ரௌடி கலாசாரம், கட்டபஞ்சாயத்து போன்றவற்றை அதிகமாக வைத்து திரைப்படங்கள் உருவாகின்றது. இவற்றைதம்முள்வாங்கிக்கொண்டு அதுபோல் தமது நடத்தையை மாற்றிக்கொள்கின்றனர். அதன் விளைவு பாடசாலைகளிலும் வெளியிடங்களிலும் தமது சக மற்றும் தமது பாடசாலையில் கல்வி கற்கும் ஏனைய மாணவர்களுடனும் அடிதடி போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். தம்மை பார்த்தால் பயப்பட வேண்டும் என்ற எண்ணமே, அவர்களின் நெஞ்சில் வேரூன்றி இருக்கும். இதனை பல மாணவர்கள் தமது பெற்றோரிற்கு தெரியாமலே செய்வதுதான் கவலையான விடயமாகும். இதுபோன்ற ஒரு அடிதடி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த 16.06.2017 அன்று நடந்துள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட மாணவர் தலைவர்களில் ஒருவர் 11ம் வகுப்பிற்கு சென்று சத்தம் போடாமல் ஒழுங்காக இருக்குமாறு பணித்துள்ளார். அதற்கு அம்மாணவர்களில் சிலர் மாணவ தலைவனின் வார்த்தைக்கு கட்டுப்படாமல் முரண்பட்டுள்ளனர். அதன் பின்னர் இவ்விடயம் அறிந்த குறித்த மாணவர் தலைவரின் சக நண்பன் அவ்வகுப்பிற்கு சென்று இது தொடர்பாக அவர்களுடன் முரண்பட்டுள்ளார். அப்போது அதை பார்த்த ஏனைய சில மாணவர்கள் 'இவன் இப்படி பேசிவிட்டு செல்கிறான் உங்களிற்கு ரோசம் இல்லையா' என்று அவர்களிற்கு உசுப்பேத்தியுள்ளனர். அதன் விளைவு அந்த மாணவனை 11ம் வகுப்பு மாணவர்கள் சிலர் நையப்புடைத்துள்ளனர்.

இதன் பின்னர் மறுநாள் காலை பாடசாலை ஒன்று கூடலில் தாக்கப்பட்ட உயர்தர மாணவன் தனது நண்பர்களுடன் இணைந்து 11ம் வகுப்பு மாணவர்கள் சிலரை தாக்கியுள்ளான். அத்துடன் இதன் தொடர்ச்சியாக பாடசாலைக்குள் இருந்த பிரச்சனை பாடசாலைக்கு வெளியே ஆரம்பமாகியது. குறிப்பாக வைரவபுளியங்குள வீதிகளிலும் இச்சண்டை தொடரத்தொடங்கியது.

இதில் தாக்குதலுக்கு உள்ளான 11ம் தர மாணவர்கள் இருவர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதனால் உயர்தர மாணவர்கள் கைது செய்யப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்நிலையில் உயர்தர மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுடன் கலந்துரையாடி சமாதானமாகி இவ்விடயம் பெரிய விடயமாகாமல் தடுக்கப்பட்டது.

இதன் பின்னர் பெற்றோர்களுடனான கலந்துரையாடலினை அப் பாடசாலையின் அதிபரினால் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கலந்து கொண்ட பெற்றோர்களில் பெரும்பாலானவர்களினால் பிரச்சனைக்குரிய சில மாணவர்களை பாடசாலையில் இருந்து நிறுத்த வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர். இதே கருத்தையே பழைய மாணவர்களில் சிலரும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இருந்த போதும் அதிபரினால் இக்கூற்று முற்றாக நிராகரிக்கப்பட்டது.

அத்துடன் இதற்கான தீர்வாக தற்போது உயர்தர மாணவர்களிற்கான இடைவேளை மற்றும் 11ம் தர மாணவர்களிற்கான இடைவேளை வேறுவேறாக மாற்றப்பட்டுள்ளதுடன், மாணவர்கள் அதிகம் கூடும் வைரவபுளியங்குள வீதிகளில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளதாலும் தற்போது பிரச்சனைகளை தற்காலிகமாக முடிவுக்கு கொண்டுவர முடிந்துள்ளது. அத்துடன் பாடசாலை அதிபரின் சரியான சில முடிவுகள் குறிப்பிட்ட சில மாணவர்களின் எதிர்காலத்தை சூன்யமாக்காமல் தடுத்துள்ளது என்பது முக்கியமானது. ஏனெனில் தவறு செய்த மாணவர்களை பாடசாலையில் இருந்து இடைவிலக்கும் போது அம்மாணவனின் எதிர்காலம் சூன்யமாவதுடன் அம்மாணவன் ஒரு தவறான பாதையை தெரிவு செய்ய கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கும் என்பதே உண்மை. இருந்தாலும் தவறு செய்த மாணவர்களிற்கு ஒரு சரியான தண்டனை வழங்காது விடுவது ஏற்புடைய விடயம் இல்லை. இவ்வாறு விடுவதனால் ஏனைய மாணவர்களும் தவறு செய்ய தூண்டுதலாக மாறலாம்.

அத்துடன் இப்பிரச்சனை மீண்டும் தொடர்வதற்கான சாத்தியங்களே அதிகமாக உள்ளது. ஏனெனில் சிறிய முரண்பாடு ஒன்றே தற்போது பாரதூரமாக மாறியுள்ளது என்றே பலரும் எண்ணுகின்றனர் என்றாலும் நடந்து முடிந்த அனைத்து பிரச்சனைகளும் முன்பு இருந்த வேறு பிரச்சனைகளும் இதன் போது தீர்க்க முயற்சித்தமையை யாரும் கவனிக்கவில்லை. இதன் விளைவு எதிர்காலத்தில் இது மாபெரும் விளைவினை ஏற்படுத்தலாம். ஏனெனில் இதுபோன்ற சாதாரன பிரச்சனை ஒன்றுதான் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கத்தி, வாட்களுடன் மாணவர்கள் செல்வதற்கு ஏதுவாக இருந்தது.

குறிப்பாக தமது பிள்ளைகள் வீட்டில் தமக்கு நல்ல பிள்ளையாக இருப்பதை போலத்தான் வெளியிலும் இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தில் இருக்கும் பெற்றோர் இவர்களின் இச்செயற்பாடுகளை பற்றி யாரும் கூறும் போது என் பிள்ளை குழந்தை இப்படி செய்ய மாட்டான் என சண்டை பிடிக்கும் அளவிற்கு உள்ளனர். இதனை தாண்டி தனது பிள்ளைகளுறுபின் உண்மை நிலைமையை அறிந்து கண்ணீர் வடிக்கும் பெற்றோர்கள் மிகமிக அரிதே. தமது பிள்ளைகளை வழிப்படுத்தும் முக்கிய பொறுப்பு பெற்றோருக்கே. இதனை தாண்டி அடுத்த பொறுப்பில் உள்ளவர் ஆசிரியர்கள். ஆனால் ஆசிரியர்களும் ஒரு அளவிற்குள்ளாகவே இதை செய்ய முடியும். அந்த அளவை தாண்ட சட்டத்தில் இடம் இல்லை. சிறுவர் பாதுகாப்பு உரிமை என பல கேள்விகள். இதை தமக்கு சாதகமாக பிள்ளைகள் பயன்படுத்துவதால் தவறு செய்யும் பிள்ளைகளிற்கு சாதகமாக மாறிவிட்டது.

எனவே பெற்றோரும், ஆசிரியர்களும் இணைந்து செயற்படுவதுடன், பெற்றோர் தமது பிள்ளைகள் வீட்டை தாண்டி தம் பிள்ளைகள் என்ன செய்கின்றனர் என்பதை சரியாக கவனிக்க வேண்டும். ஆத்துடன் பிள்ளைகளின் தவறான செயற்பாடுகளை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். இதனை தவறும் பட்சத்தில் எதிர்கால இளைய தலைமுறை ஒரு கேள்விக்குறியானவர்களாகவே மாறுவர்




---

பிடித்துப்போனது. அதற்கு;வலப்பட்டணம் நதியோ இல்லை கள்ளும் கருவாடுமோ இல்லை கோவிலுக்கருகிலுள்ள அழகு சொரியும் பரசின்னிப் பாலமோ காரணம் இல்லை. ஒரு சிறு தெய்வத்தின் கோவில் இந்தியா முழுவதும் இருந்து, லட்சக்கணக்காண பக்தர்களை கவர்ந்து இழுக்கிறது என்பதுதான் அந்தக் காரணம்.

சிறு தெய்வ வழிபாட்டிலேயே இந்து மதத்தின் ஆத்மா மறைந்துள்ளது, எனத் தீவிரமாக நம்புபவன் நான். இந்து மதத்தின் சிறப்பே அது யாரையும் கட்டுப் படுத்துவதில்லை. 'இதைச் செய்'... 'அதைச் செய்' என ஆக்கினை கொடுப்பதில்லை. பிடித்திருந்தால் வணங்கு பிடிக்கா விட்டால் வணங்காதே இதுதான் இந்து மதத்தின் அடிப்படை. இறைவன் என்ற சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூட இந்து சமயத்தில் அங்கம் வகிக்கலாம். பிராமணக் கலப்பில்லாத சிறு தெய்வ வழிபாடுகள்தான் இந்து மதத்தை மிகச் சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

பெங்களூரில் நான் வசித்த கிராமமும் நகரமும் கலந்த கலவையான இடத்தில் வருஷத்துக்கு ஒரு தடவை ஊர் கூடி "முன்னேஸ்வர"னுக்கு விழா செய்வார்கள். ஒரு வாரம் ஊரே விழாக் கோலம் பூணும். மிலிட்ரி சரக்கு, 8 பி.எம், ராயல் சேலஞ்சர்ஸ், ஹெர்குலஸ் விஸ்கி, பெரும் கருட்டுகள், ஆட்டிறைச்சி எனப் படையல் அமோகமாக இருக்கும். விழா நடக்கும் நாட்களில் தினம் தோறும் ஆடு வெட்டுவார்கள். கிராமத்துக்கே முனியப்பனின் பெயரால் படையல் நடக்கும். பேச்சிலராக நாம் எடுத்து இருந்த எங்களுக்கு, ஆட்டிறைச்சியுடன், சில கோழிக் கால்களையும் ஸ்பெஷலாகத் தருவார் நம் ஓனர் மஞ்சு அண்ண.

சாராயத்தை இறைவனுக்குப் படையல் என்ற பெயரில் லைட்டாகத் தெளித்து விட்டு பிறகு ஆரம்பிக்கும் தீர்த்தப் பார்ட்டி இரவு 9 மணிக்கு, 'மிலிட்ரியில் ஆரம்பிக்கும் திருவிழா அடுத்த நாள் காலை 9 மணிக்கு வி.எஸ்.ஓ.பி யில் முடியும். கொத்து மீசையுடன் கம்பீரமாக முன்னேஸ்வரனுக்குப் பூசை செய்யும் பூசாரி நிறை வெறியில் எங்களைக் கட்டிப் பிடித்துக் கமலா அக்காவை கரெக்ட் செய்த கதையைச் சொல்வார்.

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள தனது கிராமத்தின் ஊர் திருவிழாவுக்கு கடந்த வருடம் அழைத்துச் சென்றான் நண்பனொருவன்.

சிறு மலைகள் சூழ்ந்த குக்கிராமம் அது. கிராமத்தின் ஒதுக்குப் புறமான இடத்திலே சில நடுகல்கள் உள்ளன. அந்த நடுகல்களை மையமாக வைத்து திருவிழா காலத்தில் மட்டும் ராட்சத உருவங்களை நிலத்தில் வரைவார்கள். இந்தியாவின் எந்த மூலையில் இருந்தாலும் அந்த ஊரில் பிறந்தவர்களாக இருந்தால் திருவிழாவிற்கு கரெக்டாக வந்து விடுவார்கள். ஆடு வெட்டிப் படையல் போட்டு, சண்டை சச்சரவுகளைப் பேசித் தீர்த்துக் கொள்வார்கள். தீராப் பகைகள் எல்லாம்; படையல் சோற்றிலும் ஒரு போத்தல் சாராயத்திலும் முடிந்துபோவதைப் பார்த்தேன்.

இயற்கை வழிபாடுதான் உலகின் மிகத் தொன்மையான வழிபாட்டு முறையாகும். இயற்கை வழிபாட்டுக்கு அடுத்த மிகத் தொன்மையான வழிபாட்டு முறை சிறுதெய்வ வழிபாடாகும். இந்து மதத்தின் அடிப்படை இந்த சிறுதெய்வ வழிபாட்டில்தான் உள்ளது. இன்று இந்து மதத்தில் புழக்கத்தில் உள்ள பெருந்தெய்வங்கள் எல்லாவற்றையும் விட பல ஆயிரமாண்டுகள் பழமையானவை இந்த சிறு தெய்வ வழிபாடுகள்.

இந்தியாவின் பக்தி மட்டுமல்ல இந்தியாவின் ஆத்மாகூட இப்படியான சிறுதெய்வக் கோவில்களில்தான் ஒளிந்துள்ளன. இந்து சமயம் வாழ்க்கையை வாழச் சொல்கிறது. சிறுதெய்வ வழிபாடுகள் ஒரு படிமேலே போய் வாழ்க்கையை கொண்டாட்டமாக வாழச் சொல்கின்றன. அந்த வகையில், இந்து மதத்தை; அவைதான் மிகச் சரியான முறையில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

கண்ணூர் வந்தால் மறக்காமல் முத்தப்பன் என்ற எங்களின் மூத்தோனை ஒரு தடவை பார்த்துச் செல்லுங்கள்.

# உட்கார வைக்கப்பட்ட அமைச்சர்கள்!

அன்ரனி பாலசிங்கம்

வெற்றிடமாகஇருந்தஇரண்டுஅமைச்சு கதிரைகளிலும் ஆட்களை உட்கார வைத்துவிட்டார் முதல்வர் விக்னேஸ்வரன். அமைச்சு பதவி வெற்றிடங்களை நிரப்புவது வேறு, ஆட்களை உட்கார வைப்பது வேறு. இப்பொழுது நடந்திருப்பது இரண்டாவது ரகம்.

ஒரு அமைச்சை நடத்தக்கூடிய தகுதியுடையவர்... பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்களை கட்டுக்குள் வைத்திருக்கும் ஆளுமையை கொண்டவர்ஞ் நிர்வாக தகுதியுடன் அரசியல் முதிர்ச்சியுமிருந்தால் கூடுதல் பிளஸ் என பல விடயங்களை கணக்கிட்டுத்தான் ஒருவருக்கு அமைச்சு பதவி கொடுக்கலாம். அப்படியென்றால்தான் அந்த அமைச்சு பதவியை சிறப்பாக நடத்தலாம். ஆனால் முதல்வர் இந்த இடத்தில் சறுக்கிவிட்டார். முதல்வர் இந்த இடத்தில் கணக்கிட்டது, அமைச்சர்களின் விசுவாசத்தை.

அமைச்சு பதவியை விட்டுதாருங்கள் என தான் கேட்கும் சமயத்தில் விட்டுத் தருவார்கள் என்று கருதிய இரண்டு பேருக்கு அமைச்சு பதவியை கொடுத்திருக்கிறார். அவ்வளவுதான். மற்றும்படி வேறெந்த தகுதியையும் முதல்வர் கவனித்ததாக தெரியவில்லை. இது மாகாண நிர்வாகத்தை எப்படி நகர்த்திச் செல்லும் என்பதுதான் கேள்வி.


புதிய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்ட உடனேயே செயற்பட முடியாது. அமைச்சின் நிர்வாக அலகுகள், அதன் இயங்குமுறை, சட்டதிட்டங்கள், அமைச்சை இயக்கும் பட்டறிவு என்பவற்றை பெற்றுக்கொள்ள காலஅவகாசம் தேவை. குறைந்தது ஆறுமாதங்களின் பின்னர்தான் மெல்லமெல்ல ஆரம்பிக்கலாம்.


தற்போதைய மாகாணசபையின் ஆயுள் காலம் இன்னும் ஒரு வருடம்தான். இன்னும் ஒரு வருடம் இருக்கும் ஆயுள்காலத்தில் அமைச்சரவை இன்னுமொருமுறை மாற்றப்படவும் வாய்ப்புண்டு. இந்த நோக்கத்திற்காகத்தான், தற்போதைய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அப்படி பார்த்தால், தற்போதைய அமைச்சர்களும், புதிதாக அமைச்சராகப் போகின்றவர்களும் சிறப்பாக செயலாற்ற முடியாமல் போகும் வாய்ப்பே அதிகம். இந்த மாகாணசபையால் எதையும் செய்ய முடியாமல் இருக்கிறதென்ற விமர்சனங்கள் ஏற்கனவே பலமாக உள்ள நிலையில், இந்த அமைச்சர்கள் நியமனகுளறுபடி, இன்னும் விமர்சனத்தை அதிகமாக்கப் போகிறது.

பதவிவிலகிய அமைச்சர்கள் ஐங்கரநேசனும், குருகுலராஜாவும் முதலமைச்சருக்கு நெருக்கமானவர்கள். குறிப்பாக ஐங்கரநேசன் அதிகம் நெருக்கமானவர். முதலமைச்சர் விசாரணைக்குழுவை அமைத்ததன் நோக்கமே சுகாதார அமைச்சரை இலக்கு வைத்துத்தான். சுகாதார அமைச்சர் அரசியல்ரீதியாக தனக்கு சவால் விடுகிறார் என்று முதல்வர் உணர்ந்ததால்தான் அப்படியொரு முடிவிற்கு சென்றார். சத்தியலிங்கத்தை அகற்ற வேண்மென்ற விடாப்பிடியை கைவிடுங்கள், இருக்கும் குறுகிய காலத்தை சச்சரவில்லாமல் முடித்துக்கொள்ளலாம் என முதல்வரிற்கு நெருக்கமானவர்கள் ஆலோசனை சொல்லியுமுள்ளனர். என்றாலும், முதல்வர் இதில் விடாப்பிடியாக நிற்கிறார். தனது விடாப்பிடி, தனக்கு நெருக்கமானவர்களின் தலையை உருட்டியதென்ற குற்றவுணர்வு முதல்வரிற்கு இருக்கலாம். அதனால்தான் இப்பொழுது அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையை மீளாய்வு செய்யவுள்ளதாக கூறுகிறார். அடுத்த மூன்று மாதங்களிற்குள் அதை முடிப்பதாக, தனது ஆதரவு உறுப்பினர்களிடம் முதல்வர் கூறியுள்ளார்.

மீளாய்வில் தேறுபவர்/கள் மீண்டும் அமைச்சராவார். அதேபோல, மற்றைய அமைச்சர்கள் மீதான விசாரணையில் குற்றம்சாட்டப்படுபவர்கள் பதவி விலக வேண்டிவரும். புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள். எப்படியோ அடுத்த சில மாதங்களில் மீண்டும் ஒரு குழப்பம் ஏற்படவே வாய்ப்புண்டு.

தற்போதைய அமைச்சர்கள் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டவர்கள்தான். சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த தேர்தல் சமயத்திலேயே தனது சகோதரனிற்கு அமைச்சர் பதவிக்காக காய்களை நகர்த்தியவர். தற்போது முதல்வரிற்கு ஆதரவாக தீவிர போராட்டங்களில் ஈடுபட்டதன் பிரதிபலனாககூட அது இருக்கலாம். இப்படி சந்தேகிக்க வலுவான இன்னொரு காரணமும் உள்ளது.





புதிய தலைமைத்துவம் பற்றி சுரேஷ் பிரேமச்சந்திரன் பேச ஆரம்பித்து பல காலமாகிவிட்டது. உள்ளூரில் ரியூசன் வாத்திமார் சிலர், தமிழரசுக்கட்சியில் அதிருப்தியுடன் விளிம்புநிலை உறுப்பினர்களாக தொடர்பவர்கள் என ஒரு சிலரை கூட்டி, புதிய தலைமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றைக்கூட பல மாதங்களின் முன்னர் நடத்தியவர்.

தமிழரசுக்கட்சிக்கு நெருக்கடி கொடுக்கும் அரசியல் ஒன்றை மட்டுமே அண்மையில் செய்து வருகிறார். தன்னை அரங்கிலிருந்து அகற்றிய தமிழரசுக்கட்சியை வீழ்த்துவதற்கு இயன்ற அத்தனையையும் செய்து பார்த்துக் கொண்டிருக்கிறார். தமிழரசுக்கட்சியை வீழ்த்த அல்லது நெருக்கடிக்குள்ளாக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், அதை முதலில் பயன்படுத்திக்கொள்பவர்களில் ஒருவராக சுரேசும் இருப்பார்.

ஆனால், வடமாகாண சர்ச்சையில் அந்த வாய்ப்பை அவர் கையிலெடுக்கவில்லை. மற்றைய பங்காளிக்கட்சிகளின் தலைவர்களைபோல அவர் சமரச முயற்சிகளில் ஈடுபடாவிட்டாலும், இறுதி சந்தர்ப்பத்தில் மற்றைய தலைவர்களுடன் ஒன்றாக சென்று, கூட்டமைப்பின் ஒற்றுமையை முதல்வரிடம் வலியுறுத்தியிருந்தார். தமிழரசுக்கட்சிக்கு எதிராக கம்பு சுற்றுகிறேன் என மாகாண சபையை கவிழ்க்கும் நிலைக்கு இட்டுச் செல்லக்கூடாது, முதல்வர் பதவியில் நீடித்து, இரண்டு அமைச்சர்கள் பதவிவிலகினால் சர்வேஸ்வரனிற்கு அமைச்சர் வாய்ப்பு கிட்டலாம் என அவர் கருதியிருக்கவும் வாய்ப்புண்டு. ஏனெனில், அடுத்த மாகாணசபை தேர்தலில் இப்படியான வாய்ப்பு கிட்டாமலும் போகலாம்.

இதேவேளை, கல்வியமைச்சை வழிநடத்த சர்வேஸ்வரன் பொருத்தமானவரா என்ற கேள்வியும் உள்ளது. கடந்த நான்காண்டு மாகாணசபை அரசியலில் அவர் அப்படியான ஆளுமையை வெளிக்காட்டியவர் அல்ல.

அனந்தியின் நிலைமையும் இதுதான். தமிழ் சூழலில் அனந்தி காணாமல் போனவர்களிற்காக போராடும் ஒருவராகத்தான் அறிமுகமானார். காணாமல் போனவர்களிற்காகபோராடும் அடையாளமாக அவர் நான்கு வருடங்களின் முன்னர் இருந்தார். இன்று அப்படியல்ல. காணாமல் போனவர்களிற்காக போராடுபவர்கள் அனந்தியை கடந்து வெகுதூரம் சென்றுவிட்டனர். காணாமல் போனவர்களின் உறவினர்கள் பல அமைப்புக்களை உருவாக்கி வைத்துள்ளனர். அனந்தியும் ஒன்றை உருவாக்கி வைத்துள்ளார்.

காணாமல்போன, யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவுகளிற்கு உதவுவதற்கு கணிசமான புலம்பெயர்ந்தவர்கள் தயாராக இருக்கிறார்கள். இந்தவகையானவர்கள் பெரும்பாலும் அதிதீவிர தேசிய உணர்வுள்ளவர்கள். அனந்தி போன்றவர்களை வெகுவாக ஆதரிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களிற்கும் தாயகத்தில் பாதிக்கப்பட்டவர்களிற்குமிடையில் பாலமாக செயற்பட அனந்தியால் முடியவில்லை. அனந்தியின் ஆளுமையை கணக்கிட இது மேலோட்டமான உதாரணமாக இவை இருக்கும்.


அதீதமாக உணர்ச்சிவப்படும், தீர்க்கமான அரசியல் பார்வைகள் அற்ற வெகு சாதாரண தமிழ் பெண்மணியாகத்தான் அனந்தி இருக்கிறார். அதனால் கிடைக்கும் குறுகிய அவகாசத்தில் அவரால் மாற்றங்களை உருவாக்க முடியுமென நினைக்க முடியாது. பெண், யுத்த இழப்புக்களை சந்தித்த ஒருவர் அமைச்சராகினார் என்ற திருப்தி மட்டுமே எஞ்சலாம்.


அமைச்சர்கள் நியமனத்தில் முதல்வர் வென்றாரா, தமிழரசுக்கட்சி அடுத்து என்ன செய்யும் என்ற விடுப்பு பேசிக் கொண்டிருந்தால் சுவாரஸ்யமாகத்தான் இருக்கும். ஆனால், நமது நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி அபிவிருத்திகளை செய்ய கிடைத்த சந்தர்ப்பத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை.


தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 722 6247
கிளைக் காரியாலயங்கள்
வேலனை, வங்களாவடிச் சந்தி
021 221 5472
மல்லாகம். கே.கே.எஸ் வீதி
021 224 3393
சங்கானை, ஓடக்கரை வீதி
021 225 1664
சசிகா
லேணர்ஸ்
சசிகா லேணர்ஸ் தனது
மற்றும் ஒரு கிளையை
யாழ் நகரில் திறந்துள்ளது.
இல. 821C
மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி
021 222 8004


லதா வண்ணச்சோலை
புடவைகள் மற்றும் அழகு சாதனப்பொருன்களை
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
முல்லை வீதி, பரந்தன்
தொலைபேசி 077 034 4254


KTT travels
கொழும்பு - யாழ்ப்பாணம்
இளவாலை இருந்து
பண்டத்தரிப்பு ஊடக
மானிப்பாய் வீதி ஊடக
யாழ்ப்பாணம்
உங்கள் முற்பதிவுக்கு
எங்களை அழையுங்கள்
யாழ்ப்பாணம் : 077 44 80 216
கொழும்பு : 077 54 84 963
முறைப்பாடு : 077 40 19 227
65 uduvil Road manipay.


(available
lunch time )
price 250
ADSHAYA BOMBAI SWEETS
No. 347 kasthuriyar Road,
Jaffna.
(near uthayan paper)
S.I. Suresh
Tel: 077 175 1495


தினமும் விசேட
விலைக்கழிவுடன்
உங்களை அன்புடன்
வரவேற்கின்றது.
Sri murugan
family Complex
No 963, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு யாழ்ப்பாணம்
0212229035

# Sivakami Wedding Hall
## சிவகாமி மஹால்

எமது சிவகாமி மஹால் மண்டபத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். சிறப்பான சேவையை பெற்றுக்கொள்ள எம்மை நாடவும்.

மிகச்சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம், உணவு வகைகள், சொகுசு ஒழுங்கு படுத்தல்கள், நட்பறவான ஊழியர்களுடன் எமது சேவையை யாழ் மண்ணில் ஆரம்பித்திருக்கின்றோம். உங்களின் மங்கலகரமான நிகழ்வுகளை எம்முடன் இணைந்து மேலும் சிறப்பாக அமைத்துக் கொள்ளுங்கள்.







**எமது வசதிகள்**

நவீன வசதியுடன் கூடிய குளிரூட்டப்பட்ட மற்றும் குளிரூட்டப்படாத மண்டப வசதிகள், தேவைக்கேற்ப மண்டப, மணவறை அலங்காரங்கள்.

**உணவு விபரங்கள்**

உங்களின் தேவைக்கேற்ப உணவு விபரங்களை தெரிவு செய்ய முடியும். குளிர்பானங்கள், லட்டு, ஐஸ்கிறீம், பீடா போன்றவற்றையும் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளலாம்.


எமது மண்டபம் ஆடியபாதம் வீதியில் திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ளது.





Adiyapatham Road Thirunvelly
Jaffna
phone: 0212052288 0779326147




# Nathan
## key cutting center

அனைத்து வகையான திறப்புகளை
10 நிமிடத்தில் மிசின் மூலம்
வெட்டி கொடுக்கப்படும்

இல 63, முட்டாஸ்கடைச் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 0776175609





இப்போது கரவெட்டி சாமியன் அரசடியில் சகல வசதிகளுடன் புதுப்பொழிவுடன்





# தேவா மணி மண்டபம்

திருமண விழா பூப்புனித நீராட்டுவிழா பிறந்த தின விழா மற்றும்
மங்களகரமான நிகழ்விற்க்கும் சைவ சைவ உணவுகளுடன்
ஆனந்தமாக கொண்டாடிட நீங்கள் நாட் வேண்டிய ஒரே மண்டபம்.





தேவா மணி மண்டபம், சாமியன் அரசடி, கரவெட்டி தொலைபேசி: 0775756402, 0779598854

விளம்பரத் தொடர்புகளுக்கு 076 825 5567, 077 152 1586


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 25.06.2017 அன்று வெளியிடப்பட்டது.